Not for sale

ஜனவரி - பிப்ரவரி 2012

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom



## புதிய துவக்கங்கள்

புதிய துவக்கங்கள் • மீண்டும் துவங்குதல் • உங்கள் வழிகளை சிந்தியுங்கள்

இதோ இந்த மனுஷன் • அறுவடை • யோசேப்பின் வாழ்க்கையில் உள்ள பாடங்கள்

தேவனுடைய ராஜ்யம்



# ஆதியிலே

ஆவிக்குரிய ரீதியில் நம்முடைய எதிர் நோக்குகள் மிகத் தொலைவில் இருக்கும் பட்சத்தில், இதுவரைக்கும் வாழ்ந்ததைக் காட்டிலும் மேலான ஒரு கிறிஸ்தவ வாழ்க்கையை வாழக்கூடிய புத்துணர்வு கொடுக்கக்கூடிய, ஒரு புதிய நாளின் காலையைப் போல ஒரு புதிய வருடமும் இருக்கிறது. ஆவிக்குரிய வாழ்க்கையின் கடந்த காலத்து தடுமாற்றங்களை, அகற்றிவிட்டு, புதிய விருப்பங்களை துவங்குவதற்கு புதிய வாய்ப்புகள் திறக்கப்படுகிறது.

ஒன்றுக்கு மேல் ஒன்றாக வளர்ச்சிக்குரிய வெவ்வேறு புதிய துவக்கங்களைத் தேவனுடைய திட்டங்கள் கொண்டிருக்கிறது. அதில் இருளின் காரியங்களினால் இனி ஒருபோதும் கறைப்படாததும், முடிவில்லா யுகங்களில் நன்மைகளும், பரிசுத்தமும் அதிக அதிகமாக பெருகும். தீமையின் மத்தியில் நன்மைகளுக்குரிய தேவையை உணர்ந்துகொள்வதற்கு இந்த இருள் உதவியாக இருக்கிறது. ஆனால் இக்காரியங்கள் முழுமை பெற்றபின் தேவனுடைய மதிப்பும், அவருடைய கோட்பாடுகளும், அவருடைய நன்மையான திட்டங்களும் காலையில் பிரகாசிக்கும் சூரியனைப்போல மிகத் தெளிவாக அனைவருக்கும் வெளிப்படுத்தப்படும்.

"புதிய துவக்கங்கள்" என்ற நம்முடைய முதல் கட்டுரை யுகங்களை பற்றிய திட்டங்களில் உள்ள புதிய நிலைகளை , விதவிதமான கோணங்களில் மேலோட்டமாக கண்ணோக்குகிறது. "மீண்டும் துவங்குதல்" என்ற தலைப்பில் காணப்படும் இரண்டாவது கட்டுரை, முதல் கட்டுரையைப் போல் இருந்தாலும், ஆர்வமூட்டும் சில குறிப்பான காரியங்களைச் சுருக்கமாக எடுத்துரைக்கிறது. பாபிலோனிலிருந்து வெளியே வந்த இஸ்ரயேல் ஜனங்கள் மீண்டும் தேவனுடைய ஆலயத்தைக் கட்டுவதற்கான ஒரு குறிப்பான துவக்கத்தை பற்றி "உங்கள் வழிகளை சிந்தியுங்கள்" என்ற கட்டுரை வெளிப்படுத்துகிறது. நாம் நம்முடைய இக்காலத்து பூமிக்குரிய கடமைகளுக்காக ஆவிக்குரிய கடமைகளையும், பொறுப்புகளையும், தட்டிவிட கூடாது என்ற முக்கிய பாடங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இயேசு கிறிஸ்துவின் வருகை, முழு மனுக்குலத்திற்கும் வெளிச்சத்தையும் நம்பிக்கையையும் கொண்ட ஒரு புதிய துவக்கத்தை கொண்டு வந்தது. ஆயினும், இயேசுவின் மதிப்பும், அவருடைய போதகங்களும், அவருடைய விலையேறப் பெற்ற பலியும் அக்காலத்தில் சற்று குறைவாக மதிப்பிடப்பட்டது. "இதோ இந்த மனுஷன்" என்ற கட்டுரை இக்காரியங்களை வெளிப்படுத்துகிறது.

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில், இரண்டாயிரம் வருடங்கள் கொண்ட சுவிசேஷ யுகத்தின் முடிவில் உள்ள அறுவடை துவங்கப்பட்டது. கடந்த காலத்திலும், நிகழ்காலத்திலும், வரக்கூடிய காலத்திலும் நடைபெற்று கொண்டிருக்கும் அறுவடை வேலைகளை "அறுவடை" என்ற கட்டுரை கண்ணோக்குகிறது.

"யோசேப்பின் வாழ்க்கையில் உள்ள பாடங்கள்" என்ற கட்டுரை புது சிருஷ்டியின் மூத்த அங்கத்தினருடைய இருதயப் பூர்வமான ஆலோசனையாக இருக்கிறது. கிறிஸ்து இயேசுவுக்குள் உண்டான தேவனுடைய பரம அழைப்பில் (பிலி 3:14) இக்காலத்தில், இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களுக்கான ஆயத்த வேலைகளைச் செய்வதற்கு நம்மை இவர் துரிதப்படுத்துகிறார்.

நாம் அனைவரும் இந்நாள் வரைக்கும், விசுவாசத்தோடு ஜெபித்து கொண்டிருந்த "தேவனுடைய இராஜ யத்தின்" அற்புதமான ஒரு புதிய துவக்கத்தை இந்தக் கட்டுரை கண்ணோக்குகிறது. "இந்தப் பூமியில் உள்ள முழு குடும்பங்களும் ஆசீர்வதிக்கப்படும்" நிகழ்வுகளுக்குரிய நம்பிக்கையை விதவிதமாக வெளிப்படுத்துகிறது.

கோடான கோடி மனுக்குலம் நித்திய ஜீவனைப் பெறுவதற்கான தேவனுடைய திட்டத்தில், தேவனுடைய முழு கிருபையால் ஆங்காங்கே குறியீடுகளை போல உள்ள புதிய துவக்கங்களை புரிந்து கொள்வதற்கு இந்தப் பிரதி வாசகர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகிறோம்.

## ஜனவரி- பிப்ரவரி 2012


**ஆதியிலே** (புதிய துவக்கங்கள்) . . . 1

**புதிய துவக்கங்கள்** . . . . . 2

தேவனுடைய திட்டத்தில் உள்ள முக்கியமான புதிய துவக்கங்கள்.

**மீண்டும் துவங்குதல்** . . . . . . . 7

ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டிருக்கும் ஜோடி ஜோடியான புதிய துவக்கங்கள்

**உங்கள் வழிகளைசிந்தியுங்கள்.** . . . . . . . 10

இஸ்ரயேலருக்கு ஆகாய் தீர்க்கதரிசியின் அறிவுரைகளும், நமக்குண்டான பாடங்களும்

**இதோ, இந்த மனுஷன்** 15

இரட்சிப்பு, மனுக்குலத்திற்கு ஒரு புதிய துவக்கம்

**அறுவடை.** . . . . 20

கடந்த வேலைகள், இக்காலத்து வாய்ப்புகள், வருங்காலத்து எதிர்பார்ப்புகள்

**யோசேப்பின் வாழ்க்கையில உள்ள பாடங்கள்** . . . . 25

சபை நிறைவேறுதலை குறித்த தெளிவான ஆலோசனை

**தேவனுடைய இராஜ்யம்** . . . . 28

தேவனுடைய திட்டத்தைப் பொருள்படுத்தும் ஒரு விலையேறப் பெற்ற சத்தியம்

**தீர்க்கதரிசனத்தில் இன்று** . . .



முன்னேற்றமான வளர்ச்சிகள்

# புதிய துவக்கங்கள்

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்."(ஆதியாகமம் 1:1 )

**Robert Wilson**

"ஆதியிலே" என்ற பிரபலமான வார்த்தையோடு ஆதியாகமம் துவங்குகிறது. இது சொல்லர்த்தமான சிருஷ்டிப்பின் துவக்கத்தைக் குறிப்பிடுகிறது. ஆயினும், அதற்கு முன்பாக லோகாஸாக இருந்த இயேசுவை ஆதியாக கொண்டு மற்ற பரலோக சேனைகளும் சிருஷ்டிக்கப்பட்டது. (யோபு 38:4,7)இந்தக் கோணத்தில் ஆதி 1:1 வசனங்கள் அடுத்து வந்த புதிய துவக்கத்தை குறிப்பிட்டது.

"பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது; ஆழத்தின்மேல் இருள் இருந்தது; தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார்." (ஆதி 1:2) இந்தப்பூமி நீண்ட காலமாய் இருந்தது. இப்பொழுது தேவன் அவருடைய கவனத்தை திருப்பி, இந்தப் பூமியை குடியிருப்புக்காக ஆயத்தம் பண்ணும் ஒரு புதிய துவக்கத்தைத் துவங்கினார். இதில் இயந்திரமான சிந்தைகளைக் கொண்ட சிருஷ்டிப்புகள் சிருஷ்டிக்கப்படாமல், மனித குடும்பத்தின் ஒவ்வொரு நபரும் தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட இரண்டு நபர்களிடம் இருந்து உருவாக்கப்பட்டு அவரவர்கள் தனித்தனி சிந்தையைப் பெற்றிருந்தார்கள். "தேவன் அன்பாகவே இருக்கிறார்" என்பதின் அடிப்படையில் ஒவ்வொருவரும் தேவனை போல இருப்பார்கள்.

சூரியனை சுற்றிக் கொண்டிருந்த இருளான கோளுக்கு உண்மையில் இது ஒரு புதிய துவக்கமாய் இருந்தது. மனுஷனுக்கு இது எவ்வளவு அற்புதமான வீடாய் மாறியது. சிருஷ்டிப்பின் ஆறாம் நாளின் முடிவில் -"அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது;"(ஆதி 1:31) என்று தேவன் சொன்னார். அதற்குப் பின் பலுகி பெருகி பூமியை நிரப்பும்படி இந்தப் பூமி மனுஷனுக்கு கையளிக்கப்பட்டது. இதுவும் ஒரு புதிய துவக்கமாய் இருந்தது. மனித குடும்பத்திற்கு ஒரு புதிய துவக்கம்.

**கிருபையிலிருந்து விழுதல்**

ஆதியாகமம் 4-ம் அதிகாரத்தில் மற்றொரு துவக்கம் காணப்படுகிறது. தேவனுக்கு கீழ்ப்படியாமல் போன ஆதாமின் தவறுகளுக்குப் பின், இந்தப் புதிய துவக்கம் துவங்கியது. ஆதாமும், ஏவாளும் தம்முடைய அருமையான வீடாகிய ஏதேனிலிருந்து துரத்தப்பட்டார்கள். அவர்கள் முகத்தின் வியர்வை நிலத்தில் சிந்த பாடுபட்டு தங்களுடைய ஆகாரத்தை புசிப்பதற்கு அவர்கள் வெளியே அனுப்பபட்டார்கள். இதோடு அவர்கள் பலுகி பெருகி பூமியை நிரப்ப வேண்டியதாய் இருந்தது. காயீன் மற்றும் ஆபேல் பிறந்தபோது இக்காரியம் துவங்கியது. ஆபேலின் பலி ஏற்றுக் கொள்ளப்பட்டதைக் கண்ட காயீன் பொறாமை கொண்டு, ஆபேலை கொன்று போட்டான். இப்படியாக முதல் மனுஷனின் மரணம் வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. (ஆதி 4:1-8) இதுவே பாடுகள்,உபத்திரவங்கள் மற்றும் மரணத்தின் ஒரு புதிய துவக்கமாய் இருந்தது.

பல நூற்றாண்டுகள் சென்ற பின்பு நோவா காலத்து ஜலப்பிரளயத்திற்கு முன் ஒரு புதிய துவக்கத்திற்கு வழி நடத்தியது." தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளை அதிக சௌந்தரியமுள்ளவர்களென்று கண்டு, அவர்களுக்குள்ளே தங்களுக்குப் பெண்களைத் தெரிந்துகொண்டார்கள்.. அப்பொழுது கர்த்தர்: என் ஆவி என்றென்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை; அவன் மாம்சந்தானே, அவன் இருக்கப் போகிற நாட்கள் நூற்றிருபது வருஷம் என்றார். அந்நாட்களில் இராட்சதர் பூமியிலே இருந்தார்கள்; பின்பு தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளோடே கூடுகிறதினால், இவர்கள் அவர்களுக்குப் பிள்ளைகளைப் பெற்ற போது, இவர்களும் பூர்வத்தில் பேர்பெற்ற மனுஷராகிய பலவான்களானார்கள்.மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு,தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது. . அப்பொழுது கர்த்தர்: நான் சிருஷ்டித்த மனுஷனைப் பூமியின்மேல் வைக்காமல், மனுஷன் முதற்கொண்டு, மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகாயத்துப் பறவைகள் பரியந்தமும் உண்டாயிருக்கிறவைகளை நிக்கிரகம்பண்ணுவேன்; நான் அவர்களை உண்டாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது என்றார். நோவாவுக்கோ, கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது."(ஆதி 6:2-8)

நோவாவுக்குள் இருந்த நீதியை கண்ட தேவன், சீர்கெட்ட தூதர்களின் எந்த விதமான தொடர்புகள் இல்லாத போதே அவரையும் அவருடைய குடும்பத்தையும் தனித்து பிரித்தெடுத்து மீண்டும் ஒரு புதிய துவக்கத்திற்காக ஜலப்பிரளயத்திலிருந்து அவர்களை இரட்சித்தார். (11பேதுரு 2:4,5) மீண்டும் இங்கு ஒரு புதிய துவக்கத்தைக் காணலாம்.

**ஆபிரகாமுக்கும் அவருடைய சந்ததிகளுக்கும் உண்டான அழைப்பு**

விசுவாசத்தின் தந்தையாகிய ஆபிரகாம், யேகோவா தேவனால் அழைக்கப்பட்ட போது மற்றொரு புதிய துவக்கம் துவங்கியது. "நான் காண்பிக்கும் தேசத்திற்கு நீ போ, நான் சொல்லும் காரியங்களை நீ செய், நான் விருப்பப்படுகிறபடி நீ நட" அன்று தேவன் ஆபிரகாமுக்கு சொன்னபடி நாமும் தேவன் விரும்பக் கூடிய இடங்களுக்கு செல்ல வேண்டும். தேவன் விரும்பிய காரியங்களை நடப்பிக்க வேண்டும். நாம் என்னவாக இருக்க வேண்டும் என்று எண்ணுகிறோமோ அப்படியே இருக்க வேண்டும். நாம் இப்படிச் செய்தால், நிச்சயம் நம்முடைய உடன் படிக்கையை நிறைவேற்றுகிறவர்களாக இருப்போம். தனக்கு கட்டளையிட்டபடியே ஆபிரகாம் சகலத்தையும் நிறைவேற்றினார். அவர் தம்முடைய தந்தையின் வீட்டை விட்டு தேவன் காண்பித்த தேசத்திற்குப் போனார். தாமதமின்றி தன்னுடைய குமாரனை பலிசெலுத்த ஆயத்தமானார். அவர் கொண்டிருந்த விசுவாசத்தினால் விசுவாசத்தின் தந்தையும், நாம் அனைவரையும் ஊக்குவிக்கும்படி ஒரு நல்ல மாதிரியுமானார். எபி 11: 8-10, ஏனெனில், "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்."(எபி 11:6)

பல வருடங்கள் கடந்த பின் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மோசே வழிநடத்தின நாளுக்கு நாம் வருவோம். விசுவாசத்தினால் அவர்கள் சிவந்த சமுத்திரத்தை கடந்தார்கள்.(எபி 11:29,39 ) இந்தச் சூழ்நிலையில் இஸ்ரயேல் ஒரு ஜாதியாக மாறினார்கள் அதற்குப் பின் சீனாய் மலையிலே தேவன் அவர்களோடு உடன்படிக்கை செய்தார். அப்பொழுது அந்த ஜனங்கள் தேவனுடையவர்களானார்கள். உண்மையில் இதுவும் ஒரு புதிய துவக்கமாய் இருந்தது.

ஆதாமின் கீழப்படியாமையினாலே மனுக்குலத்திற்கு மேல் வந்த மரண தீர்ப்பிலிருந்து இவர்களை இரட்சிப்பதற்கு தேவனுடைய திட்டத்தில் இது ஒரு புதிய துவக்கமாய் இருந்தது. அப்பொழுது குறிப்பிட்ட ஜனங்கள் தேர்வு செய்யப்பட்டு, நீண்ட கால பயிற்சியும், அனுபவங்களும் அனுமதிக்கப்பட்டு சபைக்கு மாதிரிகளாகவும், வருங்காலத்தில் மனுக்குலம் நித்திய ஜீவனை பெறுவதற்கு அவர்களை பயிற்றுவிக்கும் போதகர்களாகவும் அவர்களை வழிநடத்தினார். தேவன் அவர்களுக்கு நியாயப் பிரமாணத்தைக் கொடுத்து, உடன்படிக் கையை ஏற்படுத்தி, வனாந்திரத்தில் 40 வருடங் களாக வழிநடத்தினார். வெயில் உஷ்ணத்திலிருந்து பாதுகாக்க மேக ஸ்தம்பத்தையும், இரவின் பனியிலிருந்து பாதுகாக்க அக்கினி ஸ்தம்பத்தையும் ஏற்படுத்தினார். 40 வருடங்கள் அவர்களை மன்னாவினால் போஷித்து, அவர்களின் வஸ்திரங்களும் பாதரட்சைகளும் பழுதடையாதபடி காத்துக் கொண்டார். (உபா 29:5)

40 வருடங்கள் வனாந்திர பிரயாணத்தின் முடிவில் உடன்படிக்கைகளின் வார்த்தைகளை மீண்டும் மோசே நினைவு கூறினார். "ஓரேபிலே இஸ்ரவேல் புத்திரரோடே பண்ணிக்கொண்ட உடன்படிக்கையை அல்லாமல், மோவாபின் தேசத்திலே அவர்களோடே உடன்படிக்கைபண்ணக் கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்ட வார்ததைகள் இவைகளே." (உபா 29:1 ) கீழ்ப்படிதலினால் உண்டாகும் ஆசீர்வாதங்களும், கீழ்ப்படியாமையினால் வரக்கூடிய பாவங்களும் அறிவிக்கப்பட்டது. ஆசீர்வாதங்களும், பாவங்களும் இஸ்ரயேலின் தேசத்தில் அவர்களுடைய வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு அறிவிக்கப்பட்டது. உடன்படிக்கையின் பொறுப்பு களில் உள்ள இந்தச் சட்டங்கள் ஏழு வருடங்களுக்கு ஒரு முறை ஜனங்கள் கேட்க வாசிக்க வேண்டியதாய் இருந்தது. (உபா 31:10,11) இந்தப் பிரமாணங்களை ஒரு புஸ்தகத்தில் எழுதி உடன்படிக்கை பெட்டிக்குள் வைப்பதற்கு மோசே லேவியர்களுக்கு கட்டளையிட்டார். (உபா 31:24, 26)

யோர்தானை கடந்த உடன், அவர்கள் கிட்டத்தட்ட இஸ்ரயேலின் தேசத்திற்குள் நுழைந்தார்கள். அதற்கு முன் தேவன் ஆபிரகாமோடு செய்த உடன்படிக்கையின் அடையாளமாக விருத்த சேதனத்தை அவர்கள் செய்தார்கள். ஏனெனில் கடந்த 40 வருடங்களாக ஒருவரும் விருத்தசேதனம் பண்ணப்பட்டவில்லை, அதற்குப்பின் பஸ்காவும் அனுசரிக்கப்பட்டது. அதோடு யோர்தானிலிருந்து எடுக்கப்பட்ட கற்கள் கரையில் நடப்பட்டது. (யோசுவா 3:3,4)

உபாகமம் 27-ம் அதிகாரத்தில் யோர்தானை எப்படி கடக்க வேண்டும் என்ற கட்டளையை மோசே இஸ்ரயேலுக்கு கூறியிருந்தார். யோர்தானின் நதியின் கீழிருந்து 12 கற்களை எடுத்து, உபாகமம் 28-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட ஆறு விதமான

ஆசீர்வாதங்களை ஆறு கற்களிலும் மற்ற ஆறு விதமான சாபங்களை மற்ற ஆறு கற்களிலும் எழுதும்படி சொன்னார். அப்பொழுது, இந்த மலைகளுக்கு நடுவாக இஸ்ரயேல் ஜனங்கள் நிற்கும்போது, யோசுவா, ஆசாரியர்கள் மற்றும் லேவியர்கள் இந்த உடன்படிக்கையை வாசித்து, கீழப்படிதலுக்கு உண்டான ஆசீர்வாதங்களையும், கீழ்படியாமைக்கு உண்டான சாபங்களையும் ஜனங்கள் கேட்க வாசித்தார்கள்.

சீனாய் மலையில் கோத்திரத்தின் தலைவர்கள் நின்றது போல இன்று இந்த இரு மலைக்கு மத்தியில் முழு இஸ்ரயேல் ஜனமும், தண்ணீர் சுமப்பவர்களும், மர வெட்டிகளும் கூடி நின்றார்கள். (உபா 29:10,11, யோசு 8:32, 35) " பின்னும் மோசே, லேவியராகிய ஆசாரியர்களும் கூட இருக்கையில், இஸ்ரவேலர் எல்லாரையும் நோக்கி: இஸ்ரவேலே, கவனித்துக் கேள்; இந்நாளிலே உன் தேவனாகிய கர்த்தருக்கு ஜனமானாய்." (உபா 27:9)

**மோசே கடந்து செல்லுதல்**

இஸ்ரயேலர்கள் யோர்தான் நதிக்கு அருகாமையில் செல்லும் போது மோசே தன்னுடைய தலைமையை யோசுவாவுக்கு கொடுத்து விட்டு, ஒரு மலைக்கு சென்று அங்கு மரித்துப் போனார். யோசுவா இஸ்ரயேல் ஜனங்களை யோர்தானை கடக்க செய்தார் வனாந்திரத்தில் அனுசரிக்கப்படாத இரண்டு காரியங்களை யோசுவா நடப்பித்தார் - விருத்தசேதனமும் பஸ்கா பண்டிகையும் மீண்டும் அனுசரிக்கப்பட்டது.

அடுத்து, விசுவாசத்திற்கு ஒரு புதிய பரிட்சை கொடுக்கப்பட்டது. சிவந்த சமுத்திரத்தை கடந்த அநேகர் இப்பொழுது இல்லை. இந்த விசுவாசத்திற்குரிய புதிய பரிட்சை எரிகோவில் நடந்த யுத்தமாகும். இஸ்ரயேல் ஜனங்கள் தேவன் சொன்ன காரியங்களைப் பின்பற்றினதினால் எரிகோ பட்டணத்தின் மதில்கள் விழுந்தது.

அதற்கு முன்பாக தேவனுடைய வழிநடத்துதலை கேட்காத இஸ்ரயேல் ஜனங்கள் அருகாமையிலுள்ள பட்டணத்தை பிடிக்க முயன்றார்கள். ஆனால் அவர்களோ தோற்கடிக்கப் பட்டு விரட்டியடிக்கப்பட்டார்கள். 36 மனிதர்கள் ஜீவனை இழந்தார்கள். யோசுவாவுக்கு இது மிகவும் விசனமாய் இருந்தது. ஆனால் தேவன் இஸ்ரயேலுக்குள் இருந்த பாவத்தை வெளிப்படுத்தி, இப்படிப்பட்ட பாவமுள்ள தேசத்திற்கு உதவி செய்ய முடியாது என்பதை தெரிவித்தார். இப்படிப்பட்ட பாவத்தை செய்த ஆகான் குடும்பத்தினரும், அவனை சார்ந்த சகலமும் முற்றிலும் அழிக்கப்பட்டது. " அப்பொழுது யோசுவாவும் இஸ்ரவேலெல்லாருங் கூடச் சேராகின் புத்திரனாகிய ஆகானையும், அந்த வெள்ளியையும் சால்வையையும் பொன்பாளத்தையும், அவன் குமாரரையும் குமாரத்திகளையும், அவன் மாடுகளையும் கழுதைகளையும் ஆடுகளையும், அவன் கூடாரத்தையும், அவனுக்குள்ள யாவையும் எடுத்து, ஆகோர் பள்ளத்தாக்குக்குக் கொண்டு போனார்கள். அங்கே யோசுவா: நீ எங்களைக் கலங்கப்பண்ணினதென்ன? இன்று கர்த்தர் உன்னைக் கலங்கப்பண்ணுவார் என்றான்; அப்பொழுது இஸ்ரவேலரெல்லாரும் அவன்மேல் கல்லெறிந்து, அவைகளை அக்கினியில் சுட்டெரித்து, கற்களினால் மூடி; அவன்மேல் இந்நாள்வரைக்கும் இருக்கிற பெரிய கற்குவியலைக் குவித்தார்கள்; இப்படியே கர்த்தர் தமது கோபத்தின் உக்கிரத்தை விட்டு மாறினார்; ஆகையால் அவ்விடம் இந்நாள்வரைக்கும் ஆகோர் பள்ளத்தாக்கு என்னப்படும்."(யோசு 7:24-26)

இஸ்ரயேலில் ஒரு மனுஷன் பாவம் செய்தான், அந்தத் தேசம் முழுவதும் பாவம் செய்ததாக கருதப்பட்டது. ஆதாமை சற்று சிந்தித்து பாருங்கள். ஒரு தனி நபரினால் மனுக்குலம் முழுவதும் மரணத்தீர்ப்பை பெற்றது. ஆகான் என்ற ஒருவனுடைய பாவத்தினால் 36 பேர் பலியானார்கள். அதற்குப் பின் ஒரு வேளை இஸ்ரயேலில் 36 புது விதவைகளும் தகப்பனற்ற பிள்ளைகளும் இருந்திருப்பார்கள். ஆகவே நாம் நம்முடைய சொந்த நடத்தையைக் குறித்து மிக கவனமாக இருக்க வேண்டும். எள்ளளவு பாவம் கூட தேவனுடைய இராஜ்யத்தில் அனுமதிக்கப்படாது. நம்முடைய ஆண்டவரும், இயேசு கிறிஸ்துவும் திறந்து வைத்த இடுக்கமான வாசல் வழியாக பிரவேசிக்க விரும்பும் ஒவ்வொருவரும், பாவத்தினால் சூழப்பட்டு இருக்கிறோம். ஆகவே நாம் ஒவ்வொரு நாளிலும் வெவ்வேறு வழிகளில் வரக்கூடிய பாவ சோதனைகளை எதிர்த்துப் போரிட்டு ஜெயிக்க வேண்டும். இப்படியாக எல்லா பாவங்களையும் நம்மை விட்டு அகற்றினால் மட்டுமே நாம் தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முடியும்.

**இயேசுவின் வருகை**

இஸ்ரயேலுக்கு இன்னும் அதிகமான புதிய துவக்கம் இருந்த போதிலும், வரலாற்றில் காணப்படும் இயேசுவின் பிறப்பில் காணக்கூடிய புதிய துவக்கங்களின் தொகுப்புகளைக் காணலாம். ஆதாமின் சந்ததியில் வராதவரும், பாவமற்றவரும், ஆதாமைப் போல ஒரு பூரண மனுஷராக இவர் இருந்தார். இயேசு ஒரு ஸ்திரீயினிடத்தில் பிறந்தாலும், தேவனுடைய பரிசுத்த ஆவியினால் அவர் கருத்தரிக்கப்பட்டதினால் அவர் பாவமற்றவராக இருந்தார். அவர் ஒரு பூரண மனுஷனாகவும் இருந்தார்.

ஆதாமைப் போல அவருடைய குணங்களும் சோதிக்கப்படவில்லை. சாத்தானின் வஞ்சகமான வார்த்தைகளை நம்பின ஏவாளின் நிமித்தம் ஆதாம் முதல் பரீட்சையில் தோல்வி அடைந்தான். அதுபோல இயேசுவும் சாத்தானால் சோதிக்கப்பட்டார். அப்பொழுது இயேசு தேவனுடைய வார்த்தைகளை கேடகம் போலவும், பரீசையை போலவும் பயன்படுத்தி சாத்தானை விரட்டி விட்டார். (லூக் 4:1-13)

இந்தப் புதிய துவக்கம் முழு முனுக்குலத்திற்கும் ஒரு நம்பிக்கையை தந்தது. "அவர் மனுஷகுமாரனாயிருக்கிறபடியால், நியாயத்தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார்.. இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர் களாகவும் புறப்படுவார்கள். நான் என் சுயமாய் ஒன்றுஞ் செய்கிறதில்லை; நான் கேட்கிறபடியே நியாயந்தீர்க்கிறேன்; எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது."(யோவ 5:27-30)

"கல்லறையில் இருக்கக்கூடிய அனைவரும்" இந்தப் புதிய துவக்கத்தில் இருந்து உண்மையில் புதிய ஜீவனைப் பெறுவார்கள். ஆட்சி செய்யவும், நியாயந்தீர்க்கவும் முழு அதிகாரத்தையும் இயேசு பெற்றிருந்த போதிலும், அவர் தம்முடைய ஊழியத்தில் நம் அனைவரையும் ஊக்குவிக்கும்படி அதிகமான பாசத்தையும், இரக்கத்தையும் காண்பித்தார்.

"பின்பு, இயேசு சகல பட்டணங்களையும் கிராமங்களையும் சுற்றி நடந்து, ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கி, அவர்களைச் சொஸ்தமாக்கினார். அவர் திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்துபோனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகி, "(மத் 9:35-36) "நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்."(எபி4:15) இவரைக் காட்டிலும் வேறு நல்ல நியாயாதிபதியை எதிர்பார்க்க முடியுமா? அன்பும், இரக்கமும், பெற்ற இந்த நியாயாதிபதி போல ஒருவர் உண்டோ? இவர் ஆதாமுக்கும் அவருடைய சந்ததிக்கும், ஒரு புதிய துவக்கத்தைக் கொடுப்பதற்கு தம்முடைய ஜீவனைக் கொடுத்தாரே, (1கொரி 15:11,22)

### பெந்தகோஸ்தே

இயேசு 33ம் வயதில் சிலுவையில் மரித்தார். மூன்றாம் நாளில் தெய்வீக ஆவிக்குரிய சரீரத்தில் உயிர்த்தெழுந்தார். அதற்குப் பின் பெந்தகோஸ்தே நாளிலிருந்து இயேசு தம்முடைய சீஷர்களுக்கு ஒரு புதிய துவக்கத்தைக் கொடுத்தார். கடந்த 2000 வருடங்களாக இந்த வகுப்பார் வளர்ச்சி அடைந்துகொண்டு இருக்கிறார்கள். இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றக்கூடிய இவர்கள், அவருடைய ஆவிக்குரிய சரீரமாக பொருத்தப்பட்டு, மரித்தோரை உயிர்த்தெழுப்புவதிலும், அவர்களுக்கு நித்திய ஜீவனைக் கொடுப்பதிலும், இயேசுவோடு இணைந்து செயல்படுவார்கள். இயேசு கிறிஸ்து வின் இராஜ்யம் மனுக்குலத்திற்கு ஓர் அற்புதமான துவக்கமாக இருக்கும். சகல சத்துருக்களையும் பாதத்தின் கீழாக்கும் வரைக்கும் 1000 வருஷம் இயேசு ஆளுகை செய்வார். (1கொரி 15:25, வெளி 20:6) அதற்குப்பின் இயேசு இராஜ்யத்தை தேவனிடத்தில் ஒப்புக்கொடுப்பார். அப்பொழுது சர்வசிருஷ்டிகரையும், இராஜாவையும் மனுக்குலம் நித்தியமாக மகிமைப்படுத்தும். நீண்ட காலமாக இஸ்ரயேல் தேவனுடைய காலக் கடிகாரமாய் இருக்கிறது. தேவனுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கு வழிநடத்தக்கூடிய படிகளை நம்முடைய ஜீவிய காலத்தில் நாம் கண்டு கொண்டிருக்கிறோம். இஸ்ரயேல் ஜாதியின் உயிர்த்தெழுதலை நாம் கண்டோம். கிபி 70ல் இஸ்ரயேலின் ஆலயம் அழிக்கப்பட்டு, தேசம் புறஜாதியாரால் எடுத்துக்கொள்ளப்பட்டது.

மதம் கெடுக்கப்பட்டது. ஜனங்கள் பூமியெங்கும் சிதறடிக்கப் பட்டார்கள். எபிரெய மொழியும் கூட குறைவாக காணப்பட்டது. கிட்டத்தட்ட 2000 வருடங்களாக அந்தச் தேசம் மரித்து கிடந்தது. ஆனால் இப்பொழுது எசேக்கியேல் 37 அதிகாரத்தின் உலர்ந்த எலும்புகளின் பள்ளதாக்கு என்ற தீர்க்கதரிசன அடிப்படையில், இவர்கள் மீண்டும் ஒரு தேசமாக ஸ்தாபிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

இஸ்ரயேலின் வரலாற்றின் முழுவதிலும் ஆபிரகாமின் வாக்குத்தத்தத்திற்கும், தேவனுடைய பிரமாணத்திற்கும், உண்மையான விசுவாசத்தைக் காட்டக்கூடிய சிலர் மீதியிருப்பார்கள் என்று தேவன் குறிப்பிடுகிறார். " எங்கள் பிதாக்களின் நாட்கள்முதல் இந்நாள்மட்டும் நாங்கள் பெரிய

குற்றத்துக்கு உள்ளாகியிருக்கிறோம்; எங்கள் அக்கிரமங்களினிமித்தம் நாங்களும், எங்கள் ராஜாக்களும், எங்கள் ஆசாரியர்களும், இந்நாளிலிருக்கிறதுபோல, அந்நியதேச ராஜாக்களின் கையிலே, பட்டயத்துக்கும், சிறையிருப்புக்கும், கொள்ளைக்கும், வெட்கத்துக்கும் ஒப்புக்கொடுக்கப்பட்டோம்.. இப்பொழுதும் எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களிலே தப்பின சிலரை மீதியாக வைக்கவும், தம்முடைய பரிசுத்த ஸ்தலத்தில் எங்களுக்கு ஒரு குச்சைக் கொடுக்கவும், இப்படியே எங்கள் தேவன் எங்கள் கண்களைப் பிரகாசிப்பித்து, எங்கள் அடிமைத்தனத்திலே எங்களுக்குக் கொஞ்சம் உயிர் கொடுக்கவும், அவராலே கொஞ்சநேரமாவது கிருபைகிடைத்தது." (எஸ்றா 9:7,8)

*1878ம் ஆண்டில், ரஷ்ய - துருக்கி யுத்தத்திற்குபின் பெர்லின் காங்கிரஸ் ஆப் நேஷன்ஸ் (Berlin Congress of Nations) மற்றம் ஓட்டோமென் சாம்ராஜ்யத்தில் அனைவருக்கும், சட்டத்தின் கீழ் சமஉரிமைக் கொடுக்கப்பட்டது. இப்படியாக யூத ஜனங்கள் இஸ்ரயேல் தேசத்தில் நிலங்களை விலைக்கு வாங்கினார்கள். பெட்டா டிக்குவாவும் (Petach Ticvah) அந்த வருடம் நிறுவப்பட்டது.

* 1884ம் வருடம் முதல் நாளிதழ் எபிரெய மொழியில் எலியேசர் பென் யஹூடா (Eliezer Ben Yehuda) என்பவரால் அச்சடிக்கப்பட்டது. இவர் எபிரெய மொழியை மீண்டும் உயிர்ப்பித்தவர்.

*1896ம் வருடம் தியோடர் ஹர்சல் The Jewish state என்ற புத்தகத்தை வெளியிட்டார். இஸ்ரயேலர்களைக் கூட்டி சேர்ப்பதற்கான இயக்கத்தை Zionist Congress அதை தொடர்ந்து வந்த வருடத்தில் உருவாக்கினார்.

* யூதர்கள் பாலஸ்தீனாவை தங்களுடைய தாய்நாடாக மாற்றிக்கொள்வதற்கு 1917ம் இங்கிலாந்தில், பால்பர் பிரகடனம்(Balfour Declaration) உறுதிசெய்யப்பட்டது. அதே வருடம் பிரிட்டிஷ், எருசலேமை எடுத்துகொண்டு, இங்கிலாந்தில் அறிவிக்கப்பட்ட பிரகடனத்திற்கு ஆதரவளித்தது. முதலாம் உலகப்போருக்கு பின் 1918ம் வருடத்தில் ஓட்டொமென் சாம்ராஜ்யம் அழிக்கப்பட்டது.

*1922ம் வருடம் தேசங்களின் கூட்டமைப்பு பால்பர் பிரகடனத்தை உறுதிப்படுத்தியது. 1939ம் வருடம் ஒரு பெரிய புரட்சி ஏற்பட்டு, யூதர்கள் பாலஸ்தீனாவுக்கு துரத்தப்பட்டார்கள். 1948ம் வருடம் இஸ்ரயேல் நாடு பிறந்தது. அப்பொழுது கிட்டத்தட்ட 6,00,000 யூதர்கள் வாழ்ந்து வந்தார்கள். இன்று அவர்களின் எண்ணிக்கை 60,00,000 ஆக உயர்ந்திருக்கிறது.

சபையின் நிறைவையும், இஸ்ரயேலின் முழுமையான உயிர்த்தெழுதலையும் மற்றும் ஆசீர்வதிக்கப்பட்ட இராஜ்யத்திற்கு மரித்தோர் அனைவரும் உயிர்த்தெழுதலுக்காக இறுதியான, புதிய துவக்கம் காத்துக்கொண்டிருக்கிறது.

ஒருமித்த துவக்கங்கள்

# மீண்டும் துவங்குதல்

"பின்பு தேவன் நோவாவையும், அவன் குமாரரையும் ஆசீர்வதித்து: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்புங்கள்."( ஆதியாகமம் 9:1)



**David Rice**

ஆதாம் மற்றும் ஏவாளோடு மனுஷ இனம் துவங்கியது. நோவா அவருடைய மனைவி அவருடைய குமாரர்கள் மற்றும் குமாரர்களின் மனைவிகளுடன் ஒரு புதிய துவக்கம் துவங்கியது. முன்பு இருந்த உலகம் ஜலத்தினால் அழிக்கப்பட்டு, பாவத்திலிருந்தும் துன்மார்க்கத்திலிருந்தும் இந்த உலகத்தை சுத்திகரித்தது. ஜலப்பிரளயத்திற்கு முன் நீண்ட காலங்களாக வாழக்கூடிய ஆசீர்வாதத்தை பெற்ற ஜனங்கள், கிடைத்த ஆசீர்வாதங்களைச் சரியாக பயன்படுத்தவில்லை என்று தோன்றுகிறது. மனித ஜனத்தொகை ஒரு நல்ல பலனைப் பெறுவதற்காக தேவன் ஒரு புதிய வழியை திறந்தார். இந்த வழியானது பாவத்தை அனுமதிக்காத தெய்வீக நியாயத்தீர்ப்பை எடுத்துக்காட்டியது. ஜலத்தினால் அழிக்கப்பட்ட பல மில்லியன் கணக்கான ஜனங்களுக்கு ஆயிர வருட ஆட்சியில் பெறக்கூடிய நித்திய ஜீவனுக்குரிய ஒரு சோதனையாக இருந்தது. அன்று அவர்களுக்கு கற்பிக்கப்பட்ட பாடம் மிக முக்கியமானதாகும்.

ஆதியாகமம் முதல் அதிகாரத்தில் 7-ம் சிருஷ்டிப்பின் நாளை பார்க்ககூடியவர்கள் (தேவன் தம்முடைய சிருஷ்டிப்பை முடித்து ஓய்வெடுத்த நாள்) நீண்ட காலமாகிய 7000 வருஷத்தை காண வேண்டும். அதில் மற்றொரு புதிய துவக்கமாகிய 3500 வருடங்களுக்கு பின் துவங்கும் ஒரு காலத்தை காணலாம். ஒவ்வொரு சிருஷ்டிப்பின் நாளும் "சாயங்காலம் மற்றும் விடியற்காலம்" என்ற இரண்டு பகுதிகளாக கொண்டிருப்பதை விவரிக்கிறது. அதில் விடியற்காலம் என்று சொல்லப்படும் அதின் இரண்டாவது பகுதியில், தேவனுடைய நோக்கங்கள் தெளிவாக காணப்படுகிறது. இது 7000 வருடத்தில் உள்ள கடைசி 7- வது நாளை (கடைசி 1000 வருடங்கள்) இந்த இரண்டாவது பகுதி குறிக்கிறது. தானியேல் 9- ம் அதிகாரத்தில் உள்ள 70 வார காலம், கல்வாரியில் ஈடுபலியை நோக்கி கணக்கிடப்படு கிறது. அதை தொடர்ந்து இரட்சிப்புக்குரிய இரண்டு யுகங்கள் ஒன்றுக்குப்பின் ஒன்றாக தொடர்கிறது. ஆயிர வருட ஆட்சியின் முடிவில் முழுமையான வெளிச்சம் இந்தப் பூமியை பிரகாசிப்பிக்கும். (வெளி 21:23) கிறிஸ்துவின் முதல் வருகைக்கும் (கிபி 29) இயேசுவின் இரண்டாம் வருகைக்கும் (கிபி 1874) இடையில் 1845 வருடங்கள் உள்ளது என்று வேதமாணவர்கள் நீண்ட காலத்திற்கு முன்னதாகவே அறிந்திருக்கிறார்கள். இந்தக் காலத்தின் துவக்கத்திலேயும் முடிவிலேயும் இரண்டு விதமான ஆசீர்வாதங்களை தரக்கூடிய இரண்டு புதிய துவக்கங்களைக் காணலாம். இந்த இரண்டு யுகங்களுக்கும் 1845 வருடங்களுக்கான சம கால அளவுகள் கொண்டிருக்கிறது. இதே கால அளவை முந்தைய உலகத்தை ஜலப்பிரளயம் அழித்த பின் உள்ள புதிய துவக்கத்திலிருந்து கடைசி சிருஷ்டிப்பின் நாளாகிய விடியற்கால மட்டும் அதே 1845 வருடங்கள் உள்ளது. (ஆதியாகமம் 5,7,8 ம் அதிகாரத்தில் ஆதாமிலிருந்து ஜலப்பிரளயம் வரைக்கும் 1656 - வருடங்கள் உள்ளதாக கணக்கிடப்படுகிறது. இதில் ஒருவருடம் ஜலப்பிரளயம் ஏற்பட்டது இப்படியாக ஆதாமிலிருந்து ஜலப்பிரளயம் துவங்கின வரைக்கும் 1655வருடங்கள் ஆகும். ஆக ஆதாமிலிருந்து 3500 வருடங்களை ஆதாமிலிருந்து ஜலப்பிரளயம் துவங்கின வருடங்களை 1655 வருடங்களை கழித்தால், 1845 வருடங்களை நாம் பெறுகிறோம். )

### ஆபிரகாம், இஸ்ரயேல், இயேசு

ஜலப்பிரளயத்திற்கு பின், 427 வருடங்கள் கடந்த போது ஆபிரகாம் தன்னுடைய பரிவாரங்களோடு வாக்குதத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் நுழைந்தார். அங்கு தேவன் சீகேமிலே ஆபிரகாமுக்கு தரிசனமாகிய " ஆபிராம் அந்தத் தேசத்தில் சுற்றித்திரிந்து சீகேம் என்னும் இடத்துக்குச் சமீபமான மோரே என்னும் சமபூமிமட்டுக்கும் வந்தான்; அக்காலத்திலே கானானியர் அத்தேசத்தில் இருந்தார்கள். கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி: உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்பேன் என்றார். அப்பொழுது அவன் தனக்குத் தரிசனமான கர்த்தருக்கு அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டினான்." (ஆதி 12:6,7) தேவனுடைய யுகங்களின் திட்டத்தில் இது ஒரு மைல் கல்லாக இருந்தது. வாக்குத்தத்தம் செய்யப்பட்ட ஆபிரகாமின் வித்தாகிய நம்முடைய ஆண்டவராம் இயேசு பிறப்பதற்கு தேவன் இங்கு ஆபிரகாமை தெரிந்து கொண்டார். (கலா 3:16) இந்த வம்சம் ஈசாக்கு, யாக்கோபு மற்றும் யாக்கோபின் குமாரனாகிய யூதாவின் வழியாக வந்தது. (ஆதி49:10, 1நாளா 5:2)



Stone found by Eilat Mazar in the 1970s at the southern base of the Temple Mount. The inscription reads "To the Trumpeting Place." It is thought to refer to the place the priests would stand to announce the Sabbath beginning and ending. Presumably this stone would have been from Herod's Temple, which was a rebuilding and expansion of Zerubbabel's Temple. (8 x 3¼ feet.)

யாக்கோபின் 12 குமாரர்கள், இஸ்ரயேல் ஜாதியாக உருவாக்கப்பட்டு அனைவரும் ஒருமித்து தேவனை தொழுதுகொள்ள எகிப்திலிருந்து புறப்பட்டு சீனாய் வனாந்திரத்திற்குச் செல்வதற்கு மற்றொரு 430 வருடங்கள் ஆனது. ". இப்பொழுது ….. சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; ….. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள்" (யாத் 19:5,6)

பதிவு செய்யப்பட்ட ஆபிரகாமின் அனுபவங்களுக்கும் இணையான ஒரு நோக்கம் காணப்படுகிறது. பார்வோனும் அவனுடைய வீட்டாரும் வாதையினால் வாதிக்கப்பட்டபின் ஆபிரகாம் எகிப்தை விட்டு புறப்பட்டார். ஆதி 12:17-20 அதே போல இஸ்ரயேலர்கள் எகிப்தை விட்டு புறப்படுவதற்கு முன் எகிப்தியர் வாதையினால் வாதிக்கப்பட்டார்கள். (ஆதி 13:1,2) ஆபிரகாம் தேர்வு செய்யப்படட முற்பிதாவாக இருந்தார், இஸ்ரயேலர்களும் தேர்வு செய்யப்பட்ட ஜனங்களாக இருந்தார்கள்.

இஸ்ரயேல் ஜாதி எகிப்தை விட்டு வெளியே வந்தபோது அவர்கள் தேவனுடைய விசேஷித்த தலைச்சன் பிள்ளைகளாக கருதப்பட்டார்கள். "இஸ்ரவேல் என்னுடைய குமாரன், என் சேஷ்டபுத்திரன்." (யாத் 4:22) சில நாட்களுக்கு பின்பு ஓசியா தீர்க்கதரிசி இதை வலியுறுத்தினார். "இஸ்ரவேல் இளைஞனாயிருந்தபோது நான் அவனை நேசித்தேன்; எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன்." (ஓசி 11:1) ஆயினும் இந்த ஒரு வசனப் பகுதி தேவனுடைய உண்மையான முதல் பிறந்த நம்முடைய ஆண்டவராம் இயேசுவுக்கும் பொருத்தப்படுகிறது. ஏரோதின் மரணத்திற்கு பின் யோசேப்பு மற்றும் மரியாளோடும் இயேசு எகிப்தை விட்டு வெளியே வந்ததை, மத்தேயு தன்னுடைய சுவிசேஷத்தில் எழுதுகிறாா். (மத் 2:15) இப்படியாக - ஆபிரகாம், இஸ்ரயேல் மற்றும் இயேசு எகிப்திலிருந்து வெளியே வந்த காரியங்கள், ஒரே இசைவான புதிய துவக்கங்கள் துவங்கப்பட்டதைக் காணலாம்.

**மோசே, யோசுவா**

பரம அழைப்பிற்கு அழைக்கப்பட்டு, மேலான உடன்படிக்கைக்கு உட்பட்ட சுவிசேஷ யுக சபைக்கு, நியாயப்பிரமாணத்திற்கு உட்பட்ட இஸ்ரயேல் ஜனங்கள் ஒரு நிழலாய் காணப்படுகிறார்கள். அவர்களை வழிநடத்தின மோசே நம்முடைய ஆண்டவராம் இயேசுவிற்கு நிழலாய் இருக்கிறார். "உன்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக அவர்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணி, என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன்; நான் அவருக்குக் கற்பிப்பதையெல்லாம் அவர்களுக்குச் சொல்லுவார்." (உபா 18:18)

சீவான் மாதமாகிய மூன்றாம் மாதத்தில் மாம்சீக இஸ்ரயேலர்கள் உடன்படிக்கையையும் அதற்குரிய ஆசீர்வாதத்தையும் தேவனிடத்தில் பெற்றுக் கொண்டார்கள். (யாத்தி 19:1) அதே போல ஆவிக்குரிய இஸ்ரேயலர்களும் மூன்றாம் மாதத்தில் வந்த பெந்தகோஸ்தே நாளின்போது அவர்கள் மிகுந்த ஆசீர்வாதங்களை பெற்றார்கள். 40 வருடங்கள் வனாந்திரத்தில் மோசே இஸ்ரயேல் ஜனங்களை நடத்தினார். நம்முடைய பரம கானான் செல்லும் வழியாகிய இந்தப் பாவமான வனாந்திரத்தில், நம்முடைய ஆண்டவராம் இயேசு நம்மை வழி நடத்துகிறார். மோசேவுக்கு பின் யோசுவா, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு இஸ்ரயேல் ஜனங்களை வழி நடத்தி, அவர்களின் எதிராளிகளை அழித்தார். அதே போல ஆயிர வருட ஆட்சியின் நீதிக்கு எதிராளிகளை இயேசு முற்றிலும் அழித்து விடுவார்.

**நியாயாதிபதிகளும், இராஜாக்களும்**

இஸ்ரயேலர்களை இரட்சிக்க தேவன் நியாயாதிபதிகளை எழுப்பினார். தன்னுடைய இஸ்ரயேல் ஜனங்களை ஆட்சி செய்வதற்கு தேவன் எந்த ஒரு இராஜாவையும் நியமிக்க வில்லை. இப்படிப்பட்ட ஒரு ஆட்சி பொறுப்பு கிதியோனுக்கு கொடுக்கப்பட்ட போதிலும் அவர் அதை தயவாக மறுத்தார்."அப்பொழுது நப்தலி மனுஷரும், ஆசேர் மனுஷரும், மனாசேயின் சகல மனுஷருமாகிய இஸ்ரவேலர் கூடிவந்து, மீதியானியரைப் பின்தொடர்ந்து போனார்கள்." (நியா 8:23) அதே போல சுவிசேஷ யுக சபைக்கு கர்த்தர் ஆலோசனையாக கூறுவது என்ன வென்றால் "நீங்களோ ரபீ என்றழைக்கப்படாதிருங்கள்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார், நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்."(மத் 23:8) அதே போல வயது சென்ற அப்போஸ்தலராகிய பேதுருவும் "உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல,

மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள்."(1பேது 5:2,3 ) என்று ஆலோசனை கூறுகிறார். மந்தைகளை தேவனுடைய வழியில் நடத்தக்கூடிய மூப்பர்களை தேவன் எழுப்புகிறார். நியாயாதிபதிகள் பத்து அதிகாரம் வரைக்கும் சொல்லப்பட்ட ஏழு நியாயாதிபதிகள் வெளிப்படுத்தல் 1:20 வசனத்தில் இயேசுவின் வலது கரத்தில் இருக்கக்கூடிய ஏழு நட்சத்திரங்களுக்கு ஒப்பாக இருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது.

பரிசுத்தவான்கள் ஒருவருக்கு மேல் ஒருவர் ஆட்சி செலுத்தாவிட்டாலும், ஜெயம் பெற்றவர்கள் இயேசுவோடு ஆளுகை செய்வார்கள் என்று வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. (வெளி 3:21, 20:6) நியாயாதிபதியின் காலத்தைத் தொடர்ந்து இராஜாக்களின் காலம் வந்தது. உண்மையில் அப்பொழுது தேவனுடைய ஜனங்களுக்கு மற்றொரு புதிய துவக்கம் துவங்கியது. அதே போல இக்காலத்து சுவிசேஷ யுகத்திற்குபின், கிறிஸ்துவின் இராஜ்யம் இந்தப் பூமியில் ஸ்தாபிக்கப்பட்டு பரிசுத்தவான்கள் அதிகாரம் பெற்று, ஒரு புதிய துவக்கத்தை துவங்குவார்கள்.

**செருபாயேல், தானியேல்**

இறுதியாக கடுமையான நியாயத்தீர்ப்பைப் பெறுவதற்கு இஸ்ரயேலர்கள் தகுதி பெற்றார்கள். ஆகவே நேபுகாத்நேச்சாரின் நாட்களில் இஸ்ரயேல் ஜனங்கள் பாபிலோனுக்கு சிறை பிடிக்கப்படுவதற்கு தேவன் அனுமதித்தார். 70 வது வருடத்திற்குபின் அவர்கள் இஸ்ரயேலுக்கு திரும்பி வந்து, மறுபடியும் ஆலயத்தைப் புதுப்பித்தார்கள். இவர்களை திருப்பி அனுப்பின கோரேஸ் இராஜா, செருபாபேலை தலைவராக நியமித்தார்.

செருபாபேல் ஆலயத்தின் அஸ்திபாரத்தை போட்டார். ஆனால் 21 வருடங்கள் அந்த அஸ்திபாரம் அப்படியே விடப்பட்டது. (கிமு 536- 515) (எஸ்ரா 4:24, 6:15) 21 வருடங்களுக்கான காலப்பகுதி தானியேல் தீர்க்கதரிசியின் அனுபவத்தில் 21 நாட்களாக குறிப்பிடப்படுகிறது. (தானியேல் 10:13)

ஆலயம் ஆதாரப் பூர்வமாக சபையை அடையாளப்படுத்துகிறது. (1கொரி 3:14, 1பேது 2:5) அந்த ஆலயத்தை கட்டிய செருபாபேல் நம்முடைய ஆண்டவராம் இயேசுவை அடையாளப்படுத்துகிறார். அங்கு 21 வருடங்கள் ஆலயம் கட்டுவது தாமதம் ஆனது போல ஆவிக்குரிய ஆலயமாகிய சபை 1260 வருடங்கள் வளர்ச்சி அடையாதிருந்தது.

அரச பரம்பரையின் வழியாக வந்த செருபாபேல் தாவீதின் வம்சாவழியாவார். அதே போல இயேசுவும் தாவீன் வம்சத்திலிருந்து வந்தவர். (மத்தேயு சுவிசேஷத்தில் யோசேப்பின் வம்சவழி கொடுக்கப் பட்டுள்ளது லூக்கா சுவிசேஷத்தில் மரியாளின் வம்ச வழி கொடுக்கப்பட்டுள்ளது. )

செருபாபேல் ஆலயத்தைக் கட்டி லேவியனாக இராதபோதிலும், ஆசாரிய வேலைகளை நிறைவேற்றினார். அவர் யூதா கோத்திரத்தைச் சேர்ந்தவர். ஆனால் இராஜாவின் பொறுப்பையும் ,ஆசாரியர்களின் பொறுப்பையும் ஒருமித்து நடப்பித்த இயேசுவை அவர் அடையாளப்படுத்துகிறார். "மெல்கிசேதேக்கின் முறைமையின்படி அவர் நித்தியமான ஆசாரியரானார்."( எபி 5:6, 4:14) உயிர்த்தெழுதலுக்குபின் இயேசு சிங்காசனத்தை பெற்றுக்கொண்டார். (எபி 8:1)

**எஸ்ரா, நெகேமியா**

சபையை பொறுத்த வரைக்கும் ஒருமித்து வேலை செய்த எஸ்ரா மற்றும் நெகேமியா சபையின் மற்றொரு கோணத்தைச் சித்தரிக்கிறார்கள். எஸ்ரா ஆலயத்தை கட்டவில்லை ஆனால் அதை செப்பனிட்டு அந்த ஆலயத்தில் பலிகளை செலுத்த தொடங்கினார். அதேபோல சுவிசேஷ யுகத்தின் தலைமையான அறுவடை வேலைகளை செய்யக்கூடிய இயேசு இக்காலத்து உண்மையான சத்தியங்களை கொண்டு, பொய்யான சத்தியங்களை நிராகம் பண்ணுகிறார். அல்லது பொய்யான சத்தியங்களை, உண்மையான அறுவடை சத்தியங் களை கொண்டு புதுப்பித்து வருகிறார்.

ஆயினும் சுவிசேஷ யுகத்தில் வெகு சீக்கிரத்தில் முடிவடைய வேண்டிய அறுவடை, கடந்த ஒரு நூற்றாண்டாக தாமதித்து வருவது போல தோன்றுகிறது. ஆனால் தேவனுடைய திட்டத்தில் எதுவும் தாமதப்படுவதில்லை. குறித்தக் காலத்தில் சபை நிறைவடையும்.

எருசலேமின் மதில் சுவர்களைக் கட்டி முடித்த நெகேமியா புதிய எருசலேமின் கட்டுமான பணியை நிறைவேற்றும் இயேசுவை அடையாளப்படுத்துகிறார்.

இப்படியாக, பழைய ஏற்பாட்டிலுள்ள வரலாற்றில் காணப்படுகிற, முக்கியமான புதிய துவக்கங்கள், புதிய ஏற்பாட்டின் காலத்தில் தேவனுடைய திட்டங்களைக் குறித்து பரிசுத்தவான்களுக்கு, அநேக ஆர்வமூட்டும் பாடங்கள் நிறைந்திருப்பதைக் காணலாம்.

அசட்டை செய்யப்பட்ட ஒரு கிரியை புதுபிக்கப்படுதல்

# உங்கள் வழியை சிந்தியுங்கள்



"உங்கள் வழிகளைச் சிந்தித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். நீங்கள் மலையின்மேல் ஏறிப்போய், மரங்களை வெட்டிக்கொண்டுவந்து, ஆலயத்தைக் கட்டுங்கள்; அதின்பேரில் நான் பிரியமாயிருப்பேன், அதினால் என் மகிமை விளங்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (ஆகாய் 1:7,8)

**Rick Evans**

தேவனை சேவிக்க வேண்டும் என்று ஒருவர் முடிவெடுக்கும்போது, ஒரு புதிய துவக்கம் வாழ்க்கையில் துவங்கப்படுகிறது. இந்தப் பயணத்தில் பழைய வழிகளை விட்டுவிட்டு, தேவனுடைய வேலைகளை செய்யக்கூடிய காரியங்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டியதாய் இருக்கிறது. புதிய துவக்கத்தில் உள்ள ஜனங்கள் "தங்களுடைய வழிகளை சிந்தித்து " எச்சரிக்கையாக இருக்கும்படி ஆகாய் புத்தகத்தின் முதல் அதிகாரத்தில் உள்ள எடுத்துக்காட்டு குறிப்பிடுகிறது.

தேவனுடைய ஜனங்கள் பாபிலோனை விட்டு புறப்படும் போது ஒரு புதிய துவக்கத்தைத் துவங்கினார்கள். இதற்கான ஆதார வசனங்கள் 11நாளா 36: 22,23 மற்றும் எஸ்ரா 1:1-3 வசனங்களில் காணலாம். இங்கு இஸ்ரயேலர்கள், எருசலேமுக்கு திரும்ப சென்று தங்களுடைய யேகோவா தேவனுடைய வீட்டை கட்டுவதற்கு பெர்சிய அரசனாகிய கோரேஸ் அனுமதிக் கொடுத்தார்.

ஆயினும் எஸ்ரா 2-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டது போல, தேசம் பாழாக்கப்படும், 70 வருடத்திற்கு பின் மீந்திருக்ககூடிய சிலர் மட்டுமே திரும்ப சென்றதாக வசனம் கூறுகிறது. (11நாளா 36:21) வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை நெருங்க நெருங்க இவர்களின் பயணத்தில் சந்தித்த கஷ்டங்கள் குறைந்தது. மேலும் தங்களுடைய சொந்த தேசத்தில் குடியிருந்து கொண்டு, யேகோவா தேவனுக்கு ஆலயம் கட்ட போகிறோம் என்ற மகிழ்ச்சிகரமான சிந்தையினால், பிரயாணத்தில் சந்தித்த பல கஷ்டங்களை எளிதாக மேற்கொண்டார்கள்.

ஆயினும், இந்தப் புதிய துவக்கம் பழைய பாடங்களோடு இணைந்திருக்கிறது. ஆகாய் புத்தகம் இப்படிப்பட்ட சில பாடங்களை விவரிக்கிறது. அதில் ஒரு பாடத்தை ஆகாய் முதல் அதிகாரத்தில் காணலாம். முன்னுரிமை கொடுக்கக்கூடிய காரியங்களைக் குறித்து அதில் சொல்லப்பட்டுள்ளது. சொந்த தேசத்திற்கு திரும்பி, யேகோவா தேவனுடைய வீட்டை கட்டக்கூடிய மீதியுள்ள இஸ்ரயேல் ஜனங்கள் தங்களுடைய வாழ்க்கையில், தேவனுடைய பணியைச் செய்வதற்கு சில பாடங்களை கற்றுக்கொள்ள வேண்டியதாய் இருந்தது. இதற்காக இஸ்ரயேல் ஜனங்கள் எகிப்தை விட்டு வனாந்திரத்தில் தேவனை தொழுது கொள்வதற்காக புறப்பட்ட போது பெற்ற பாடங்களுக்கு நாம் திரும்பி போக வேண்டியதாய் இருக்கிறது. (யாத்தி 16:2,3 எண் 11:4,5)

இவர்கள் தங்களுடைய சொந்த தேவைகளுக்கு முன்னுரிமை கொடுத்தார்கள். அதற்குப்பின் தேவனுடைய காரியங்களைச் செய்தார்கள். யேகோவா தேவனுடைய வீட்டில் தங்குவதே விருப்பமுள்ள முதன்மையான காரியம் என்று தாவீது உரைக்கிறார். "கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன், நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சிசெய்யும் படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்"(சங்கீ 27:4) ஜனங்கள் கற்று கொள்ள வேண்டியதாய் இருந்தது.

### யேகோவா தேவனுடைய வீடு நிறைவு பெறவில்லை

"ஆனாலும் ஆகாய் என்னும் தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தருடைய வார்த்தை உண்டாகி, அவர் சொல்லுகிறார்: இந்த வீடு பாழாய்க் கிடக்கும்போது, நீங்கள் மச்சுப்பாவப்பட்ட உங்கள் வீடுகளில் குடியிருக்கும்படியான காலம் இதுவோ? இப்போதும் சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்: உங்கள் வழிகளைச் சிந்தித்துப்பாருங்கள்"(ஆகாய் 1:3-5)

இங்கு திரும்பி வந்த இஸ்ரயேல் ஜனங்கள் மச்சுப்பாவப்பட்ட வீட்டில் குடியிருந்ததாக சொல்லப்படுகிறது. மச்சுப்பாவப்பட்ட வீடு என்பதற்கு, பலகையினால் உத்திரங்களை அடுக்கி அதின் மேல் கூரையை போடுவதை பொருள் படுத்துகிறது. 1இராஜா 6:9-11, 15,16 வசனங்களில் மச்சுப்பாவப்பட்ட யேகோவா தேவனுடைய வீடு என்று விவரிக்கப் படுகிறது. "இவ்விதமாய் அவன் ஆலயத்தைக்கட்டி, கேதுருமர உத்திரங்களாலும் பலகைகளாலும் ஆலயத்தை மச்சுப்பாவி முடித்தான்"(1இராஜா 6 :9)

மீதியிருந்த இஸ்ரயேல் ஜனங்கள், தங்களுடைய தேசத்திற்கு திரும்பிய போது, தங்களுக்காக மச்சுப்பாவிய வீடுகளை கட்டுவதற்கு முன்னுரிமை கொடுத்தார்கள். எருசலேம் நகரம் முழுவதும் எரிக்கப்பட்டதால் வீடுகளை கட்டுவது எவ்வளவு முக்கியம் என்று நாம் அறிந்திருக்கிறோம். (11இராஜ25:9, 11நாளா 36:19, எரே 52:13)

இப்படியிருக்க உங்கள் வழிகளை சிந்தியுங்கள்" என்று தேவன் ஏன் சொல்லவேண்டும் ? "உங்கள் வழிகளை சிந்தியுங்கள்" என்ற சொற்றொடர், உங்கள் வழிகளில் உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துங்கள்" என்று Interlinear Bible லில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. சிந்தியுங்கள் என்ற வார்த்தை "உள்ளான மனிதன், சிந்தனை அல்லது இருதயம்" என்றும் குறிப்பிடலாம்.

"வழிகள்" என்ற வார்த்தை பயணம், அல்லது பாதை என்று பொருள்படுகிறது. திரும்பி வந்த இஸ்ரயேலர்கள் தாங்கள் எதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பதை தேவன் இங்கு வலியுறுத்துகிறார். இவர்கள் பாபிலோனை விட்டு வெளியே வந்த காரணத்தை மறந்திருந்தார்கள். (எகோவா தேவனுடைய வீட்டை கட்டுவதற்கு )

ஆனால், "இந்த ஜனங்கள் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்கு ஏற்றகாலம் இன்னும் வரவில்லை என்கிறார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (ஆகாய் 1:2) என்று வாசிக்கிறோம்.

இந்த வசனம், மொழிபெயர்ப்பாளர்களுக்கு ஒரு குழப்பமாக இருந்தது. "காலம்" என்ற வார்த்தை மறுபடியும் இந்த வசனத்தில் சொல்லப்படுகிறதா என்ற சந்தேகம் வருகிறது. இந்த வசனத்தில் யேகோவா தேவனுடைய வீட்டின் வேலை நிறுத்தப்பட்டது என்று சொல்லப்பட்டதாக அநேகர் எண்ணுகிறார்கள். ஆனால் இது ஒரு தவறான கருத்தாகும்.

"அதினால் அந்த தேசத்து ஜனங்கள் யூதா ஜனத்தின் கைகளைத் தளரப்பண்ணி, கட்டாதபடிக்கு அவர்களைச் சங்கடப்படுத்தி, பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசின் காலமுழுதும், தரியு என்னும் பெர்சியா ராஜா அரசாண்டகாலமட்டும், அவர்கள் யோசனையை அவத்தமாக்கும்படி அவர்களுக்கு விரோதமாய் ஆலோசனைக்காரருக்குக் கைக்கூலி கட்டினார்கள்"(எஸ்றா 4:4,5) குறிப்பு - தேவனுடைய வீடு எருசலேம் மற்றும் அதின் மதில்களின் வேலைகள் நிறுத்தப்படவில்லை என்று மேற்கூறப்பட்டுள்ள வசனங்கள் குறிப்பிடுகிறது.

"அப்பொழுது அந்தச் செஸ்பாத்சார் வந்து, எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்தின் அஸ்திபாரத்தைப் போட்டான்; அந்நாள்முதல் இதுவரைக்கும் அது கட்டப்பட்டுவருகிறது; அது இன்னும் முடியவில்லை என்றார்கள்"( எஸ் 5:16)

"அப்பொழுது எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்தின் வேலை தடைபட்டு, பெர்சியாவின் ராஜாவாகிய தரியு ராஜ்யபாரம்பண்ணின இரண்டாம் வருஷமட்டும் நிறுத்தப்பட்டிருந்தது"( எஸ் 4:24)

இப்படியாக தேவனுடைய வீட்டு வேலை அஸ்திபாரம் போட்ட பின் தொடர்ந்து நடைபெற்றது. (எஸ்ரா 5:5-8, 6:8) அதின் அஸ்திபாரம் கட்டத் துவங்கி (எஸ்ரா 3:10-12) செருபாபேல் மற்றும் யோசுவா, தொடர்ந்து கட்டும் வரைக்கும் தடைபடவில்லை. அவர்களின் கரங்கள் தளர்ந்து போயிருந்தாலும் வேலை நிறுத்தபடவில்லை. ஆகவே, யேகோவா தேவனுடைய வீட்டு வேலை நிறுத்தப்பட்டதாக (ஆகாய் 1:2)வசனம், குறிப்பிடவில்லை.

"உங்கள் வழிகளை சிந்தியுங்கள்" என்ற இந்தச் சொற்றொடருக்கான நியாயமான காரணத்தை தெளிவுப்படுத்துவதற்கு இரண்டு மற்றும் நான்காம் வசனங்களில் உள்ள வார்த்தைகளின் விளக்கம் நமக்கு உதவியாக இருக்கும். "பாழாய் கிடக்கிறது" என்ற வார்த்தை ஆகாய் 1:4வசனத்திலும் 9ம் வசனத்திலும் காணப்படுகிறது. இதற்குச் சாய்ந்துபோகுதல், வீணாகுதல் அல்லது பாழாக்கப்படுதல் என்று பொருள். அதாவது தேவனுடைய வீடு பயன்படுத்தப்படாததினால் வீணாய் கிடக்கிறது. மேலும் அதில் ஒருவரும் குடியிருக்கவில்லை என்பதையும் காட்டுகிறது. (எரேமியா 33:10, 12 எசேக்கியல் 36:38) அப்போது தேவனுடைய வீடு மச்சுப்பாவப்படாமலும் முடிவு பெறாமலும் இருந்தது.

அடுத்து, "ஏற்ற காலம்" என்று ஆகாய் 1:2 வசனத்தில் சொல்லப்படும் வார்த்தை மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. (ஸ்டிராங்க்ஸ் - 6256). இது ஒரு குறித்த காலத்தை பொருள்படுத்தும். இந்த குறித்த காலத்தை வலியுறுத்துவதற்காக அதே வசனத்தில் இரண்டு முறை இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மீண்டும் "காலம்" என்று காணப்படுகிற வார்த்தை ஜனங்கள் சொல்லக்கூடிய இரண்டாம் வசனத்தையும், தேவன் சொல்லக்கூடிய நான்காம் வசனத்தையும் ஒப்பிட்டு பார்க்கிறது.

இறுதியாக, ஆகாய் 1:2ம் வசனத்தில் சொல்லப்படும் "வரவு" என்ற வார்த்தை மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. (ஸ்டிராங்கஸ் 935 ) இதற்கு உள்ளே நுழைவது, உள்ளே செல்வது என்று பொருள். நீதியுள்ள இஸ்ரயேல் ஜனங்கள் யேகோவா தேவனுடைய வீட்டிற்குள் நுழைந்து தேவையான வேலையை செய்யும் படி அவர் கூறுகிறார். இதை குறித்து ஆகாய் 1:14 வசனத்தில் வாசிக்கலாம்."பின்பு கர்த்தர் செயல்த்தியேலின் குமாரனாகிய செருபாபேல்

என்னும் யூதாவின் தலைவனுடைய ஆவியையும், யோத்சதாக்கின் குமாரனாகிய யோசுவா என்னும் பிரதான ஆசாரியனுடைய ஆவியையும், ஜனத்தில் மீதியான எல்லாருடைய ஆவியையும் எழுப்பினார்; அவர்கள் வந்து, தங்கள் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் ஆலயத்திலே வேலைசெய்தார்கள்.

இரண்டாம் வசனம் மற்றும் நான்காம் வசனம் பற்றி சரியாக புரிந்து கொண்டால் தேவனுடைய வீட்டின் வேலை தொடர்ச்சியாக நடைபெற்றதை நாம் அறிந்து கொள்ளலாம். நான்காம் வசனத்தில் மீண்டும், வந்த இஸ்ரேயல் ஜனங்கள் மச்சுப்பாவி வீடுகளில் குடியிருந்ததை தேவன் காட்டுகிறார். அவைகளை கட்டுவது மாத்திரமல்ல. அதன் கூரைகளையும் மச்சுப் பாவி, வீட்டிற்குள் சகல வேலைகளையும் முடித்தார்கள் என்பதை தேவன் காட்டுகிறார். இப்படியாக, முழுமையாக கட்டப்பட்ட தங்களுடைய வீட்டிற்குள் பாபிலோனிலிருந்து திரும்பி வந்த இஸ்ரயேல் ஜனங்கள் நுழைந்தார்கள். ஆனால் தேவனுடைய வீட்டின் வேலையை செய்தவற்கு அவர்கள் செல்லவில்லை. அவர்கள் தங்களுடைய வீட்டின் வேலைகளை முடித்து அதில் குடியிருந்தது போல தேவனுடைய வீட்டின் வேலை முடிவடைந்து. அதில் அனைவரும் குடியிருக்க வேண்டும் என்று தேவன் விரும்பினார். அதற்காக தேவன் ஆகாய் தீர்க்கதரிசியை அனுப்பி தன்னுடைய வீட்டின் வேலைகளை முடிப்பதற்கு காலம் வந்தது, என்று சொல்லச் சொன்னார். இதற்காக அவர்கள் தங்களுடைய வழிகளை சிந்திக்க வேண்டியவர்களாய் இருந்தார்கள்.

**"உங்கள் வழிகளை சிந்தியுங்கள்"**

2 மற்றும் 4- ம் வசனத்தை புரிந்து கொள்ளும் பட்சத்தில் ஆகாய் 1:7 வசனத்தில் "உங்கள் வழிகளை சிந்தியுங்கள்" என்ற சொற்றொடர் 2-வது முறையாக காணப்படுவதின் காரணத்தை அறிந்து கொள்ளலாம். தங்களுடைய வழிகளை ஏன் சிந்திக்க வேண்டும் என்பதை குறித்து ஆகாய் இங்கு விவரிக்கிறார். அந்த ஜனங்களுக்கு வந்த பிரச்சனையையும் அந்தப் பிரச்சனையினால் அவர்கள் படும் பாட்டையும் அந்தச் சூழ்நிலையிலிருந்து அவர்கள் தீர்வு காணும் விதத்தையும் குறித்து அந்த ஜனங்களுக்கு ஆகாய் கூறினார்.

"உங்கள் வழிகளைச் சிந்தித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.நீங்கள் மலையின்மேல் ஏறிப்போய், மரங்களை வெட்டிக்கொண்டுவந்து, ஆலயத்தைக் கட்டுங்கள்; அதின்பேரில் நான் பிரியமாயிருப்பேன், அதினால் என் மகிமை விளங்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.அதிகமாய் வருமென்று நீங்கள் எதிர்பார்த்திருந்தும், இதோ, கொஞ்சம் கிடைத்தது; நீங்கள் அறுத்து வீட்டுக்குக் கொண்டுவந்தும், நான் அதை ஊதிப்போடுகிறேன்; எதினிமித்தமென்றால், என் வீடு பாழாய்க்கிடக்கும்போது, நீங்கள் எல்லாரும் அவனவன் தன்தன் வீட்டிற்கு ஓடிப்போகிறீர்களே, இதினிமித்தமே என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." (ஆகாய் 1:7-9)

மீண்டும் மரங்கள் என்ற வார்த்தை - உங்கள் வழிகளை சிந்தியுங்கள் என்ற பகுதியில் காணப்படுகிறது. தேவனுடைய வீட்டை கட்டு வதற்கான கேதுரு மரங்களை லீபனோனிலிருந்து எடுத்து வருவதற்கு பெர்சிய இராஜாவாகிய கோரேஸ் உதவி செய்தார். "அப்பொழுது பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ் தங்களுக்குப் பிறப்பித்த உத்தரவின்படியே அவர்கள் கல்தச்சருக்கும் தச்சருக்கும் பணத்தையும், லீபனோனிலிருந்து கேதுருமரங்களைச் சமுத்திரவழியாய் யோபாமட்டும் கொண்டுவரச் சீதோனியருக்கும் தீரியருக்கும் போஜனபானத்தையும் எண்ணெயையும் கொடுத்தார்கள்." (எஸ்ர 3:7) மரங்களை சேகரிப்பது ஒரு பிரச்சனையாக இருக்கவில்லை ஆனால் அந்த மரங்களினால் அவர்கள் செய்த காரியங்கள், பிரச்சனையாய் அமைந்தது.

ஆகாய் 8- ம் வசனத்தில் "கொண்டு வந்து" என்ற வார்த்தை மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. (ஸ்டிராங்க்ஸ் 935) இதே வார்த்தை "வரவு" என்று 2-ம் வசனத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. "மலை" என்ற வார்த்தை மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. (ஸ்டிராங்கள் 2202 ) எபிரெயரில் இது குறிப்பிட்ட மலையை பற்றிக் கூறுகிறது. அதாவது யேகோவா தேவனுடைய வீடு இருக்கும் மலையை குறிக்கிறது. ஜனங்கள் அந்த மலைக்கு ஏறிப்போய் மரங்களை வெட்டி, தேவனுடைய வீட்டை கட்ட வேண்டும் என்று இங்கு குறிப்பிடவில்லை. இவர்கள் மரங்களை எடுத்துக்கொண்டு மலைக்கு ஏறி தேவனுடைய வீட்டிற்குள் நுழைந்து, அவருடைய வீட்டை கட்ட வேண்டியவர்களாய் இருந்தார்கள். இதுவே சரியான மொழிபெயர்ப்பாகும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் தேவனுடைய வீட்டை கட்டுவதற்கான மரங்கள் ஜனங்களின் வீடுகளில் இருந்தது. மச்சுப் பாவின வீடுகளில் அவர்கள் குடியிருப்பதை தேவன் தடுக்கவில்லை. ஆனால் தேவனுடைய வீட்டை கட்டக் கூடிய பொருட்களை, அவர்கள் எவ்வாறு பயன்படுத்தினார்கள் என்பதே இங்கு பிரச்சனை யானது. தேவனுடைய வீட்டை மீண்டும் கட்டுவதற்காக அவர்கள் பாபிலோனை விட்டு வந்த அடிப்படையான காரணம், தங்களுடைய சொந்த

விருப்பதைக் காட்டிலும் முக்கியமானது என்று அவர்களுக்கு புரிய வைக்க தேவன் உதவி செய்தார்.

மீண்டும் வந்த இஸ்ரயேல் ஜனங்கள் தங்களுடைய ஆவிக்குரிய தேவைகளைக் காட்டிலும் மாம்சத்திற்குரிய தேவைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார்கள் என்று ஆகாய் காட்டினார். இந்தச் சிந்தனை ஆகாய் 1:6ம் வசனத்தில் மீண்டும் காண்பிக்கப்படுகிறது. தங்களுடைய வழிகளை சிந்திப்பதற்காக தேவன் அவர்களுடைய முயற்சிகளை ஆசீர்வதிக்காமல் விட்டுவிட்டார். இந்தப் பிரச்சனைக்குரிய தீர்வு 8-ம் வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. தேவனுடைய வீட்டை கட்டுவதற்கான மரங்களை இவர்கள் தங்களுடைய வீட்டில் வைத்திருந்தார்கள். அந்த மரங்களை தங்களுடைய வீடுகளிலிருந்து எடுத்து தேவனுடைய வீட்டை கட்டிமுடிக்க வேண்டியவர்களாய் இருந்தார்கள்.

ஜனங்களின் சிந்தனைகளை பிரதிபலிக்க தேவன் முயற்சித்தார். உங்கள் வழிகளை சிந்தியுங்கள் என்று அவர்களின் இருதயத்தை நோக்கி சொன்ன வார்த்தைகளுக்கு 5 மற்றும் 7-ம் வசனத்தில் ஆதாரம் காணப்படுகிறது. தம்முடைய வீட்டை கட்டுவதற்கு தொடர்ந்து குறிப்பிட்ட கட்டளைகளை 8-ம் வசனத்தில் தேவன் அவர்களுக்கு கூறுகிறார். ஆனால் தம்முடைய வேலையை ஜனங்கள் முடிக்கவில்லை என்பதால் அவர் செய்த காரியங்களை 9 முதல் 11 வசனங்களில் காணலாம். ஜனங்கள் பாபிலோனை விட்டு புறப்பட்டு யேகோவா தேவனுடைய வீட்டை கட்டுவதற்கான பொறுப்புக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று தேவன் அவர்களுக்கு கற்பித்தார்.

தேவனுடைய வேலைகளை நிறைவேற்றுவதில் அவர்கள் அடைந்த தோல்வியினால் சந்தித்த பிரச்சனைகள் 6-ம் வசனத்தில் கூறப்படுகிறது. ஆகவே அவர்களின் வழியை மீண்டும் ஒருமுறை ஆராய்ந்து அவர்களின் பிரச்சனை என்னவென்று கண்டறிய வேண்டியவர்களாய் இருந்தார்கள். தங்களுடைய பிரச்சனைகளுக்கான தீர்வை தங்களுடைய இருதயத்தின் நோக்கங்களிலிருந்து ஜனங்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்று தேவன் முயற்சித்தார். இவர்கள் தேவனுக்கு முன்னுரிமை கொடுக்கவில்லை. இவர்கள் தேவனுடைய வீட்டிற்குச் செல்வதைக் காட்டிலும் தங்களுடைய வீட்டிற்குச் செல்லுவதற்கு முன்னுரிமை கொடுத்ததினால், அவர்களின் முயற்சி பலனளிக்கவில்லை.


### திருத்தம் செய்வது எளிதல்ல

தேவனோடு கொண்டுள்ள உறவின் முக்கியத்துவத்தை அந்த ஜனங்களுக்கு கற்பிப்பதற்கு தேவன் ஆகாய் தீர்க்கதரிசியை அனுப்பி அவர்களின் வழிகளை சிந்திக்கும் படி துரிதப்படுத்தினார். இஸ்ரயேலில் மீந்திருந்தவர்கள் தங்களுடைய அடிப்படை தேவைகளுக்கும் பேராசைகளுக்கும் உள்ள வித்தியாசத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்பினார். நாமும் இதில் வெகு ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட திருத்தங்கள் மிக சுலபமாக ஏற்றுகொள்ளப்படுவதில்லை. பாபிலோனை விட்டு வந்தவர்கள் தங்களுடைய நோக்கத்தை மறந்தவர்களாக தங்களுடைய சுய விருப்பத்திற்கு மனதை செலுத்தினார்கள். அவர்கள் தேவனுடைய வீட்டை கட்ட வேண்டும் என்ற முதன்மையான நோக்கத்தை விட்டு விட்டார்கள். அதே போல நாமும் தேவனுடைய ஆலயமாக கட்டப்படுவதை விட்டு விட்டு நம்முடைய சொந்த வழிகளுக்கும் இலக்குகளுக்கும் முன்னுரிமை கொடுத்து தேவனுடைய பாதுகாப்பில் நம்முடைய சித்தங்களை நிறைவேற்ற முயற்சிக்கிறோம். ஆனால் நம்முடைய சித்தத்தை அல்ல தேவனுடைய சித்தத்தையே நிறைவேற்றுவோம் என்று உடன்படிக்கை செய்த நாம் தேவனுடைய சித்தத்தை மட்டுமே நிறைவேற்ற கடமைப்பட்டுள்ளோம்.


"இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு, மற்றவனை அசட்டைபண்ணுவான்; தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது.ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும்; என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகாரத்தைப்பார்க்கிலும் ஜீவனும், உடையைப்பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா? ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப்பாருங்கள்; அவைகள் விதைக்கிறது மில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்துவைக்கிறதுமில்லை; அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்; அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா? கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்? உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன? காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப்பாருங்கள்; அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை; என்றாலும், சாலொமோன் முதலாய்த் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப்போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன். அற்ப

விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா? ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று, கவலைப்படாதிருங்கள். இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும். ஆகையால், நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுபோதும்."(மத் 6:24-34) என்று தேவனுடைய வேலைகளில் நம்முடைய வழிகளை சிந்தித்து, தேவனுக்கு எவ்வாறு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று நம்முடைய ஆண்டவராம் இயேசு அற்புதமான எடுத்துக் காட்டுகளைக் கொடுத்திருக்கிறார்.

முதலில் தேவனுடைய வேலைகளை விசுவாசத்தோடு நடப்பித்தால் அதற்குத் தேவையான சகல காரியங்களையும் தேவன் கொடுப்பார், என்ற பாடத்தை பாபிலோனை விட்டு வந்த இஸ்ரயேர்களுக்கு தேவன் கற்பித்தார். தங்களுடைய தேவைகளை தேவன் நன்கு உணர்ந்திருக்கிறார் என்பதை அவர்கள் கற்றுக் கொள்ள வேண்டியதாய் இருந்தது. தேவனுக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்று விரும்பக்கூடிய யாவருக்கும் இந்தக் கோட்பாடு பொருந்தக் கூடியதாய் இருக்கிறது. இதை குறித்து அப்போஸ்தலராகிய பவுல் மிகத் தெளிவாக விளக்கம் அளித்தார் - நீங்கள் செய்ய வேண்டிய வேலைகளை கவனமாக செய்யுங்கள். மற்றவைகளை தேவனிடம் விட்டு விடுங்கள். " சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன். ஆகையால், நம்மில் தேறினவர்கள் யாவரும் இந்தச் சிந்தையாயிருக்கக்கடவோம்; எந்தக் காரியத்திலாவது நீங்கள் வேறே சிந்தையாயிருந்தால், அதையும் தேவன் உங்களுக்கு வெளிப்படுத்துவார்."(பிலி 3:13-15)



Haggai, marble bust, by Giovanni Pisano, 1285-1297.



Zechariah, co-prophet with Haggai (by Michelangelo)

இரட்சிப்பு

# இதோ இந்த மனிதன்



"அதற்குச் சீமோன் பேதுரு: ஆண்டவரே, என் கால்களைமாத்திரமல்ல, என்கைகளையும் என் தலையையும்கூடக் கழுவவேண்டும் என்றான்" யோவான் 19:5

**David Christiansen**

"இதோ இந்த மனிதன்" என்று பிலாத்து யூதர்களிடம் சொன்னார். குறிப்பாக சொல்லப் போனால் இயேசுவை மரண தீர்ப்புகுள்ளாக்க வேண்டுமென்று விரும்பிய, இஸ்ரயேல் மத தலைவர்களிடம் பிலாத்து இந்த வார்த்தையைச் சொன்னார். பிரதான ஆசாரியர்களும், முக்கியஸ்தர்களும் இந்த வார்த்தையை கேட்டார்கள். அவர்களுக்கு முன்பாக இயேசு செந்நிற வஸ்திரம் தரித்திருந்தவராய், முள் முடியினால் ஒரு கிரீடத்தை வைத்தவராய், ரோம வீரர்களினால் அவர் பரியாசம் பண்ணப்பட்டார். இயேசு அடிக்கப்பட்டு நொறுக்கப்பட்டு மிகவும் இழிவாக தூஷிக்கப்பட்டார். இவைகளை யூத மத குருக்கள் கண்டார்கள்.

யூத மத தலைவர்கள் இதை பார்த்தவுடன் என்ன சொன்னார்கள் ? கபடற்ற அந்த உத்தம மனுஷன் மேல் அவர்கள் இரக்கம் பாராட்டினார்களா ? கொலை பாதகனாகிய பரபாசை சிலுவையில் அறைந்து, இயேசு கிறிஸ்து விடுதலை படவேண்டுமென்பதை மனதால் உணர்ந்து, அவர்கள் தங்கள் சிந்தனைகளை மாற்றி கொண்டார்களா ? இவரிடத்தில் ஒரு குற்றமும் காணவில்லையே என்று பிலாத்து மூன்று முறை சொன்னதை அவர்கள் செவி கொடுத்தார்களா ? இல்லையே. இவைகளுக்கு பதிலாக "அவனை சிலுவையில் அறையும்" என்று அதிகதிகமாய் அனைவரும் கூக்குரலிட்டார்கள்.

**பரபாஸ்**

பரபாஸ் என்ற நபரை குறித்து நாம் அதிகமாக பேசுவதில்லை. உண்மையான வாழ்க்கை என்னும் நாடகத்தில், இவர் மௌனமான ஒரு கதாபாத் திரமானார். ஆனால் அவருடைய பிரசன்னம் இந்தக் காட்சியில் ஒரு மிகப் பெரிய திருப்பத்தை ஏற்படுத்தியது. இயேசு கிறிஸ்து தம்முடைய ஜீவனை சிலுவையில் கொடுப்பதற்கு பரபாஸின் கதா பாத்திரம், உண்மையில் அவசியப்படாத ஒன்றாகும். ஆனால் பரபாஸ் ஒரு முக்கிய பாத்திரமாக பங்கெடுத்தார். ஒரு வேளை பரபாஸை பொறுத்தவரைக்கும் ஆழமான பாடங்களை தேவன் நமக்காக வைத்திருக்க வேண்டும்.

பரபாஸ் என்ற பெயருக்கு எஜமானன் அல்லது தேவ குமாரன் என்று பொருள். இதன் அர்த்தம் என்ன ? "எஜமானன் அல்ல பிதாவின் குமாரன்" என்று வசனங்களில் யாரை குறிப்பிடப்படுகிறது ? இயேசுவே தேவனுடைய குமாரன் என்று அநேக இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. எடுத்துக்காட்டாக "தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் ஆரம்பம்"(மாற் 1:1). ஆனால் மற்றொருவரையும் தேவனுடைய குமாரன் என்று வசனம் கூறுகிறது." ஏனோஸ் சேத்தின் குமாரன்; சேத் ஆதாமின் குமாரன்; ஆதாம் தேவனால் உண்டானவன் Adam son of God -என்பதே சரியான மொழி பெயர்ப்பாகும்.(லூக் 3:38) இந்தச் சரித்திரத்தில் பரபாஸின் பிரசன்னம் மிகப் பெரிய தேவனுடைய திட்டத்தில் ஒரு சிறிய பங்கை பெற்றுள்ளது. இயேசு ஆதாமுக்குரிய ஈடு கிரயத்தை செலுத்தினார் என்று வசனங்கள் நமக்கு கற்பிக்கிறது. பரிபூரண ஜீவனுக்கு பதிலாக பரிபூரண ஜீவன். தேவனுடைய ஒரு குமாரனுக்கு பதிலாக, தேவனுடைய மற்றொரு குமாரன் ஈடு கிரயத்தை செலுத்தினார். தேவனுடைய குமாரனாகிய பரபாஸின் இடத்தில் இயேசு தன்னுடைய ஜீவனை கொடுத்தார். ஆகவே பரபாஸ் ஒரு நியாயமான காரணத்திற்காக இந்தக் காட்சிக்குள் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். மேலும் ஈடுபலியை பொறுத்த வரையில் பரபாஸ் மற்றுமொரு முக்கிய பங்கை பெற்றிருக்கிறார்.

**பரபாஸின் குற்றம்**

"கலகம்பண்ணி அந்தக் கலகத்தில் கொலைசெய்து, அதற்காகக் காவல்பண்ணப்பட்டவர்களில் பரபாஸ் என்னப்பட்ட ஒருவன் இருந்தான்" (மாற் 15:7) பரபாஸை பற்றி குறிப்பிட்ட மூன்று காரியங்களை கவனித்து பார்க்கவேண்டும். அவன் சிறை பிடிக்கப்பட்டிருந்தான், அவன் கலகக்காரனாய் இருந்தான் மற்றும் அவன் ஒரு கொலை பாதகனாய் இருந்தான். இம்மூன்று காரியங்களையும் ஆதாமுக்கு நாம் எவ்வாறு ஒப்பிட்டு பார்ப்பது ?

ஆதாம் துவக்கத்தில் விடுதலை பெற்றிருந்தார். ஏதேன் தோட்டத்தில் சுதந்திரமாக உலாவினார், பிதாவாகிய தேவனை முழு சுதந்திரத்தோடு தொழுது கொண்டிருந்தார் மற்றும் மரணத்திலிருந்தும் சுதந்திரம் பெற்றிருந்தார். அதேபோல பரபாசும் துவக்கத்தில் ரோம அதிகாரத்தின் கீழ் சுயாதீனமாக இருந்தான். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்ற, தங்களுடைய

முற்பிதாக்களின் தேவனை தொழுது கொள்ளவும், சுயாதீனம் பெற்றிருந்தான். ரோமர்களின் எந்த விசேஷித்த தீர்ப்பிற்கும் உட்படாமல் அவன் சுதந்திரமாக வாழ்ந்து வந்தான். ஆனால் ஆதாமும் பரபாசும் சட்டத்தை முறித்த போது இருவரும் மரண தீர்ப்பைப் பெற்றார்கள்.

பரபாஸ் ரோமாபுரிக்கு எதிராக கலகம் செய்து கொண்டிருந்தான். ஆதாம் எந்த விதத்திலாவது கலகம் செய்தாரா ? ஆம், தேவனுக்கு விரோதமாக கலகம் செய்து புசிக்க வேண்டாம் என்று விலக்கின கனியை புசித்தார். "தேவன் ஆதாமை ஏதேன் தோட்டத்திலிருந்தும், அவருடைய இரக்கங்கிளி லிருந்தும் புறக்கணித்தார். அதற்குப் பின் அவர் எந்தச் சூழ்நிலையிலும் நேசிக்கப்பட்ட ஒரு சிருஷ்டியாகவும், ஒரு சிநேகிதனாகவும் பிதாவாகிய தேவன் தொடர்பு கொள்ள வில்லை. ஏனெனில் அவர் தேவனுக்கு விரோதமாக அவர் கொடுத்த சட்டத்தை மீறினார். நீ உன் பாதையை தெரிந்து கொண்ட படியினால் அதில் நீ நடந்து கொள் என்று மௌனமாக சொல்லி ஆதாமை அனுமதித்து விட்டார்" (Reprints pg.1176)

கலகத்தின் போது பரபாஸ் கொலை செய்து விட்டதாக மாற் 15:7ம் வசனம் குறிப்பிடுகிறது. ஆதாம் தேவனுக்கு விரோதமான கலகம் செய்ததில் கொலை செய்தாரா? ஆம், ஆதாமின் கீழப்படியாமையினால், அவருக்குள் பிறந்த ஒவ்வொரு மனுஷனும் மரணத்திற்குள் வழிநடத்தப்பட்டார்கள். "தேவன் ஒரு பாவியையும், பாவத்தின் இயல்பான பின் விளைவுகளையும், பாவத்தின் தீர்ப்பையும் மாதிரியாக முன்வைக்க தீர்மானித்தார்." (Reprints pg.1176) "பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்" (ரோம 6:23) இப்படியாக சகல ஜனங்களும் மரிப்பதற்கு ஆதாமின் கலகம் நேரடியான காரணமாக இருந்தது.

மாற் 15:7 ம் வசனத்தில் ".. அதற்காகக் காவல்பண்ணப்பட்டவர்களில் .." என்ற பகுதியை கவனிக்கலாம். ஆதாமை கலகம் செய்ய தூண்டியது யார் ? ஏவாள். இவர்கள் இருவரும் தேவனுக்கு கீழபடியவில்லை. இவர்கள் கட்டப்பட்டார்களா? அல்லது சிறையில் அடைக்கப்பட்டார்களா ? ஆம், இவர்கள் பாவம் மற்றும் மரணத்தின் கட்டுகளுக்குள் அகப்பட்டார்கள். பரபாஸ் தன்னுடைய கூட்டாளிகளோடு கலகம் செய்ததற்கு, இதை நாம் ஒப்பிடலாம். இவர்கள் சொல் அர்த்தமான சிறையில் இவர்கள் தங்களின் விதியை (மரணம்) எண்ணி காத்திருந்தார்கள். இப்படியாக ஆதாமுக்கும் பரபாசுக்கும் இடையில் உள்ள ஒற்றுமையைக் காணலாம். இவர்கள் ஒவ்வொருவருக்காக இயேசு தம்முடைய ஜீவனை நேரடியாக கொடுத்தார். இந்த உலகத்தின் இரட்சிப்புக்காக தேவனுடைய திட்டத்தின் மற்றொரு பகுதியை இது தெளிவாக சித்தரிக்கிறது.

**ஒரு கைதி விடுவிக்கப்படுதல்**

ஒரு கைதியை பஸ்கா காலத்தில் விடுதலை செய்வதற்கு மட்டுமே வேதாகமம் அனுமதிக்கிறது. இது இயேசுவை பிடித்து அவரை சிலுவையில் அறையக்கூடிய நாளாக இருந்தது. "காவல்பண்ணப்பட்டவர்களில் எவனை விடுதலையாக்கவேண்டுமென்று ஜனங்கள் கேட்டுக்கொள்வார்களோ,அவனை அவர்களுக்காக விடுதலையாக்குவது பண்டிகைதோறும் தேசாதிபதிக்கு வழக்கமாயிருந்தது.அப்பொழுது காவல்பண்ணப்பட்டவர்களில் பரபாஸ் என்னப்பட்ட பேர்போன ஒருவன் இருந்தான். பொறாமையினாலே அவரை ஒப்புக்கொடுத்தார்கள் என்று பிலாத்து அறிந்து, " (மத் 27: 15-17)

(மாற் 15:7, யோவ 18:39, லு 23:17..,"பண்டிகை தோறும் அவர்களுக்கு ஒருவனை அவன் விடுதலையாக்குவது அவசியமாயிருந்தபடியால் அப்படிச் சொன்னான்." லூக்காவில் உள்ள இந்தப் பகுதி சரியான பதிவுகள் இல்லை. வத்திக்கன் கைபிரதிகளில் இந்த வசனம் காணப்படாததினால், இந்த வசனம் முழுமையாக புறக்கணிக்கப்படுகிறது. இன்னும் மற்ற மொழிபெயர்ப்புகளும் இந்த வசனத்தை அங்கீகரிப்பதில்லை.

இப்போது மத்தேயு சுவிசேஷத்தில் இந்த வசனம் எவ்வாறாக எழுதப்பட்டிருக்கிறது என்று காணலாம் "காவல்பண்ணப்பட்டவர்களில் எவனை விடுதலையாக்கவேண்டுமென்று ஜனங்கள் கேட்டுக்கொள்வார்களோ, அவனை அவர்களுக்காக விடுதலையாக்குவது பண்டிகைதோறும் தேசாதிபதிக்கு வழக்கமாயிருந்தது" (மத் 27:15)உங்களுக்கு ஒரு வழக்கம் உள்ளதே என்று பிலாத்து கூட்டத்தை பார்த்து சொன்னார் என்று யோவான் 18:39 ம் வசனம் குறிப்பிடுகிறது. அதே நேரத்தில் பிலிப்பு மொழிபெயர்ப்பு, "நான் உங்களுக்காக ஓர் ஏற்பாடு செய்துள்ளேன் என்று குறிப்பிடுகிறது. இவைகள் அனைத்தையும் நாம் காணும்போது, இந்தப் பழக்கம் முன்னதாகவே கொடுக்கப்பட்டு, ரோம அரசாங்கத்தின் அனுமதியினால் பயன்படுத்தப்பட்டு, யூதர்கள் அதற்குப் பழக்கப்பட்டிருந்ததாக தெரிய வருகிறது.

ஆயினும் ஒரு ரோம வழக்கத்தின்படி பாலஸ்தீனாவில் நடைபெற்று வந்தது. ஒரு சிறை கைதியை விடுதலை செய்வது ஒரு சட்டமாக அல்ல ஒரு வழக்கமாக இருந்தது. இயேசுவையா அல்லது பரபாஸையா, யாரை விடுதலை செய்ய வேண்டும்

என்று பிலாத்து கேட்கவில்லை. ஆனால் இந்த ஜனங்கள் சரியான பாடத்தை சரியான நேரத்தில் கற்றுகொள்வதற்கு இந்தச் சம்பவங்கள் ஒருமித்து நடந்தது. தேவனுடைய குமாரன் என்று பொருள்பட கூடிய பரபாஸ் அந்நேரத்தில் மரணத்தீர்ப்பு பெற்று சிறையில் இருந்தார். அவருடைய குற்றங்கள் அனைத்தும் ஆதாமின் குற்றத்திற்கு சரியாக பொருந்தியது. அவரைப் பற்றி இந்தச் சம்பவத்திற்கு முன்பாகவோ பின்பாகவோ கேள்வி படவில்லை.

ரோம ஆளுநர்கள் மற்றும் தலைவர்கள் பொதுவாக இரக்கமற்றவர்களாகவும், கொடூரமுள்ள வராகவும் இருப்பது வழக்கம். ராஜாவாக பிறக்கக் கூடிய ஒரு புதிய குழந்தையை கொல்பவர்களாக, பெத்லகேமில் பிறந்த இரண்டு வயதிற்குட்பட்ட குழந்தைகளை ஏரோது கொன்றது நம் நினைவிற்கு கொண்டு வருவோம். ஆயினும் பிலாத்து ரோம ஆளுநராக இருந்த போதிலும், இயேசுவின் கபடற்ற நிலையை உணர்ந்து அவரை விடுவிக்க வகை தேடினார். இது பஸ்காவின் போது நடந்தது. இவைகள் அனைத்தும் ஏற்ற நேரத்தில் ஒருமித்து நடப்பதை காணலாம். இந்தச் சூழ்நிலையில் தேவனுடைய வழிநடத்துதலையும் அவருடைய திட்டம் நிறைவேறுதலையும் காணலாம்.

**இயேசுவின் மறுமொழி**

இயேசு பரியாசம் பண்ணப்பட்டு, அடிக்கப்பட்டு, அவமானப் படுத்தப்படும்போது அவர் எவ்வாறு பதிலளித்தார். மற்ற இராஜாக்கள் எவ்வாறு பதிலளித்திருப்பார்கள். ஓர் இரத்த சாட்சியாக மரிக்கப்போவதை அறிந்து, எவ்வளவு பெருமையாக இருந்திருக்கக்கூடும். அல்லது இப்படிப்பட்ட சிலுவை மரணத்தை அடைவதற்கு முன் எப்படி பயந்திருக்கவேண்டும். இயேசு என்ன செய்தார்? அவர் உதவிக்காக கதறி அழுதாரா? "அவர் நெருக்கப் பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப்படும்படி கொண்டுபோகப் படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்"(ஏசா 53:7)

இந்த வார்த்தைகளை எத்தியோப்பிய தேசத்து மந்திரி வாசித்துக்கொண்டு சென்றார். "அந்தப்படி அவன் எழுந்துபோனான். அப்பொழுது எத்தியோப்பியருடைய ராஜஸ்திரீயாகிய கந்தாகே என்பவளுக்கு மந்திரியும் அவளுடைய பொக்கிஷமெல்லாவற்றிற்கும் தலைவனுமாயிருந்த எத்தியோப்பியனாகிய ஒருவன் பணிந்து கொள்ளும்படி எருசலேமுக்கு வந்திருந்து;ஊருக்குத் திரும்பிப்போகும்போது, தன் இரதத்திலே உட்கார்ந்து, ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசித்துக்கொண்டிருந்தான்""அவன் வாசித்த வேதவாக்கியம் என்னவென்றால்: அவர் ஆட்டைப்போல அடிக்கப்படுவதற்குக் கொண்டுபோகப்பட்டார்; மயிர்க்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டியைப் போல அவர் தமது வாயைத் திறவாதிருந்தார். அவர் தம்மைத் தாழ்த்தினபோது அவருடைய நியாயம் எடுத்துப்போடப்பட்டது; அவருடைய ஜீவன் பூமியிலிருந்து எடுபட்டுப்போயிற்று; அவருடைய வம்சத்தை யாரால் சொல்லிமுடியும் என்பதே"(அப் 8:27,28,32,33)

அந்த மனுஷன் சாந்தமும், அமைதியும் பயமற்ற ஒரு மனுஷனை குறித்து வாசித்து வந்தார். அவர் யார் என்பதை அந்த மந்திரி அறியாதிருந்தார். அவரைப் பற்றி பிலிப்புவிடம் கேட்டு அறிந்து கொண்டார். அந்த மந்திரியின் இருதயம் பிலிப்புவின் விளக்க உரையினால் ஊக்குவிக்கப்பட்டது. உடனடியாக அவர் ஞானஸ்நானம் பெற்றார். பயமற்ற இந்தச் சாந்தமுள்ள மனுஷனை குறித்து கேள்விபட்ட போது நம்முடைய இருதயங்கள் பொங்கி எழவில்லையா? இப்படிப்பட்ட வார்த்தைகள் ஏதும் பதிவு செய்யபடவில்லை. ஆயினும் அந்த எத்தியோப்பியா மந்திரியின் இருதயத்தில் இருந்து - "இதோ அந்த மனுஷன்" என்று இயேசுவை குறித்த தீர்க்கதரிசனத்தை நாம் வாசிக்கலாம்.

எருசலேமின் தலையெழுத்தை மாற்றக்கூடிய அந்த நாள் ரோம வீரர்களுக்கு அற்பமாய் தோன்றியிருக்கும். இதை மற்றொரு சிலுவை மரணமாக அவர்கள் எண்ணியிருக்ககூடும். ஆனால் இந்தச் சிலுவை மரணம் யூத தலைவர்களுக்கு மிகப் பெரிய காரியத்தை பொருள்படுத்தியது. தங்களை பழிவாங்கிக் கொண்டிருந்தவரை கொன்று விட்டார்கள். அவரவர் தங்களுடைய வேலைகளை தொடர்ந்து செய்தனர். இயேசுவின் சீஷர்களுக்கு இந்த மரணம் பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தியது. அவர்களுடைய போதகரும், வழிகாட்டியும், அன்பான குருவும், தங்களுடைய சிறந்த மாதிரியும் கொல்லப்பட்டார். மேலும் அவர் ஒரு கொலை பாதகனைப் போலும், கள்ளனைப் போலவும் சிலுவையில் அறையப்பட்டார். எவ்வளவு அவமானத்தையும், வேதனைகளையும் அவர் சகித்தார். அவருடைய சீஷர்களும் அந்நாளில் எவ்வளவு அவமானப்பட்டிருப்பார்கள்.

அவர்கள் மிகுந்த குழப்பம் அடைந்தவர்களாக துக்கமடைந்தார்கள். தாம் மரிக்கபோவதாக இயேசு முன்னதாகவே

அறிவித்திருந்தார். உண்மையில் அவர் மரிக்க வேண்டும். இயேசு பாடுபடுவதற்குமுன், அவர்கள் புசித்த அப்பம் தன்னுடைய மாம்சம் என்பதை இயேசு விவரித்தார். மேலும், தன்னுடைய இரத்தத்தைக் குறிக்கக்கூடிய திராட்ச ரசத்தை குடிக்கும்படி சீஷர்களுக்கு சொன்னார்.

இந்த வார்த்தைகள் சீஷர்களுக்கு விநோத மாக தோன்றியிருக்கும். இவைகளின் பொருள் என்ன ? இந்த வார்த்தைகளை குறித்தும் இராபோஜனத்தில் நடந்த சம்பவங்களைக் குறித்தும் அவர்கள் யோசித்து கொண்டிருக்கையில் சகல காரியங்களும் துரிதமாக நடந்த முடிந்தது. இயேசு பிடிக்கப்பட்டு, பிலாத்துவுக்கு முன் கொண்டு செல்லப்பட்டார். அவரை சுற்றியிருந்த யூதர்கள், காட்டு மிராண்டிகளை போல கூக்குரலிட்டார்கள். சிலுவையில் அறையப்படக்கூடிய இயேசுவை இருண்ட சிறைக்குள் அடைத்து வைத்தார்கள். அங்கு என்ன நடந்தது ? அவருடைய சீஷர்களுக்கு எவ்வளவு வேதனையாக இருந் திருக்கும்.

இறுதியாக, இயேசுவின் பாடுகளிலும், உபத்திரவங்களிலும் சீஷர்கள் அவரை தனித்து விட்டு சென்றார்கள். பேதுரு அவரை மூன்று முறை மறுதலித்தார். இயேசு இந்தச் சோதனைகளை தனித்து சகித்தார். இது தேவ திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது. "கர்த்தரோ அவரை நொறுக்கச்சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட் படுத்தினார்; அவருடைய ஆத்துமா தன்னைக் குற்றநிவாரணபலியாக ஒப்புக்கொடுக்கும்போது, அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்தநாளாயிருப்பார்; கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும்""நான் ஒருவனாய் ஆலையை மிதித்தேன்; ஜனங்களில் ஒருவனும் என்னோடிருந்ததில்லை; நான் என் கோபத்திலே அவர்களை மிதித்து, என் உக்கிரத்திலே அவர்களை நசுக்கிப்போட்டேன்; அதினால் அவர்கள் இரத்தம் என் வஸ்திரங்களின்மேல் தெறித்தது, என் உடுப்பையெல்லாம் கறைப்படுத்திக் கொண்டேன்" (ஏசா 53:10, 63:3) அவர் மட்டுமே ஈட்டுகிரயமானார். இந்த அனுபவங்கள் அவருக்கே உரியதாயிருந்தது.

எருசலேமின் வீதிகளில், இயேசு சிலுவையை சுமந்து கொண்டு போகையில், "இதோ, இந்த மனுஷன்" என்று பிலாத்துவின் வார்த்தைகளை எத்தனை வழிபோக்கர்கள் பரியாசமாக சொல்லியிருப்பார்கள்.

**இயேசுவின் மரணத்தை நினைவுக்கூருதல்**

இயேசுவின் பிறப்பிலிருந்தும் வாழ்க்கையிலி ருந்தும் நாம் அநேக பாடங்களை கற்றுக் கொள்கிறோம். எவ்வளவு அற்புதமான கதாபாத்திரம் "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்;" (யோவா 14:9)என்று அவர் சொன்னபடி ஆண்டவராம் இயேசு எவ்வளவு துல்லியமாக பிதாவின் குணங்களைப் பிரதிபலித்தார்.

இயேசு மாம்சத்தில் பரிபூரணமான ஜீவனோடு இருந்தார். ஆயினும், அவர் இந்தப்பூமியிலிருந்த காரணத்தை நன்கு அறிந்திருந்தார். அவர் ஆதாமுக்காக மரிக்க வந்தார். ஆதாமின் கீழ்ப்படியாமையினாலே இந்த மனுக்குலத்தின் மேல் வந்த பாவத்திலிருந்தும், மரணத்திலிருந்தும், அனைவரையும் இரட்சிப்பதற்காக இயேசு இங்கு வந்தார். (ரோம 5:12) இயேசுவின் பிறப்பு அல்ல அவருடைய மரணமே நமக்கு இரட்சிப்பளித்தது.

இயேசு நமக்கு கற்பித்தபடி நாம் அந்த இரண்டு அடையாளங்களில் பங்கு பெற்று இயேசுவின் மரணத்தை நினைவுக்கூருகிறோம். அந்த அடையாளங்கள், இயேசுவின் ஜீவனை நினைவுக்கூருவதை காட்டிலும், நம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட உடன்படிக்கையை ஞாபகப்படுத்தவதற்கும் உதவி செய்கிறது. நாம் உடன்படிக்கை செய்த போது, மரணபரியந்தம் இயேசுவை பின்பற்றுவோம் என்று பிதாவினிடம் வாக்களித்திருக்கிறோம். ஆகவே, ஒவ்வொரு வருடமும் நாம் இந்த அப்பத்தை புசித்து, திராட்ச ரசத்தை பானம் பண்ணும் போதெல்லாம், நம்முடைய உடன்படிக்கையைப் புதுப்பிக்கக் கூடியவர்களாக இருக்கிறோம். இந்த நினைவுக் கூருதலின் அடையாளங்களில் நாம் பங்கெடுக்கும் போது நம்முடைய உடன்படிக்கையின் முழு அர்த்தத்தை புரிந்து கொண்டிருப்பதை நினைவுப்படுத்துகிறது.

"நான் கேட்கிறேன், நான் மறந்து விடுகிறேன், நான் காண்கிறேன், நான் நினைவுக்கூருகிறேன், நான் புரிந்து கொள்கிறேன். " என்ற ஒரு சீன பழமொழி கூறுகிறது. மனித அனுபவங்களை வெளிப்படுத்தக்கூடிய இந்தப் பழமொழியில், சில நியாயமான காரியங்கள் நினைவுக்கூருதலின் ஆராதனைக்கு பொருந்தக் கூடியதாக இருக்கிறது. நாம் இந்த நியாபகார்த்த அடையாளங்களில் பங்கெடுக்கும் போது நாம் பார்ப்பது மட்டும் அல்ல, கேட்பது மட்டும் அல்ல, ஆனால் அன்று சீஷர்கள் செய்ததுபோல நாமும் செய்கிறோம். அவைகளை நாம் செய்யும் போது நிச்சயமாக நம்முடைய இருதயத்தில் ஓர் உணர்வை ஏற்படுத்த வேண்டும். அப்பொழுது நாம் தேவனிடத்தில் நெருங்கிய உறவு கொண்டிருப் பதைக் காட்டும். நம்முடைய போராட்டங்கள் எவ்வளவு கடுமையாக இருந்த போதிலும், நம்முடைய உடன்படிக்கையை முழு உற்சாகத்



தோடு நிறைவேற்ற இந்த நினைவுக்கூருதல் உதவி செய்யும்.

நாம் அனுசரிக்கக்கூடிய இராப்போஜனத்தில், இப்படிப்பட்ட ஓர் உணர்வை நாம் பெறவில்லை என்றால், நாம் ஒருவேளை புதிதாக இந்தப் போஜனத்தை அனுசரிக்க கூடியவர்களாக இருப்போம். இராப்போஜன ஆராதனையில் பங்கெடுத்து கொள்வது ஒரு நல்ல காரியமாகும். ஞானஸ்நானம் பெறாதவர்களும் கூட இந்த ஆராதனையில் கலந்து கொள்ளலாம். ஏனெனில், இஸ்ரயேலர்கள் தங்களுடைய முதல் பஸ்கா பண்டிகையின் போது, ஒவ்வொரு வீட்டில் இருந்த முழு குடும்பமும் விசுவாச வீட்டாரை அடையாளப் படுத்தியது. அதில் உள்ள தலைச்சன் பிள்ளைகள் மட்டுமே உடன்படிக்கைச் செய்தவர்களை அடையாளப்படுத்தும். இப்படிப்பட்ட ஆராதனையில் பங்கு பெற்று, எல்லா காரியங்களையும் நினைவுக்கூருவதற்கு உடன்படிக்கை செய்யாதவர் களுக்கும், ஓர் அற்புதமான வாய்ப்பாக இருக்கிறது.

நாம் இந்த இராபோஜனத்தில் பங்கு பெறும் போது, இயேசு மறுநாள் மரித்ததுபோல நாம் மரித்துவிடுவோம் என்று அர்த்தம் கொள்ளக்கூடுமா ? நிச்சயமாக இல்லை. "நான் அனுதினமும் சாகிறேன்" (1கொரி 15:31) நாம் நம்முடைய ஜீவனை பலிபீடத்தின் மேல் வைத்தவர்களாக, அனுதினமும் நம்முடைய ஜீவனை பலி செலுத்துவோம் என்று நாம் தேவனிடத்தில் வாக்களித்திருக்கிறோம். ஆகவே, இதன் அடிப்படையில் நாம் தினம் தினம் தேவனுடைய சித்தம் செய்வதற்காக மரித்துக் கொண்டிருக்கிறோம்.

நம்முடைய ஆண்டவர் விதவிதமான அனுபவங்களைப் பெற்றார். சில காரியங்கள் அற்புதமான ஆசீர்வாதங்களாக இருந்தது - சகோதரர்களோடு கொண்டுள்ள ஐக்கியம், அற்புதங்களை நடப்பித்தல், தேவனோடு கொண்டுள்ள ஐக்கியம். இதோடுக்கூட அவர் மிக வேதனைகளையும், துக்கங்களையும் தரக்கூடிய அனுபவங்களையும் பெற்றார். யூத ஜாதியால் புறக்கணிக்கப்பட்டு, தவறான குற்றங்களை அவர்மேல் சுமத்தி, ஒரு துன்மார்க்கனைபோல சிலுவையில் அறையப்பட்டார்.

நாமும் நம்முடைய சொந்த அனுபவத்தின் பாத்திரத்தைப் பெற்றிருக்கிறோம். செபேதேயுவின் குமாரர்களுடைய தாய் இயேசுவிடம் - "உம்முடைய ராஜ்யத்திலே என் குமாரராகிய இவ்விரண்டுபேரில் ஒருவன் உமது வலது பாரிசத்திலும், ஒருவன் உமது இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி அருள்செய்யவேண்டும் என்றாள்.இயேசு பிரதியுத்தரமாக: நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா என்றார். அதற்கு அவர்கள்: கூடும் என்றார்கள்" (மத் 20:22)

நாம் இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும்போது, நாம் பெருமை கொள்ள வேண்டாம். அதே நேரத்தில் மகிழ்ச்சிகரமான அனுபவங்களைப் பெறும்போதும், கடுமையான அனுபவங்களை பெறும்போதும் நாம் சோர்ந்து போகவேண்டாம். இயேசு என்ன செய்தாரோ, அதையே நாமும் செய்வோம் - அவர் தேவனுடைய வழிநடத்துதலை விசுவாசித்து, அவரிடம் ஜெபித்தார்.

ஒரு நாள், இந்த முழு உலகமும் , "இதோ இந்த மனிதன்" என்று அவர்களின் இரட்சகரை குறித்து சொல்லுவார்கள். "இதோ இந்த மனிதன்" என்று நம்முடைய இருதயங்களில், நம்முடைய ஆண்டவருடைய பலியை பிரதிபலிப்போம்.

முடிவு வேலையின் துவக்கம்

# அறுவடை



"அவைகளை விதைக்கிற சத்துரு பிசாசு; அறுப்பு உலகத்தின் முடிவு; அறுக்கிறவர்கள் தேவதூதர்கள்" (மத் 13:39)

Robert Goodman

திருச்சபையில் வாயின் வார்த்தையின் வழியாக சுவிசேஷம் பரவியது. இந்த வல்லமையான செய்தி மூலம் ஆயிரக்கணக்கான ஜனங்கள், இயேசுவின் இரட்சிப்பின் வல்லமையின்மேல் விசுவாசம் வைத்தார்கள். அதற்குப்பின் புதிய ஏற்பாட்டில் உள்ள நிரூபங்கள் ஆதி சபைகளில் பரிமாறப்பட்டது. இந்த நிரூபங்கள் இந்நாள் வரைக்கும் தேவனுடைய செய்தியை துல்லியமாக அறிவிக்கிறது. ஆதி சபையின் காலத்தில் விசுவாசிகள் அதிக எண்ணிக் கையில் காணப்பட்டார்கள்.

போப் மார்க்கத்தின் வல்லமை அதிகரித்து சபைகளில் உண்மையான சத்தியங்கள் மாற்றப் படுகையில். வேகமாய் வளர்ந்து கொண்டிருந்த உண்மையான சுவிசேஷத்தின் வளர்ச்சி குறைய துவங்கியது. ஆயினும் இருண்ட காலங்களிலும் உண்மையான விசுவாசிகள் குறைந்த எண்ணிக் கையில் வாழ்ந்து கொண்டு வந்தனர். இந்தத் தனிநபர்கள், சத்தியத்தின் விதைகளை உட் கொண்டு தங்களை ஜீவனோடு காத்து கொண்டனர்.

### சபையின் அறுவடையின்போது நடந்த காரியங்கள்

"தானியேலாகிய நீயோவென்றால், முடிவுகாலமட்டும் இந்த வார்த்தைகளைப் புதைபொருளாக வைத்து வைத்து, இந்தப் புஸ்தகத்தை முத்திரைபோடு; அப்பொழுது அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள், அறிவும் பெருகிப்போம் என்றான்"(தானி 12:4) முடிவு காலத்திற்குள் அறுவடை காலம் உள்ளது. அறிவின் பெருக்கத்தினாலும் அதினால் வளர்ச்சியடைந்த போக்குவரத்தினாலும் தொலை தொடர்புகளினாலும் இந்தக் காலப்பகுதி, அடையாளம் கண்டு கொள்ளப்படுகிறது.

அறுவடையின் துவக்கத்தில் போக்குவரத்திலும் , அறிவின் பெருக்கத்திலும் அநேக முக்கியமான கண்டுபிடிப்புகள் கண்டுபிடிக்கப்பட்டது. 1873 ம் ஆண்டு ரெமிங்கடன் முதல் முதலில் வர்த்தகத்திற்குரிய டைப்ரைட்டரை (commercial typewriter with a QWERTY keyboard)உருவாக்கினார். இதனால், எழுதப்பட்ட வார்த்தைகள் மிக வேகமாக பதிவு செய்யப்பட்டது. 1875ம் ஆண்டு தொலைபேசி கண்டுபிடிக்கப்பட்டு, வெகு தூரத்திலுள்ளவர்களும் நவீன முறையில் தொடர்பு கொள்ள முடிந்தது. 1877ம் ஆண்டு முதன் முதலில் ஒலிப்பதிவு கருவி (கிராமபோன்) கண்டுபிடிக்கப்பட்டு ஒலியை பதிவு செய்ய உதவியது. 1878ம் ஆண்டு தாமஸ் எடிசன் முதன் முதலில் மின் விளக்கை கண்டுபிடித்தார். முதன் முதலில் காஸோலீன் என்ஜின் (gasoline engine) விற்கப்பட்டது. இதன் இஞ்சின் மிக குறைவான எடை கொண்டிருந்ததினாலும் மிக குறைவான எரிபொருளை பயன்படுத்தி அதிகமான சக்தியை தந்ததினால் அவைகள் போக்குவரத்தின் புதிய வாய்ப்புகளுக்கு வழி வகுத்தது. இப்படிப்பட்ட எஞ்ஜின்களை பயன்படுத்தி அநேக மோட்டார் வண்டிகள் 1886ம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. இது தனிப்பட்ட போக்குவரத்து புரட்சியை துவங்க உதவி செய்தது. 1883ம் ஆண்டு சொத்து விபரங்கள்(பணம்) பதிவு செய்யப்பட்டது. நம்முடைய உலகத்தில் இந்நாள் வரைக்கும் கணிணியை (computers) பயன்படுத்தி கணக்கெடுக்கும் இயந்திரங்கள் அந்நாள் முதற்கொண்டு பரவியுள்ளது. 1886ம் வருடத்தில் தானாகவே அச்சுகளை வார்த்து கோர்த்து கொள்ளும் ஓர் அச்சு இயந்திரம் (linotype machine)கண்டுபிடிக்கப்பட்டது. இதற்கு முன்பாக எந்தச் செய்தித்தாளும் (நாளிதழ்) எட்டு பக்கங்களுக்கு மேல் அச்சடிக்கப்பட்டதில்லை. 1896ம் ஆண்டில் வாய் பேசாத ஊமை திரைப்படங்கள் எடிசனால் கண்டு பிடிக்கப்பட்டது. 1896ம் ஆண்டு கம்பியில்லா தந்தி (wireless telegraph)மூலம் செய்திகள் அனுப்பப்பட்டது. இந்தச் செய்தி அமெரிக்கா முழுவதும் உடனடியாக பரவியது.

### பாஸ்டர்-ரஸ்ஸல் நேரத்தை ஆதாயப்படுத்திக் கொண்டார்

பாஸ்டர். ரஸ்ஸல் தாம் பெற்ற சத்தியத்தை இந்தப் பூமி முழுவதிலும் பிரசங்கிக்க அக்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட விஞ்ஞான கண்டுபிடிப்புகளை முழுமையாக பயன்படுத்தினார். இந்தப் புதிய துவக்கம், அறுவடை சத்தியத்திற்கு மிக அதிகமான அளவில் பயன்பட்டது. இந்தக் கண்டுபிடிப்புகளின்றி சகோ. ரஸ்ஸலால் இவ்வளவு ஊழியங்களை செய்திருக்க வாய்ப்பில்லை. அவர் தன்னுடைய வியாபாரத்தில் கற்றுக்கொண்ட சகல திறமைகளையும் பயன்படுத்தி இந்த உலகம் முழுவதிலும் சத்தியத்தைப் பிரசங்கித்தார். அவருடைய முயற்சிகளினால், வேத படிப்புகளின் மறு மலர்ச்சி ஏற்பட்டு அநேக ஜனங்கள் தங்களுடைய வாழ்க்கையை தேவனுக்கென்று அர்ப்பணித்தார்கள்.

பாஸ்டர் ரஸ்ஸல் தன்னுடைய அறுவடை வேலைக்காக சுமார், ஒரு மில்லியன் மைல்களுக்கு மேல் பிரயாணம் செய்தார். அவருடைய நாட்களில் இப்படிப்பட்ட பிரயாணம் மிக ஆச்சரியமாகவும், அபூர்வமாகவும் இருந்தது. உலகத்திலுள்ள ஆறு கண்டங்களுக்கும், சத்தியத்தின் வார்த்தைகளை கொண்டு செல்ல, அதிநவீன போக்குவரத்து முறைகளைப் பயன்படுத்தினார். அவருடைய காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட எல்லா போக்குவரத்து வழிகளையும் அவர் பயன்படுத்தினார். "புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து, காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்" (கொலோ 4:5) என்ற வார்த்தைகளை அவர் நடைமுறைப்படுத்தினார். அறுவடை காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட போக்குவரத்தினால் நீண்ட தூரமும், சுமார் 50,000 மைல்கள் பயணம் செய்வதற்கு உதவியாய் இருந்தது. அவருடைய பரந்து விரிந்த பிரயாணங்களை பற்றியும் உலக அளவில் அவர் சென்ற இடங்கள் பற்றியும் "The Watch Tower" என்ற பிரதியில் வெளியிடப்பட்டிருக்கிறது. சகோ. ரஸ்ஸல் அறுவடை செய்திகளை பிரசங்கிக்க அவருடைய காலத்தில் கண்டு பிடிக்கப்பட்ட மற்ற நவீன கண்டுபிடிப்புகளையும் பயன்படுத்தினார். அவருடைய வாழ்க்கையில் அவர் 50,000 பக்கங்களை எழுதினார். டைப்ரைட்டிங் இயந்திரங்களின்றி அவர் இவ்வளவு வேகமாய் இத்தனை பக்கங்களை எழுதியிருக்க வாய்ப்பில்லை. மேலும் அவர் அதிகமாக பிரயாணங்களில் இருக்கும்போது கைகளினால் எழுதுவதற்கு அவருக்கு வாய்ப்புகள் இருந்திருக்காது. ஒரு கட்டத்தில் பாஸ்டர் சுமார் 4000 வாராந்திர பத்திரிக்கைகளை வெளியிட்டார். நாளிதழ்களிலும் சத்தியத்தின் செய்திகளை வெளியிட்டார். இவைகள் உலகளவிலான சுமார் 15லிருந்து 20 மில்லியன் வாசகர்களை சென்றடைந்தது.

அவருடைய உபதேசங்களை பின் பற்றினவர்கள் வீடுவீடாக சென்று புஸ்தகங்களையும், கை பிரதிகளையும் விநியோகித்தனர். மேலும் இப்படியாக ஊழியம் செய்வதற்கு விசேஷித்த பயிற்சியளித்தார். இதனால் சத்தியம் மிக வல்லமையாக பரவியது.

அறுவடை செய்திகளை பிரசித்தப்படுத்துவதற்கு துணிகரமாக கையாளப்பட்ட மற்றொரு வழி - "போட்டோ டிராமா கிரியேஷன்" (Photo Drama of Creation). இதை உருவாக்குவதற்கு இரண்டு முழு வருடங்கள் தேவைப்பட்டது. அதற்கு சுமார் இரண்டாயிரம் பேர் வேலை செய்தார்கள். இது ஒருவகையான வரைபடங்களாக இருந்தது. இதில் அசையும் படங்கள், கைகளினால் வண்ணம் தீட்டப்பட்ட ஒளிப்பட காட்சிகள் கொண்ட கண்ணாடி வில்லைகள் (slides), பதிவு செய்யப்பட்ட ஒளியும், பாடல்களும். இக்காரியங்களை உலகமெங்கும் உள்ள ஜனங்களுக்கு இலவசமாக காட்சியளிக்கப்பட்டது. பல வருடங்களுக்காக மறைந்திருந்த தேவனுடைய வார்த்தைகள், பாஸ்டர் ரஸ்ஸல் கையாண்ட இந்த விசேஷித்த முறையினால், அவைகள் எளிதில் பரவ செய்தது.

இந்த அறுவடை கால துவக்கத்தில் இப்படிப்பட்ட வழிகளில் சத்தியம் பிரசங்கிக்கப்பட்டதின் நிமித்தம், அநேகர் தங்களுடைய ஜீவனை தேவனுக்கு தத்தம் செய்தார்கள். பாஸ்டர். ரஸ்ஸலின் காலத்தில் அவருடைய தனிப்பட்ட ஊழியம் மட்டுமே மிக சிறப்பாக செயல்பட்டதென்று அனைவராலும் அறிக்கையிடப்படுகிறது. அவருடைய மரணத்திற்குபின் சிறப்பாக நடைப்பெற்றுக் கொண்டிருந்த ஊழியத்தின் வேகம் குறைய ஆரம்பித்தது.

**அறுவடை செய்வதற்கான சபையின் ஊழியம்**

"தம்முடைய சீஷர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்;
ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றார்" (மத் 9:37,38) என்று இயேசு சொன்னார். எதிர்பார்த்தபடி அறுவடையின் முடிவில் வேலையாட்களின் எண்ணிக்கை குறைவுபட்டுள்ளது. ஆயினும்."ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்" (மத் 24 :14) என்று வாசிக்கிறோம்.

இந்த சுவிசேஷத்தின் செய்தி உலகத்தின் ஒவ்வொரு எல்லைகளிலும் போய் சேரும் வரைக்கும், தொடர்ந்து பிரசங்கிக்கப்படவேண்டும். சுவிசேஷ யுகத்தின் முடிவில் உள்ள அறுவடை சபைக்கு இது ஒரு முக்கிய கட்டளையாக கொடுக்கப்பட்டுள்ளது.

வேலையாட்கள் குறைவாக இருப்பினும், இராஜத்தின் சுவிசேஷத்தைக் குறித்து இந்த உலகம் முழுவதிலும் சாட்சியாக அறிவிப்பதற்கு, இவர்கள் பொறுப்புள்ளவர்களாக இருப்பதினால், பாக்கியமுள்ளவர்களாக இருக்கிறார்கள். அன்று பாஸ்டர் .ரஸ்ஸல் தன்னுடைய நாட்களில் கண்டுபிடிக்கப்பட்ட சகல தொழில் நுட்ப கண்டுபிடிப்புகளையும், இந்தச் சத்தியத்தை பிரசங்கிப்பதற்கு பயன்படுத்தினது போல நாமும் பயன்படுத்தப்பட வேண்டும்.

ஆகவே அறுவடையின் முடிவில் சபை என்ன செய்ய வேண்டும் ? நம்மை சுத்திகரிக்கவும், ஆவிக்குரிய சகோதரர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், இந்த உலகம் முழுவதிலும் சுவிசேஷத்தை சாட்சியாக பிரசங்கிப்பதே நம்முடைய ஆவிக்குரிய இலக்காய் இருக்கிறது.

நாம் இந்த இலக்குகளை அடைவதற்கு தொடர்ந்து - 1, ஜெபிக்கவேண்டும். 2.நவீன தொழில் நுட்பங்களை தேவனுடைய சித்தத்தை செய்வதற்கு




பயன்படுத்த வேண்டும் 3. வேலைகளை பகிர்ந்து செய்ய வேண்டும். 4. சுவிசேஷத்தை நமக்கு தெரிந்த மொழிகளில் மொழிப்பெயர்த்து, அவைகளை அநேக மொழிகளில் வெளியிட வேண்டும். இந்த விஞ்ஞானம் நிறைந்த உலகத்தில் மேற்கூறப்பட்ட காரியங்களை நடப்பிப்பது சாத்தியமான காரியமாகும்.

அதற்காக பாரம்பரியமாக இந்த ஊழியத்திற்காக பயன்படுத்த முக்கியமான முறைகளை நாம் மாற்றவேண்டிய அவசியமில்லை. மாறாக, அவைகளை ஊக்குவிப்பதற்கு நாம் அடுத்த முறைகளைப் பயன்படுத்தலாம். எடுத்துக்காட்டாக அந்தக் காலத்தில் கைப் பிரதிகளை அச்சடித்து விநியோகம் செய்தது போல இப்போதும் நாம் செய்யலாம். ஆனால் இந்தக் கைப்பிரதிகள் இணைய தளத்தில் கிடைக்கப்பெற்று, அவைகளை ஈ - மேயில் (E-mail) மூலம் அனைவரும் பெற்றுகொள்ளும்படிக்கு ஏற்பாடுகள் செய்யலாம். இப்படிப்பட்ட காரியங்கள், எல்லா வகைகளிலும் சுவிசேஷத்தை சாட்சியாக அறிவிக்க பயனுள்ளதாக இருக்கும். இப்பொழுது, இன்றைய தினத்தில், இந்த அதிநவீன காலத்தில், இராஜ்யத்தின் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு என்ன செய்துகொண்டிருக்கிறோம் ? என்ற கேள்வி எழும்புகிறது.

**அறுவடையின் முடிவில் சுவிசேஷத்தை சாட்சியாக பிரசங்கிப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகள்**

ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் இதற்கான முயற்சிகள் குறைந்து கொண்டு வருகிறது. அதே நேரத்தில் வளர்ந்து கொண்டு வரும் தேசங்களில் இப்படிப்பட்ட முயற்சிகள் அதிகமாக காணப்படுகிறது. சத்தியத்தைக் குறித்த காரியங்கள் தென் அமெரிக்கா , ஆப்பிரிக்கா மற்றும் கிழக்கு ஆசியாவிலுள்ள மொழிகளில் அதிகமாக மொழி பெயர்க்கப்படுகிறது. நவீன மொழிப்பெயர்ப்பு ஒழுங்குகள், புதிய வாசகர்களை சென்றடைவதற்கு அநேக வழிகளைத் திறக்கிறது.

அச்சடிக்கப்பட்ட வார்த்தைகள் தொடர்ந்து வளர்ச்சி அடைகிறது. திராட்சை தோட்டத்தில் உள்ள வேலைக்காரர்கள் தொடர்ந்து சாட்சிகளையும் குறிப்புகளையும், பக்தி காரியங்களையும் வெளியிடுகிறார்கள். ஜனங்களின் கவனத்தை ஈர்க்கும்படியாக பல வண்ணங்களிலும், பல ஓவியங்களிலும் சத்தியங்கள் அச்சடிக்கப்படுகிறது. தற்போதைய சம்பவங்களுக்குத் தொடர்புள்ள கைப்பிரதிகளை அநேக அறுவடையாட்கள் தாங்களே வெளியிட்டு வருகின்றனர். இன்றைய தினத்தில் இருக்ககூடிய அச்சு இயந்திரங்கள் வெகு சீக்கிரத்தில் அதிகமான புத்தகங்களை அச்சடித்து விடுகிறது. இன்றைய தினத்தில் இருக்கக்கூடிய மின்னனு இயந்திரங்கள் தானாக செயல்படுகிறது. இதற்கு மிகக் குறைவான வேலையாட்கள் தேவைப்படுகிறார்கள். இப்படியாக இன்றைய தினத்தில் எண்ணிலடங்காத பத்திரிகைகளும், செய்தி நிரூபங்களும் வெளியிடப்படுகிறது. இவைகள் அடிப்படை சத்தியத்திலிருந்து மிக ஆழமான காரியங்கள் வரைக்கும் இந்தப் பூமி முழுவதிலும் சாட்சி பகிர்கிறது.

பல மொழிகளில் தேவனுடைய வார்த்தை களைப் மொழிபெயர்த்து, அதை வெளியிடுவது சற்று கடினமாக இருக்கலாம். ஆனால் மிக குறைவான நேரத்தில் மற்ற மொழிகளில் உடனடியாக மொழிப்பெயர்த்து விடலாம். பாஸ்டர்.ரஸலின் காலத்தில் அவர் மூலமாக வெளிப்படுத்தப்பட்ட சத்தியம் 12 மொழிகளுக்கு மேல் மொழி பெயர்க்கப்பட்டது. இன்றைக்கு நாம் இன்னும் அதிகமான மொழியில் மொழிப்பெயர்த்து கொண்டிருக்கிறோம். இணையத்தளத்தில் அதாவது வெப்சைட்டில் (Website)"Studies in the Scriptures " மற்றும் " Chart of ages " என்ற தலைப்புகளிலுள்ள பாஸ்டர்.ரஸலின் வெளியிடுகள் 12 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதைக் காணலாம். (www.thestudiesinthescriptures.com)

பாஸ்டர் ரஸலின் நாட்களில் கிங் ஜேம்ஸ் வெர்ஷன் (King James Version) என்ற வேதாகமம் இருந்தது. அதோடுகூட சகோரர்களுக்கு உதவியாக அதனுடைய விளக்கவுரைகளும், அகராதிகளும், கடினமான வேத பகுதிக்கான விளக்கங்களும் கொடுக்கப்பட்டது. மேலும் சேர்க்கப்பட்ட வசன பகுதிகளும் தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் வேதாகமத்தை புரிந்து கொள்வதற்கு அநேக வழிகாட்டிகளும் (guide) இருந்தது. ஆனால் இன்றைய தினங்களில் நாம் கம்யூட்டர், லாப் டாப், எலக்ட்ரானிக் புக், டிவிடி பிளையர்ஸ், டாப்லெட், கார்டு ரீடர் மற்றும் பல நவீன பொருட்கள் உள்ளது. (desk top,laptop computers,electronic book readers,tablet computers,DVD players.) இவைகளை பயன்படுத்தி ஆப்பிரிக்காவில் ஒரு நூலகத்தையே பதிவு செய்திருக்கிறார்கள். மெமரி கார்டுகளின் மூலம் அநேக பிரசகங்கள், இசை பாடல்கள் மற்றும் பல பக்திக்கேற்ற ஆவிக்குரிய காரியங்கள் பதிவு செய்து பயன்படுத்துகிறார்கள்.

The Bible Student Resource material என்பது ஒரு காலர் ரீடர் (color eReader) இது தேவையான ஒளியும், ஒலியும் புத்தகங்களையும் படங்களையும்



தெளிவாக பதிவு செய்யும் கருவியாக இருக்கிறது. இவைகளை நாம் இணையத்தளத்தின் வழியாக, உலகம் எங்குமுள்ள வேதமாணவர்களுக்கும், புதிதாக சத்தியத்தை கற்றுகொள்ளக்கூடியவர் களுக்கும், எளிதாக விநியோகிக்கலாம். மேலும் நூற்றுக் கணக்கான புத்தகங்களும், ஒளி நாடாக்களும், டிவிடிகளும், படங்களும் (www.bible studentprodution.com) என்ற வெப் சைட்டில் பெற்றுக்கொள்ளலாம்.

அறுவடையின் வேலைகளுக்கு இது வரைக்கும் கிடைத்திராத ஒரு வாய்ப்பை கம்யூட்டர்ஸ் மற்றும் இன்டர் நெட் (computer and internet)இன்றைய தினங்களில் வழி வகுத்திருக்கிறது. இன்றைய உலகத்தில் அறுவடை வேலைகளுக்குத் தேவையான சகல காரியங்களும், அனைவருக்கும் கிடைக்கக்கூடிய சாதகமான சூழ்நிலை உள்ளது. ஆகவே எல்லா வசனங்களுக்குரிய விளக்கங்களும் எல்லா கோணங்களிலும், கிடைத்துள்ளது. இதுவரைக்கும் இப்படிப்பட்ட எளிதான காரியங்களுக்கு வாய்ப்பில்லாதிருந்தது.

தொலை தொடர்பு மூலம் பல இடங்களில் உள்ளவர் இணைந்து சத்தியத்திற்குரிய கருத்தை பரிமாறிக்கொள்ளலாம். இதன் வழியாக வாரக்கூட்டங்களும், மற்ற ஆவிக்குரிய காரியங்களுக்காகவும் அநேக தேவ ஜனங்கள் கூடி வருகிறார்கள். மேலும் தொலைக் காட்சியின் மூலமாகவும் சம்பாஷணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. குறிப்பாக, சகோதர ஐக்கியமில்லாமல் தனித்து விடப்பட்ட சகோதர சகோதரிகளுக்கு இவைகள் மாபெரும் ஆசீர்வாதமாக இருக்கிறது.

இதுவரைக்கும் நடைபெறாத அளவுக்கு சத்தியத்தின் வேலைகளை இன்ட்டெர் நெட் மற்றும் ஈ-மெயில் (Internet,E-mail)வழியாக இன்று நடைப்பெற்று கொண்டுவருகிறது. எல்லா விதமான ஜனங்களுக்கும், அவர்களுக்கு ஏற்றவாறு அறுவடையின் சத்தியங்களைப் பெற்றுக்கொள் வதற்கு எண்ணிக்கையில் அடங்காத வெப் சைட்டுகள் (website)உள்ளது. இன்ட்டர் நெட்டின் மூலம் கலந்துரையாடுவதற்கு வாய்ப்புகள் இப்பொழுது ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், உலகத்தின் எல்லா இடங்களிலும் இந்த அறுவடை சத்தியங்களை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் இப்பொழுது அதிகமாக காணப்படுகிறது. இவைகளைப் பற்றி மற்ற வெப் சைட்டுகளுக்கு தொடர்பு ஏற்படுத்தப்பட்ட மற்றவர்களும் இவைகளை அறிந்துக்கொள்ள வாய்ப்பளிக்கப்படுகிறது. உலகத்தில் உள்ள ஒவ்வொரு சகோதர சகோதரிகளும், தாங்கள் விரும்பினால், ஆவிக்குரிய காரியங்களில் ஐக்கியப்படுவதற்கு அவர் அவருடைய ஈ-மெயில் ஐ டிக்களை (E- Mail ID) அனைவரிடமும் கொடுக்கப்படுகிறது. அறுவடை சத்தியங்களை எளிதாகவும், அதிவேகமாகவும் உலகத்தில் உள்ள பொது ஜனங்கள் பெற்றுக்கொள்வதற்கு அதி நவீன கருவிகள் (Modern Search Engines) உதவி செய்கிறது. வெப் சைட்டுகளில் உள்ள அறுவடை சத்தியங்களை வெகு சுலபமாக கம்ப்யூட்டர்களிலும்,, லேப் டாப்பிலும் ரீடரிலும் பெற்றுக்கொண்டு அவைகளை அச்சடித்து விடலாம். (print out)

அறுவடைக்கான வேலைகளில் வானொலிப் பெட்டியும் ஒரு முக்கிய பங்கை பெறுகிறது. இந்த உலகம் முழுவதிலும், சத்தியத்தை சாட்சியாக அறிவிப்பதற்கு இதுவும் ஒரு முக்கிய வழியாக இருக்கிறது. இன்டர் நெட் ரேடியோ ஸ்டேஷன் (internet Radio Stations) 24 மணி நேரமும் அறுவடை சத்தியங்களை கேட்பதற்கு உதவி செய்கிறது.

இந்த அறுவடை சத்தியத்திற்கு சம்மந்தப் பட்ட அநேக தொலைக்காட்சிகள் (videos) இப்போது வெளியிடப்படுகிறது. இவைகளினால், சத்தியத்தை அறிந்து கொள்வதற்கான ஒரு புதிய ஆர்வத்தை ஜனங்கள் மத்தியில் உருவாக்கியிருக்கிறது.

### தொடுவானம் வரைக்கும் கிடைத்துள்ள அறுவடை சாட்சிக்கான வாய்ப்புகள்


இந்தப் பூமி முழுவதும் நற்செய்திகளை பிரஸ்தாபப் படுத்துவதற்கான புதிய வழிகளையும், பாரம்பரிய முறைகளையும், இன்றைய அறுவடை வேலையாட்கள் தொடர்ந்து பயன்படுத்துவார்கள் என்று நாம் எதிர்ப்பார்க்கலாம். இதன் முடிவில் ஆசரிப்புக்கூடாரம், ஆலயம், பிரமிடு மற்றும் யூதர்களின் தேவ ஏற்பாடுகளை பற்றிய 3 - D காட்சிகளை காண வாய்ப்புகள் உண்டு.

பிரசங்கங்களும் அறுவடை காரியங்களில் ஒலி பதிவுகளும் இப்போது டிஜிட்டல் பார்மெட்டில் (digital format) மாற்றப்பட்டுள்ளது. இதனால் வேத மாணவர்கள் மிக எளிதாக வெப் சைட்டிலிருந்து செய்திகளை தேடிப் பெற்றுக் கொள்ளலாம் (Searched and downloaded). இப்படிப்பட்ட வெப் சைட்டுகளில் சகோதரர்கள் இன்னும் அதிகமாக செய்திகளை அதில் சேர்த்துக் கொண்டே வருகிறார்கள். இப்படியாக சபைகளை ஊக்குவிக்கக்கூடிய அதிக

அதிகமான அறுவடை செய்திகள் இணையத் தளத்தில் காணப்படுகிறது. இப்படிப்பட்ட தொடர்பு சாதனைகளுக்கு ஏற்றபடி அறுவடையாளர்கள் தங்களுடைய வேலைகளை செய்ய துவங்கி விட்டார்கள்.

அறுவடைகளை குறித்த காட்சிகளின் பதிவுகள் (harvest videos) இன்று அதிக ஆர்வத்தோடு பல இடங்களுக்கு பரவிக் கொண்டிருக்கிறது. இன்று சுமார் நூற்றுக்கு அதிகமான காட்சிகளோடு பதிவு செய்யப்பட்ட பிரசங்கங்களும் பவர் பாயிண்ட்டு (power point)பிரசகங்கள் உள்ளது. இப்படிப்பட்ட காரியங்கள் தனித்திருக்கும் சகோதரர்களுக்கும், வளரக்கூடிய இளைஞர்களுக்கும், பாடங்களை நடத்துவதற்கும், சபைகளின் நூலகங்களை வித்தரிப்பதற்கும், அடிப்படை உபதேசங்களை கற்பிப்பதற்கும் மிக பிரயோஜனம் உள்ளதாக இருக்கிறது. மேலும் இந்தக் காரியங்களை தனி நபர்கள் தங்களுடைய அலை பேசிகளில் பதிவு செய்துகொண்டு பொறுமையாக கற்றுக் கொள்வதற்கும் பயனுள்ளதாக இருக்கிறது. இன்னும் ஐபாட்டில் (ipod). பிரசங்கங்களை பதிவு செய்து கொண்டு, அவைகளை நாம் கேட்டு பயனடையலாம். இப்படியாக இந்த அறுவடை சத்தியம் உலகமெங்கும் சாட்சியாக அறிவிக்கப்படுவதற்கு பல வழிகள் திறக்கப்பட்டு விட்டது. வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கும் இந்த உலகத்தில் இவைகளை காணக்கூடிய இளைய தலை முறைகளுக்கு இது ஒரு முக்கிய அணுகு முறையாக இருக்கிறது.

பொதுவான சமுதாய தொடர்புள்ள இடங்களில் அறுவடையாளர்கள் வேலைகளை துவங்கியிருக் கிறார்கள். இன்ட்டெர்நெட்டின் (internet) வழியாக ஒருவருக்கொருவர் சம்பாஷித்து கொண்டாலும் (chat), இந்தச் சத்தியம் சகல இடங்களில் சாட்சியாக பிரசங்கிக்கப்படுவதற்கும் ஏற்ற முயற்சிகள் எடுக்கப்படுவதை நாம் கவனிக்கவேண்டும்.




நிச்சயமாக டெலி கான்பிரன்ஸ் மற்றும் வீடியோக்கள் (Tele Conference and videos) மூலமாக இப்படிப்படட ஆவிக்குரிய காரியங்கள் இந்த உலகம் முழுவதும் தொடர்ந்து வளரும். "சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்ல வேண்டும்."( எபி 10:25) என்று எபிரெயரில் நாம் வாசிக்கிறோம்.

நாம் முகமுகமாக கூடி வரவேண்டும் என்று இந்த வசனம் குறிப்பிட்டாலும், வெகு தூரத்தில் உள்ள சகோதர சகோதரிகள், நீண்ட நேரம் பயணித்து வந்தால் மட்டுமே இவைகள் சாத்தியமாகும். ஆனால் இந்தத் தொலை தொடர்புகள் மூலமாகவும், இணையதளத்தின் மூலமாகவும் நாம் ஒருவருக்கொருவர் எளிதில் தொடர்பு கொண்டு, ஒருவரை ஒருவர் ஆவிக்குரிய காரியங்களில் ஊக்குவிக்கலாம்.

சமீபத்தில் நடந்த ஒரு மாநாட்டில் சுமார் 150 சகோதரர்கலந்து கொண்டார்கள். 47 வீடியோ தொடர்புகள் இருந்தது. வெகு தூரத்தில் உள்ள சகோதரிகள் இதன் மூலம் பயனடைந்தார்கள். நிச்சயமாக ஒருவரை ஒருவர் முகமுகமாக சந்தித்து, கட்டாயமாக சபை கூடி வரவேண்டும். இதை நாம் உறுதியாக ஊக்குவிக்க வேண்டும். ஆனால் இந்த ஒரு வாய்ப்பு கை கூடிவராத சந்தர்ப்பங்களில் அலை பேசிகளின் மூலமாகவும், இணையத்தளத்தின் மூலமாகவும் சபை கூடி வருவது அற்புதமான ஆசீர்வாதமாகும்.

**முடிவுரை**

அறுவடை சத்தியத்தின் சுவிசேஷம் இந்த உலகம் முழுவதும் பரவிக்கொண்டு வருகிறது. பாரம்பரிய முறைகளினாலும் புதிய தொழில் நுட்ப கண்டுபிடிப்புகளினாலும், திராட்சை தோட்டத்தின் வேலைக்காரர்கள் தொடர்ந்து கிடைக்கும் வாய்ப்புகளை பயன்படுத்தி இந்தச் சுவிசேஷத்தை உலகமெங்கும் பறை சாற்றலாம். காலம் வெகு குறைவாகவும், வேலை ஆட்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும், அறிவிக்கவேண்டிய சத்தியங்கள் மிக மகிமையானதாக இருக்கிறது.

இராஜ்யத்தின் சுவிசேஷம் அறிவிக்கக்கூடிய நம்முடைய சகல விதமான முயற்சிகளிலும் நம்முடைய ஆண்டவரின் சித்தத்தை மட்டும் நாம் செய்யக்கூடியவர்களாக இருப்போம். இந்த அறுவடையின் முடிவு காலத்தில் திராட்சை தோட்டத்தில் வேலை செய்வதற்கு கிடைத்த மாபெரும் வாய்ப்புக்காக பிதாவாகிய தேவனுக்கு இயேசுவின் மூலமாக நன்றிகளை ஏறெடுப்போமாக.

ஒரு வாலிபனுக்கு ஒரு புதிய துவக்கம்

# யோசேப்பின் வாழ்க்கையில் இருக்கும் பாடங்கள்



"அவர்களுக்கு முன்னாலே ஒரு புருஷனை அனுப்பினார்; யோசேப்பு சிறையாக விற்கப்பட்டான். அவன் கால்களை விலங்குபோட்டு ஒடுக்கினார்கள்; அவன் பிராணன் இரும்பில் அடைபட்டிருந்தது.கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறுமளவும் அவருடைய வசனம் அவனைப் புடமிட்டது. ராஜா ஆள் அனுப்பி, அவனைக் கட்டவிழ்க்கச்சொன்னான்; ஜனங்களின் அதிபதி அவனை விடுதலைபண்ணினான். தன் பிரபுக்களை அவன் மனதின்படி கட்டவும், தன் மூப்பர்களைஞானிகளாக்கவும், அவனைத் தன் வீட்டுக்கு ஆண்டவனும், தன் ஆஸ்திக்கெல்லாம் அதிபதியுமாக்கினான்" (சங் 105:17-22)

**George Loumbardas**

யோசேப்பின் வாழ்க்கையிலிருந்து பிரகாசிக்கக் கூடிய பரிசுத்தமான நம்பிக்கைக்குரிய வெளிச்சம் இந்தச் சாதகமற்ற சூழ்நிலையில் அகப்பட்டு, தேவன் தங்களுக்கு கற்பிக்க கூடிய பாடங்களுக்கு காத்திருக்ககூடிய அநேகருடைய வாழ்க்கையிலும் பிரகாசிக்கிறது. இறுதியாக யோசேப்பு விடுவிக்கப்படவும் ,உயர்த்தப்படவும் காலம் வந்தது. அநேக வருடங்களுக்குப் பின் அவருடைய கனவுகள் உண்மையானது குறிப்பிடும் படியாக அவர் மிகவும் உன்னதமான நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

யோசேப்பின் சரித்திரத்தைக் குறித்து வேத மாணவர்கள் அனைவரும் நன்கு அறிந்திருக்கிறோம். யோசேப்பு குழியில் விழுந்ததிலிருந்து பார்வோனின் சிங்காசனத்தில் அமரும் வரைக்கும் ஏழு நீண்ட கடுமையான காலங்களைக் கடக்க வேண்டியதாயிருந்தது. (ஆதி 37:23,24, 41-44) ஆயினும் ஒரு மேன்மையான நோக்கத்திற்காக தேவன் அந்த வருடங்களில், யோசேப்புக்கு தேவையான பயற்சிகளைக் கொடுத்தார். தேவனுடைய மிகப் பெரிய திட்டங்கள் ரகசியமான வழிகளில் மிக நேர்த்தியாக நடத்தப்படுகிறது. தேவனுடைய வழிகள் புரிந்து கொள்ள முடியாததாக இருப்பினும் முடிவில் தெளிவாக அனைத்தும் வெளிப்படுத்தப்படுகிறது.

பான பாத்திரக்காரனின் சொப்பனம் மூன்று நாட்களில் உண்மையானது. ஆனால் அதின் விளைவாக ஒன்றும் நடக்கவில்லை. யோசேப்பு மறக்கப்பட்டார். (ஆதி 40 :23). 13 வருடத்திற்குப்பின் யோசேப்பு உயர்த்தப்பட்டார். அதற்குப் பின் அவருடைய கனவுகள் உண்மையானது. ஒரு மனுஷனுடைய கிரியைகள் சிறிய அளவில் முக்கியத்துவம் பெற்றால் அதிக தாமதமின்றி அதற்காக ஆயத்தப்படுத்தப் படலாம். ஆனால் யோசேப்பின் விஷயத்தில் அவர் மிக பிரம்மாண்டமான வேலையை நிறைவேற்ற வேண்டியதாயிருந்தது. அதற்காக அவர் நீண்ட காலம் பயிற்சி பெற வேண்டியதாயிருந்தது. "யாக்கோபுடைய சந்ததியின் வரலாறு: யோசேப்பு பதினேழு வயதிலே தன் சகோதரருடனே ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தான்; அந்த இளைஞன் பில்காள் சில்பாள் என்னும் தன் தகப்பனுடைய மறுமனையாட்டிகளின் குமாரரோடே இருந்து, அவர்களுடைய துன்மார்க்கத்தைத் தன் தகப்பனுக்குச் சொல்லிவருவான்""ரூபன் அதைக் கேட்டு, அவனை அவர்கள் கைக்குத் தப்புவித்து, அவனை அவன் தகப்பனிடத்துக்குத் திரும்பவும் கொண்டுபோக மனதுள்ளவனாய்"(ஆதி 39:2,21) இதுவே தேவனுடைய நோக்கத்தின் வெற்றிக்குரிய திறவு கோலாய் இருந்தது. தேவனுடைய பள்ளியில் கடுமையான பயிற்சி பெறுவதற்கு மிகப்பெரிய வாய்ப்புகள் கிடைத்தால் நாம் மிக நேர்த்தியானவர் களாய் திகழ முடியும்.

இவ்வளவு மேன்மையான பணிக்காக யோசேப்பு நீண்ட காலம் பயிற்சி பெறும்போது, சந்தேகத்திற்கு இடமின்றி தேவன் அவரோடிருந்து அவரை வழிநடத்தினார் என்பதை யோசேப்பு நம்பினார். இதுவே யோசேப்பின் அசைக்க முடியாத நம்பிக்கைக்கும், தைரியத்திற்கும் காரணமாய் இருந்தது. யோசேப்பு தேவனுடைய பள்ளியில் பயின்று, அவர் சந்தித்த ஒவ்வொரு சூழ்நிலையிலும் தேவனுடைய வழி நடத்துதலை அறிந்திருந்தார்.

**நமக்கும் கூட**

யோசேப்பின் வாழ்க்கையில் நடந்தது போல நம்முடைய வாழ்க்கையிலும் நடக்கலாம். தேவன் நமக்கு நியமித்த சோதனைகளை மனப்பூர்வமாய் ஏற்றுக் கொண்டால், நாம் சோதனைகளைக் குறித்தும் முறுமுறுக்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் தேவன் நமக்காக வைத்திருக்கக்கூடிய அவருடைய சித்தத்தை, நம்முடைய மாம்ச கண்களினால் அச்சடித்த தாள்களில் வாசிக்க முடியும். அதற்குப்பின் தேவனிடத்தில் செல்வதற்கு சரியான வழிகளை இப்போது நன்கு அறிந்திருக்கிற படியால் நம்முடைய ஓய்வில்லா போராட்டங்களிலிருந்த நம்முடைய கவனத்தைத் திசை திருப்பலாம். இனி

நாம் ஒரு போதும் நம்முடைய சொந்த வழிகளில் நடப்பதற்கு போராடுவதில்லை. ஆனால் கடினமாக இருந்தபோதிலும் தேவனுடைய வழிகளில் மகிழ்ச்சியாக நடக்கிறோம். தேவனுடைய அழைப்பின் குரலைக் கேட்டவர்களுக்கு மட்டுமே சோதனையின் காலம் நடந்து கொண்டிருக்கிறது." நீயாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்குங்காலமாயிருக்கிறது; முந்தி நம்மிடத்திலே அது துவக்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர் களின் முடிவு என்னமாயிருக்கும்?" (1பேது 4:17)

இவ்வழியில் சென்று தேவன் நமக்காக நியமித்திருக்கும் வேலையை இவ்வுலகத்தில் நிறை வேற்றலாம். தம்முடைய ஒவ்வொரு பிள்ளைகளின் வாழ்க்கையிலும் தேவன் ஒவ்வொரு திட்டத்தை வைத்திருக்கிறார். நாம் ஒவ்வொருவருக்கும், தேவன் வைத்திருக்கும் வருங்கால திட்டத்தை எண்ணி தேவனுடைய திட்டங்களை நாம் இன்று நிறைவேற்றுகிறோம். ஆனால் அனைத்தும் நமக்கு சாதகமாகவும், இனிமையாகவும் இருக்க வாய்ப்பில்லை. ஆனால் இதுவே தேவனுடைய சித்தமாக இருந்தால், நாம் அவருடைய வழிநடத்தலுக்காக ஜெபிக்க வேண்டும். நாம் தேவனிடத்தில் தனிப்பட்ட முறையில் துணிகரமாக ஓர் உடன்படிக்கை செய்திருக்கிறோம். மேலும் அதற்குப்பின் நம்முடைய வாழ்க்கையில் நடக்கக் கூடிய ஒவ்வொரு சம்பவங்களும் விபத்துகளாக அல்ல,தேவனுடைய சிறப்பான வழிநடத்தலாகும்.

நாம் படக்கூடிய ஒவ்வொரு பாடுகளிலும் தேவன் இருக்கிறார். நம்முடைய துக்கங்களிலும், நஷ்டங்களிலும், ஏமாற்றங்களிலும், மற்றவர்களினால் ஏற்படும் வேதனைகளிலும், சொல்லினால் ஏற்பட்ட காயங்களில் - "நாம் அடுத்த கட்டத்திற்கு வெற்றி அடையும்படி தேவன் சில முக்கியமான பாடங்களை எனக்கு கற்பிக்கிறார்." என்று நாம் சொல்லும்போது ஒவ்வொரு குழப்பங்களுக்கும் விளக்கங்களைக் காணலாம்.

எல்லா சூழ்நிலைகளிலும் நாம் தேவனை முழுமையாக விசுவாசிக்கும்போது யோசேப்புக்கு நடந்தது போல நாமும் ஓர் உயர்ந்த நிலையில் உயர்த்தப்படுவோம். ஆவிக்குரிய நிலையில் அழியாமையை பெறுவதே நம்முடைய பரிசாகும். அப்பொழுது நாம் தேவனை முகமுகமாய் தரிசிக்கலாம். (1யோவ 3:2) நாம் தேவனுக்கு புத்திரர்களாகவும், இயேசு கிறிஸ்துவுக்கு உடன் பங்காளிகளாகவும் மாறுவோம். (ரோம 8:17 மற்றும் எபிரே 3:14) யோசேப்பின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களில் ஏதோ ஒரு சம்பவம் விடுபட்டிருந்தாலும் தேவன் கொண்டிருந்த நோக்கங்களும் அவர் எடுத்த முயற்சிகள் அனைத்தும் வீணாய் போயிருக்கும். இதுபோல நம்முடைய வாழ்க்கையிலும் நடப்பதற்கு அதிக வாய்ப்புகள் உண்டு. ஆகவே ஒவ்வொரு வருடைய வாழ்க்கையிலும் நடக்கக்கூடிய ஒவ்வொரு சம்பவங்களும் தேவன் நமக்காக ஆயத்தம் பண்ணி வைத்திருக்கக்கூடிய இடத்திற்கு நம்மை ஏற்ற விதத்தில் வழிநடத்தும். ஏற்ற காலம் வரும் பொழுது நாம் உயர்வான பணிக்கு அமர்த்தப்படுவோம் என்ற அழைப்பை பெற்றிருக் கிறோம். நம்முடைய ஆண்டவராம் இயேசுவை அடையாளப்படுத்தும் யோசேப்பு 1,44,000 சபை அங்கத்தினர்களையும் அடையாளப்படுத்து கிறார் என்பதை நாம் உணர வேண்டும். இவைகள் நம்முடைய கற்பனைக்கு எட்டாத ஆச்சரியத்தையும் உணர்வு களையும் கொடுக்கக்கூடியதாக இருக்கிறது.

**சபை நிறைவடைதல்**

இப்பொழுது தேவனுடைய திட்டத்தில் சபை நிறைவடைவதே முக்கிய காரியமாக உள்ளது. ஆகவே இந்தக் காரியத்திற்கு அதிக கவனம் செலுத்த வேண்டும். "அந்தப்படி எக்காளமும் விளங்காத சத்தமிட்டால் எவன் யுத்தத்திற்கு ஆயத்தம்பண்ணுவான்?"(1கொரி 14:8) என்று நாம் மிக தெளிவாகவும்,விளக்கமாகவும், நேரடியாகவும் பேசுகிறோம்.

சந்தேகத்திற்கிடமின்றி உன்னதமான அழைப்பின் வாசல் இன்னும் பூட்டப்படவில்லை. ஏனெனில் கதவுகள் அடைபட்டிருந்தால் சபை அங்கத்தினர்கள் முழுமையாக திரைக்கு அப்பால் சென்றிருப்பார்கள். இந்தப் பூமி முழுவதும் தலைகீழாய் இருந்திருக்கும். ஆனால் இப்படிப்பட்ட காரியங்கள் இன்னும் நடக்க வில்லை. இவைகளை காணும் போது நமக்கு இன்னும் கொஞ்சம் காலம் கொடுக்கப்பட்டிருப்பதை உணரலாம். ஆகவே குறுகிய காலத்திற்குள் நிறைவேற வேண்டிய காரியங்கள் மிக துரிதமாக நடைபெறும் என்பதை அறிந்து கொள்ளலாம்.

சபையின் இறுதி கால அங்கங்கள் யோர்தானை கடந்து ஆவிக்குரிய நிலையில் ஆகாயத்தில் கர்த்தரை சந்திப்பதற்கு இன்னும் கொஞ்சம் காலம் தேவைப்படுகிறது. (1தெச 4:17) ஆகவே இனி வரக்கூடிய காரியம் என்னவென்று நிதானமாய் ஆராய்ந்தறிந்து, அதற்காக என்ன செய்ய வேண்டும் என்று முடிவெடுக்க வேண்டிய பொறுப்பு நம் ஒவ்வொரு தனி நபரிடமும் உள்ளது. நம்முடைய கருத்துக்களை சீர்த்திருத்தி, சரியான முடிவுகளை எடுப்பதற்கு தனிப்பட்ட முறையில் முயற்சி செய்ய வேண்டும். அப்பொழுது நம் எதிர்பார்ப்புகளுக்கு முரண் பாடான சம்பவங்கள் திடீரென்று சம்பவிக்கலாம். ஆனால் நமக்கு முன் எது இருந்தாலும் சரி, நாம்

தேவனுடைய திட்டத்தை ஏற்றுக் கொள்ள ஆயத்தமாய் இருக்கும் பட்சத்தில் நமக்கு எந்த விதமான மோசமான தீங்கும் (புது சிருஷ்டிக்கு) ஏற்படாது.

தேவனுக்காக உதவி செய்யக்கூடிய மனித முயற்சிகள் வீணாயிருக்கும். தேவனுடைய பார்வையில் நன்மை இன்னதென்றும், அவர் சித்தம் இன்னதென்றும் அவர் அங்கீகரிக்க கூடிய காரியங்கள் இன்னதென்றும் நாம் புரிந்து கொள்ளும் வரைக்கும் மனுஷ சிந்தையில் எடுக்கப்படும் முடிவுகள் பல வழிகளில் தவறாகவே இருக்கும். ஆகவே அறுவடைக்கான வளர்ச்சிக்குரிய பாதையில் தேவனுக்கேற்ற வளர்ச்சிக்குரிய பாதையில் நாம் நடக்க வேண்டும். அதற்கு இசைவாக நாம் கிரியை செய்ய முயற்சிக்க வேண்டும். "நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமானசித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்" (ரோம 12:2) வேலையில் வளர்ச்சிக்குரிய பணிகளை கண்டு அதற்கு இசைவாக நாம் கிரியை செய்ய முயற்சிக்க வேண்டும். நம்முடைய ஆண்டவராம் இயேசு அவருடைய பொக்கிஷங்களை சேர்க்கும் நாளில் சென்று அவரை நேரடியாக தரிசிப்பவர்கள் பாக்கியவான்கள். (மல் 3:17)

நம்முடைய இக்காலத்து நோக்கம் இந்த உலகத்தை சத்தியத்திற்குள் வளர்த்து சபையில் உள்ள காலியான இடங்களை நிறைவு செய்ய வேண்டும். இதுவே நம்முடைய கடமையாய் உள்ளது. பலவீனரை பலப்படுத்தி அவர்களின் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்தி கொள்வதற்கு நாம் அவர்களை ஊக்குவிக்க வேண்டும். அதற்காக வாய்ப்புகள் கிடைக்கும்போது அந்நியருக்கு சத்தியத்தைப் போதிக்க கூடாது என்று பொருள் அல்ல. ஆனால் இந்த உலகம் மனம் மாறுவதற்கும் இன்னும் காலம் வரவில்லை. தேவன் தம்முடைய குமாரனாம் கிறிஸ்துவின் கீழ் ஒரு வல்லமையான இராஜ்யத்தை ஸ்தாபிக்க ஆயத்தமாயிருக்கிறார். அப்பொழுது உலக ஜனங்கள் மனந்திரும்புவார்கள்.

தேவனுடைய திட்டத்தில் அடுத்து இஸ்ரயேலர்கள் சீர்பொருத்தப்படுவாக்ள். அவர்கள் ஒரு தேசமாக கூட்டி சேர்க்கப்பட்டாலும், இனி வருங்கால பணிக்காக அவர்கள் செய்யக்கூடிய பணிக்காக அவர்கள் இயேசுவை சொந்த மேசியா என்று ஏற்றுக்கொள்ள வேண்டும். தீர்க்கத்தரிசனங்களின் இந்த உண்மையான விபரங்கள் மிகக் கடினமாக தோன்றும். இப்பொழுது இயேசுவை விசுவசியாத நிலை அவர்கள் மேல் குற்றமாக காணப்படுகிறது.

இவைகள் யாக்கோபின் உபத்திரவகாலத்திற்கு அவர்களை வழிநடத்தும். (எரேமி 30:7) ஆனால் அவர்கள் பிதாவினால் அதிகமாக நேசிக்கப்பட்டதினால் (ரோ 11:26-28) இவர்கள் அனைவரும் மீட்கப்படுவார்கள். இந்தச் சம்பவங்கள் இஸ்ரயேலில் நடக்க இன்னும் சில காலமுண்டு, ஆனாலும் அதின் துல்லியமான நேரங்களை அறியாதிருக்கிறோம்.

சுருக்கமாக, சொல்லப்போனால் மாம்சீக இஸ்ரயேலருக்கு இந்த முடிவான சம்பவங்கள் துவங்கும் முன் சபையின் கடைசி அங்கத்தினர்கள் இரண்டாம் திரையை கடந்திருப்பார்கள். ஆகவே சபை முடிவடையும் காரியங்களை குறித்தே நாம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

பரம அழைப்பின் கதவுகள் அடைபடும் நேரத்தில் தேவனோடு உடன்படிக்கை செய்தவர்கள் தங்களுடைய ஓட்டத்தை முடித்திருப்பார்கள். தலையும் சரீரமுமாகிய கிறிஸ்து, மகிமையின் சிங்காசனத்தில் வீற்றிருப்பார்.

யோசேப்பு எகிப்து முழுவதற்கும் அதிபதியாக ஆனதுபோல, தலையும் சரீரமுமாகிய கிறிஸ்து மகிமையின் சிங்காசனத்தில் வீற்றிருப்பார். இப்படியாக யோசேப்பின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள், இனி நிறைவேறக்கூடிய காரியங்களை மிக தெளிவான சித்திரமாக நம்முடைய கண்களுக்கு முன் நிறுத்தப்படுகிறது.

கெம்பீரமான ஒரு புதிய துவக்கம்

# தேவனுடைய இராஜ்யம்

"உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக" (மத்தேயு 6:10)



**Douglas Rawson**

இந்த உலகத்திலுள்ள வேத மாணவர்கள் அனைவரும் தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்த ஓர் அற்புதமான காட்சியைக் காண்கிறார்கள். கர்த்தர் கற்பித்த ஜெபத்தில் இந்தக் காட்சி ஒரு திறவு கோலைப் போல பதிந்திருக்கிறது. ஆயினும் துரதிஷ்டவசமாக உலகத்திலுள்ளவர்களால் இந்த ஒரு குறிப்பு கவனியாமல் விட்டு விடப் படுகிறது. "உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக" (மத் 6:10) என்று நம்முடைய ஆண்டவராம் இயேசு பரலோகத் தந்தையிடம் ஜெபித்தார். உண்மையில் இந்த மனுக்குலத்திற்கு இது ஒரு புதிய துவக்கமாக இருக்கும். இதில் பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் பதிவு செய்யப்பட்டுள்ள அநேகமான வாக்குத்தத்தங்கள் நிறைவேற்றப்படும்.

"அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்" (11பேதுரு 3:13) என்று வரக்கூடிய இராஜ்யத்தைக் குறித்து பேதுரு கூறினார். வருங்காலத்தில் நீதியுள்ள இராஜ்யத்திற்கு உண்டான வாக்குத்தத்தத்தை இந்த உலகம் மறந்து விட்டது. அதோடு கூட "உயிர்த்தெழுதல்" என்ற முக்கிய உபதேசத்தையும் விட்டு விட்டார்கள். என்ன நடந்தது?

கிறிஸ்துவ காலத்திலுள்ள துவக்க நூற்றாண்டுகளில் 1000 வருட ஆட்சியின் உபதேசம் சரியாக புரிந்து கொள்ளப்பட்டிருந்தது. அதில் கிறிஸ்துவும் அவருடைய பரிசுத்தவான்களும், இந்தப் பூமியை ஆயிர வருஷம் ஆட்சி செய்வார்கள் என்று நம்பினர். காலப் போக்கில் அப்போஸ்தலர்களின் நிரூபங்கள் மக்கள் மத்தியில் அதிகமாக காணப்படாமல் போன போது இந்த இராஜ்யத்தைக் குறித்த ஆழமான விபரங்களும் மறைந்து போனது. ஆனால் அடிப்படையான ஒரு கருத்து, ஜனங்களின் இருதயத்தில் நின்றது.

கிறிஸ்துவ உலகத்திற்கு இது ஒரு பொதுவான நம்பிக்கையாக காணப்பட்டது. ஏனெனில் ஆயிர வருட ஆட்சிக்கு முன் கிறிஸ்து வரவேண்டியதாய் இருக்கிறது. காலப் போக்கில் இந்தக் காரியம் கிறிஸ்தவர்களுக்கு அல்லது விசுவாசிகளுக்கு மட்டுமே பொருந்தும் என்று நம்பப்பட்டது. இந்தக் கோணத்தில் ஆயிர வருட ஆட்சி சுவிசேஷ யுகம் முடிவதற்கு முன்பாகவே துவங்கிவிட்டது என்று வேதம் கூறுகிறது. இந்தச் சுவிசேஷத்திற்கு தடையில்லாதிருப்பதற்கு சாத்தான் கட்டப்பட்டு கொண்டிருக்கிறான்.

இந்தக் கண்ணோட்டங்களில் வெவ்வேறு ஒழுங்குமுறைகள் இருக்கிறது. இன்னும் மூன்றாவது ஒரு கண்ணோட்டத்தில் பார்க்கும்போது (post-millennium) ஆயிரவருட ஆட்சிக்கு பின்பாக... இந்தப் பாடம் மேலும் குழப்பக் கூடியதாயிருக்கிறது. ஆனாலும் பழைய ஏற்பாட்டையும், புதிய ஏற்பாட்டையும் ஆதாரமாக கொண்ட ஆதி சபையின் உண்மையான உபதேசங்களை, நமக்கு சுட்டிக் காட்டிய பாஸ்டர் ரசலுக்கு நாம் மிகவும் கடமைப் பட்டுள்ளோம்.

### புதிய துவக்கம்

உண்மையில் அற்புதமான கிறிஸ்துவின் இராஜ்யத்தைக் குறித்து சொல்ல, வேதாகமத்தில் அநேக காரியங்கள் உண்டு. இந்த மனுக்குலம் ஒரு புதிய துவக்கத்தை சந்திக்கும். புதிய துவக்கத்தை விரும்பாதவர்கள் ஒருவர் உண்டா? இதைக் குறித்து வேதம் அநேக காரியங்களை போதிக்கிறது. அந்தப் புதிய துவக்கத்தில் மனுக்குலம் நீதியைக் கற்றுக் கொள்ளும். கடந்த காலத்தில் அவர்கள் பாவத்தையும் அதன் விளைவுகளையும் கற்று கொண்டனர். இந்த முறை அவர்கள் நீதியைக் கற்றுக்கொள்வார்கள்.

இந்தப் புதிய துவக்கத்தை, புதிய வானங்கள் மற்றும் புதிய பூமி என்று வேதாகமம் அழைக்கிறது. ஏசாயா, பேதுரு மற்றும் யோவான் இவ்வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்கள். "இதோ, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் சிருஷ்டிக்கிறேன்; முந்தினவைகள் இனி நினைக்கப்படுவதுமில்லை, மனதிலே தோன்றுவதுமில்லை"(ஏசா 65:17) என்று ஏசாயா கூறுகிறார்.

### பூமி ஒழிந்து போவதில்லை

இந்த வானங்களும் பூமியும் அழிக்கப்பட்டு, அதற்குப்பதிலாக புதிய வானங்களும் பூமியும் சிருஷ்டிக்கப்படும் என்று சிலர் எண்ணலாம். இந்த முழு அண்ட சராசரத்தையும் தேவன் அழித்து விடுவார் என்பதை கற்பனை செய்து கூடப் பார்க்க

முடியவில்லை. புதிய வானத்தையும் பூமியையும் பழையவைகளோடு ஒப்பிடுகையில் வேதாகமம் சில அடையாளமான காரியங்களை குறிப்பிடுவதாக காண்கிறோம். (ஆவிக்குரிய ஆட்சி, மனித சமுதாயம்) இந்தப் பூமியை நேசிக்க வேண்டாம் என்று இயேசு கூறுகின்றார். இங்கு சொல்லர்த்தமான பூமியை குறிப்பிடாமல் அதில் உள்ள சுய நலமான சமுதாயத்தை அவர் குறிப்பிடுகிறார்.

சொல்லர்த்தமான இந்த உலகம் நித்தியமாக நிலைத்திற்கும்."ஒரு சந்ததி போகிறது, மறு சந்ததி வருகிறது; பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கிறது" "வானங்களைச் சிருஷ்டித்துப் பூமியையும் வெறுமையாயிருக்கச் சிருஷ்டியாமல் அதைக் குடியிருப்புக்காகச் செய்து படைத்து,"(பிரச 1:4, ஏசா 45:18)

நிச்சயமாக பழைய வானங்களும் பூமியும் புதியவைகளாக மாற்றப்படும். இவைகள் நடக்கக்கூடிய விதத்தை பேதுரு விவரிக்கிறார். "கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்"(11பேதுரு 3:10)

அடையாளமாக சொல்லப்பட்ட இந்த அழிவின் சாம்பலிருந்து ஒரு புதிய நாள் ஒரு புதிய துவக்கத்தோடு துவங்கும். உண்மையில் இந்தப் புதிய நாள் துவங்குவதற்கு முன் அநேக பிரச்சனைகளும் , வேதனைகளும், உபத்திரவங் களும் இந்த உலகத்தில் காணப்படும்," ஏனெனில், உலகமுண்டானதுமுதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனி மேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்" (மத் 24:21) என்று இயேசு இந்தக் காலத்தைக் குறித்து குறிப்பிடுகிறார். அர்மெகதோன், மப்பும் மந்தாரமான நாள், யோசபாத்தின் பள்ளத்தாக்கு, கோபத்தின் நாள் என்றும் தீர்க்கதரிசிகள் சிலர் இந்தக் காலத்தைப் பற்றி குறிப்பிடுகிறார்கள். புதிய வானங்களும், புதிய பூமியும் ஸ்தாபிக்கப்படும் முன் இவைகள் நடைபெற வேண்டும். அப்பொழுது இந்த வானங்களும் பூமியும் கடந்து போகும்.

இக்காலத்து வானங்களும் பூமியும், மனுஷருக்கு வேதனைகளையும் , உபத்திரவத்தையும் மரணத்தையும் தருகிறது. ஆகவே, இவைகள் கடந்து சென்றால் மட்டுமே ஜனங்கள் நீதியைக் கற்றுக் கொள்ள முடியும். ஏனெனில், தெய்வீக வழிநடத்துதல் இல்லாமல், மனுஷன் தானாக நீதியுள்ளஆட்சியை ஸ்தாபிக்க முடியாது என்று வரலாறு மிக அருமையாக சித்தரிக்கிறது. நீதியை அடிப்படையாக கொண்டிருக்கும் புதிய தலைமை, ஒரு புதிய ஒழுங்கின் கீழ் செயல்படவேண்டும். இக்காரியங்கள் இன்றி எந்த அரசியலானாலும், மதமானாலும்,சமுதாயத்தினாலும், பொருளாதாரத்தினாலும் ஒன்றும் செய்ய இயலாது.

**புதிய வானங்கள் மற்றும் பூமியைக் குறித்த அடிப்படை சத்தியங்கள்**

சகல ஜாதிகளும் தேசங்களும் ஜனங்களும் அர்மெகதோனில் முற்றிலுமாக அழிக்கப்பட மாட்டார்கள் என்பதே அடிப்படை ஆறுதலூட்டும் சத்தியமாகும். "ஏனெனில், உலகமுண்டானதுமுதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனி மேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்"(செப் 3:8), உபத்திரவ காலத்திற்கு பின்,"அப்பொழுது ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, நான் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன்"(செப் 3:9) என்று செப்பனியா கூறுகிறார்.

**புதிய தலைவர்கள்**

புதிய வானங்களும் புதிய பூமியும் ஸ்தாபிக்கப்படும் போது இவைகளை சரியாக ஒழுங்குபடுத்த புதிய தலைவர்கள் இருக்க வேண்டும். மனுக்குலத்தின் மேல் புதிய ஆவிக்குரிய ஆட்சி நடைபெறும். இவர்கள் மிக வல்லமையாயும், நீதியுள்ளவர்களாயும் இருப்பார்கள், ஆனால் மனிதர்களின் கண்களுக்கு புலப்படாத பரலோக வழிநடத்துதலைக் கொடுப்பார்கள். நம்முடைய ஆண்டவராம் இயேசு கிறிஸ்து இதற்குரிய பொறுப்பாளியாகவும், இராஜாதி இராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் செயல்படுவார். அவர் ஆச்சரியமுள்ள ஆலோசனைக்காரராகவும், வல்லமை யுள்ள தேவனாகவும், நித்திய பிதாவாகவும் சமாதானத்தின் பிரபுவாகவும் இருப்பார் என்று ஏசாயா கூறுகிறார்."நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்" (ஏசா 9:6)"தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை; சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்.ஆண்டவர் யாக்கோபுக்கு ஒரு

வார்த்தையை அனுப்பினார்; அது இஸ்ரவேலின்மேல் இறங்கிற்று" என்று தொடர்ந்து ஏசாயா கூறுகிறார்.

இப்படிப்பட்ட அரசியலை இந்த உலகம் கண்டிருக்காது. இந்த உலகம் உண்மையில் இயேசுவை நேரடியாக பார்க்காவிட்டாலும், அவரே சகலத்தையும் பொறுப்பெடுத்து நடத்துகிறவர் என்று உணர்ந்து கொள்வார்கள். அவருடைய நியாயத்தீர்ப்புகளும் ஆலோசனைகளும் இந்தப் பூமியில் பல வகைகளில் செயல்படும்."என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை; கேடுசெய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்" (ஏசா 11:9) "என் ஆத்துமா இரவிலே உம்மை வாஞ்சிக்கிறது; எனக்குள் இருக்கிற என் ஆவியால் அதிகாலையிலும் உம்மைத் தேடுகிறேன்; உம்முடைய நியாயத்தீர்ப்புகள் பூமியிலே நடக்கும் போது பூச்சக்கரத்துக்குடிகள் நீதியைக் கற்றுக்கொள்வார்கள்" (ஏசா 26:9)

இந்தச் சுவிசேஷ யுகத்தில் நீடிய பொறுமையோடு, உபத்திரவங்களை சகித்து பலியின் ஜீவியத்தில் தங்களை ஒப்புக்கொடுத்து, கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக வளர்ச்சியடைந்து தங்களுடைய விசுவாசத்தை நிரூபித்தவர்கள் ஆண்டவரோடு ஆட்சி செய்வார்கள். இவர்கள் கிறிஸ்துவின் மணவாட்டிகள். இவர்கள் மட்டுமே இக்காலத்தில் தேவனுக்கு முழுமையாக கீழ்ப்படிந்து அவருடைய சித்தத்தை நிறைவேற்றுபவர்கள். சாத்தானுடைய இப்பிரபஞ்சத்தின் மத்தியில், மிக கடுமையான சூழ்நிலையில் இவர்கள் தேவ புத்திரர்களாக தங்களை நிரூபிக்கிறார்கள். ஆயினும் தேவன் இந்த முழு மனுக்குலத்திற்கும் இரட்சிப்பின் திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார். ஆகையால் நீதியுள்ள மனுக்குலம் இந்தப் புதிய யுகத்தில் தேவனுடைய இரட்சிப்பைப் பெறுவதற்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இந்த உலகத்தில் பிறந்த அநேகருக்கு நித்திய ஜீவனை பெறுவதற்கான முதல் வாய்ப்பு இதுவாகவே இருக்கும்.

ஆவிக்குரிய ஆட்சி வேதாகமத்தில் எவ்வாறு விவரிக்கப்படுகிறது ?

"இராஜாக்களும், ஆசாரியர்களும்" என்று ஒரு வகையில் குறிப்பிடப்படுகிறது. இயேசுவும் சபையும் இந்த மனுக்குலத்திற்கு கண்ணுக்குப் புலப்படாத இராஜாக்களும் ஆசாரியர்களுமாக இருப்பார்கள். இந்த உலகத்திற்கான சட்டத்திட்டங்களையும் ஒழுங்குகளையும் ஏற்படுத்தி, இராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும் செயல்படக் கூடிய இந்தச் சபை மீண்டும் இந்த உலகத்தை தேவனிடத்தில் வழிநடத்தும்.

"உண்மையுள்ள சாட்சியும், மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவரும், பூமியின்ராஜாக்களுக்கு அதிபதியுமாகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களறநம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்குமுன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக. ஆமென்"(வெளி 1:5,6) என்று யோவான் எழுதுகிறார்.

**முற்பிதாக்கள்**

இயேசுவும் சபையும் மனுக்குலத்திற்கு புலப்படாதிருந்தாலும் அவர்களுடைய இராஜ்யத்தில் கண்ணுக்கு தெரியக்கூடிய பிரதிநிதிகள் அமர்ந்திருப்பார்கள். தேவனுடைய இராஜ்யத்திற்கு இரண்டு பகுதிகள் உண்டு, ஒன்று பரலோகத்திற்குரிய பகுதி மற்றொன்று பூமிக்குரிய பகுதி.

இந்தப் பூமியின் மகா உபத்திரவ காலத்தின் முடிவில் அதாவது அர்மெகதோனின் முடிவில் இந்த இரண்டு பகுதிகளும் துவங்கும். அர்மெகதோனிலிருந்து இந்தப் புதிய துவக்கத்திற்கு மாறக் கூடிய காரியங்களைக் குறித்து மீகா விவரிக்கிறார். "இவரே சமாதான காரணர்; அசீரியன் நம்முடைய தேசத்திலே வரும் போதும், நம்முடைய அரண்மனைகளை மிதிக்கும்போதும், ஏழு மேய்ப்பரையும் மனுஷரில் எட்டு அதிபதிகளையும் அவனுக்கு விரோதமாக நிறுத்துவேன்" (மீகா 5:5) அதிபதிகளைக் குறித்தும் மீகா பேசியிருக்கிறார். பண்டைய காலத்து மத்திய கிழக்கு பகுதிகளில், இராஜாக்களை, ஜனங்களின் மேய்ப்பர் என்று கூறுவது வழக்கமாய் இருந்தது. ஆயிர வருட ஆட்சியில் இந்த உலகம் முழுவதையும் கிறிஸ்துவோடு கூட குறிப்பிடப்பட்டுள்ள இந்த ஏழு மேய்ப்பர்கள் ஆட்சி செய்வார்கள். "அதிபதிகள்" அல்லது பிரபுக்கள் பொதுவாக பழைய ஏற்பாட்டின் நீதிமான்கள் அல்லது முற்பிதாக்களுக்கு ஒப்பாக சொல்லப்படுகிறார்கள். (சங் 45:16)

பழைய ஏற்பாட்டு நீதிமான்கள் கிறிஸ்துவுக்கு முன் தேவன் மேல் முழு விசுவாசம் வைத்தவர்கள். ஆபேல், ஏனோக்கு, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, தீர்க்கதரிசிகள் மற்றும் பலர்... இவர்கள் இந்த உலகத்தில் வாழ்வதற்கு இந்த உலகம் அவர்களுக்கு பாத்திரமாயிருக்கவில்லை என்று எபிரெயர் ஆசிரியர் கூறுகிறார். (எபி 11:38) மேலும் இவர்கள் மேன்மையான உயிர்த்தெழுதலை அடைவார்கள் என்று சொல்லப்படுகிறது. (எபி 11:35)

ஆகையால் அவர்கள் விசுவாசத்திற்கு பாத்திரவான்களாய் இருந்த படியினால் பழங்காலத்தில் வாழ்ந்த விசுவாசிகளாகிய இவர்களை முற்பிதாக்கள் அல்லது பழைய ஏற்பாட்டு நீதிமான்கள் என்று நாம் அழைக்கிறோம்.

**இஸ்ரயேலின் பங்கு**

தேவனுடைய இராஜ்யத்தின் முக்கிய அம்சமாக இஸ்ரயேல் செயலாற்றும். முன்னதாகவே இஸ்ரயேலர்கள் தங்களுடைய தேசத்திற்கு திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, வல்லமையுள்ள ஒரு தேசமாக வளர்ந்து கொண்டிருக்கிறார்கள். இஸ்ரயேலை சுற்றி இருக்கும் சகல தேசங்களும் பொறாமை கொண்டு விரோதிப்பார்கள். "எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணச் சகல ஜாதிகளையும் கூட்டுவேன்; நகரம் பிடிக்கப்படும்; வீடுகள் கொள்ளையாகும்; ஸ்திரீகள் அவமானப்படுவார்கள்; நகரத்தாரில் பாதி மனுஷர் சிறைப்பட்டுப்போவார்கள்; மீதியான ஜனமோ நகரத்தை விட்டு அறுப்புண்டுபோவதில்லை. கர்த்தர் புறப்பட்டு, யுத்தநாளிலே போராடுவதுபோல் அந்த ஜாதிகளோடே போராடுவார்"(சகரி 14:2,3) என்ற அச்சூழ்நிலைகளைப்பற்றி சகரியா விவரிக்கிறார்.

இயேசுவின் தேசத்தின் சார்பாக தேவன் பெற்ற வெற்றி அநேக நற்பலன்களை விளைவிக்கும் இதன் வழியாக இந்த முழு உலகமும் ஆசீர்வதிக்கப்படுவதற்கு இஸ்ரயேல் ஆயத்தப்படும். அமெரிக்காவிலிருந்தும், வாஷிங்டனிலிருந்தும் ஆசீர்வாதம் வராது. எருசலேமின் வழியாக தேவன் அனைவரையும் ஆசீர்வதிப்பார். உலகத்திலுள்ள அனைத்து ஜனங்களும் இஸ்ரயேலுக்கு சென்று தங்களுடைய பரம பிதாவைக் குறித்து, கற்று அறிந்து கொள்வார்கள். "அந்நாட்களில் பலவித பாஷைக்காரராகிய புறஜாதியாரில் பத்து மனுஷர் ஒரு யூதனுடைய வஸ்திரத்தொங்கலைப் பிடித்துக்கொண்டு: தேவன் உங்களோடே இருக்கிறார் என்று கேள்விப்பட்டோம்; ஆகையால் உங்களோடேகூடப் போவோம் என்று சொல்லி, அவனைப் பற்றிக்கொள்வார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றார்" (சகரி 8:23)"திரளான ஜாதிகள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்" (மீகா 4:2)

இது ஒரு தனித்துவமான சூழ்நிலை இஸ்ரயேல் தன்னை தாழ்த்தும். உலகத்தின் ஜனங்களையும் சகல ஜாதிகளையும் இவர்கள் ஜெயித்ததினால் இவர்கள் மன மேட்டிமை கொள்ளாமல் மனுக்குலத்திற்கு உதவி செய்வதற்கான முழுமையான அன்பை வெளிப்படுத்துவார்கள். ஏனெனில் மற்றவர்களைக் காட்டிலும் அவர்கள் அதிகமாய் பாவம் செய்வதை முழுமையாக உணர்வார்கள். உண்மையில் தங்களுடைய பாவங்களை நினைத்து துக்கித்து அழுவார்கள் (சகரியா 12:10-14) இவர்களுக்குள் இருக்கும் மனத்தாழ்மையும், தேவனிடத்தில் திரும்பக்கூடிய ஆர்வமும் மற்றும் குற்றம் உணர்ந்த இருதயம் - இவையனைத்தும் இந்தப் பூமிக்கு வெளிச்சத்தையும், ஆசீர்வாதங்களைக் கொண்டு வரக்கூடிய வழியாகவும் இருக்கும். "சம்பவிப்பதென்னவென்றால்: யூதா வம்சத்தாரே, இஸ்ரவேல் வம்சத்தாரே, நீங்கள் புறஜாதிகளுக்குள்ளே சாபமாயிருந்ததுபோலவே, ஆசீர்வாதமாயிருக்கும்படி நான் உங்களை இரட்சிப்பேன்; பயப்படாதேயுங்கள், உங்கள் கைகள் திடப்படக்கடவது"(சகரி 8:13)

**செயல் முறையும் அதன் இலக்கும்**

இந்த முழு உலகத்தையும் மனிதன் பூரண நிலைக்கு வளர்ச்சி அடைந்து, தேவனோடு மீண்டும் இசைந்து ஜீவிப்பதே - ஆயிர வருட ஆட்சியில் இறுதி இலக்கு என்பதை வேதமாணவர்கள் நன்கு புரிந்துக்கொண்டு போதிக்கிறார்கள். தேவனுடைய இராஜ்யத்தில் மனப்பூர்வமாய் கீழ்ப்படியும் ஒவ்வொரு நபருக்கும் இது ஒரு மிகப்பெரிய சிலாக்கியமாகும். "உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும்"(அப் 3:21) என்று பேதுரு கிறிஸ்துவைக் குறித்து பேசினார். தொலைந்த ஏதோ ஒன்றை திரும்பிக் கொடுப்பதே தேவனுடைய முக்கிய நோக்கம் என்று இதிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம், இது என்னவாக இருக்கும் ? மனிதன் துவக்கத்தில் பூரண நிலையில் படைக்கப்பட்டார். ஆனால் ஆதாமின் கீழப்படியாமையினால் அந்தப் பரிபூரணத்தை தொலைத்து விட்டார். தொலைந்து போன பூரண நிலையை மனுஷனுக்கு திரும்ப கொடுத்து தேவனுடைய பூமிக்குரிய புத்திரர்களாக மாற்றுவதே இதன் நோக்கமாகும்.

நமக்காக ஏசாயா தீர்க்கதரிசி ஓர் அழகான சித்திரத்தை வண்ணம் தீட்டுகிறார். "அப்பொழுது ஓனாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும், புலி வெள்ளாட்டுக்குட்டியோடே படுத்துக்கொள்ளும்;

கன்றுக்குட்டியும், பாலசிங்கமும், காளையும், ஒருமித்திருக்கும்; ஒரு சிறு பையன் அவைகளை நடத்துவான்""என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை; கேடுசெய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்"(ஏசா 11:6, 9)

இக்காரியங்கள் அனைத்தும் படிப்படியாக, இந்த ஆயிர வருடத்தில் நிறைவடையும். இந்தக் காலத்துவக்கத்திலும் இன்னும் உபத்திரவ காலத்திற்கு பின்னும் இந்தப் புதிய ஒழுங்குகள் முழுமையாக தேவனோடு இசைந்து இருக்காது அப்போது என்ன நடக்கும்?

தேவனுடைய ஆசீர்வாதங்களை பெறுவதற்கு சகல ஜாதிகளும் இஸ்ரயேலின் சொல்லை கேட்க வேண்டியதாயிருக்கும் என்று சகரியா கூறுகிறார். "அப்பொழுது பூமியின் வம்சங்களில் சேனைகளின் கர்த்தராகிய ராஜாவைத் தொழுதுகொள்ள எருசலேமுக்கு வராதவர்கள் எவர்களோ அவர்கள்மேல் மழை வருஷிப்பதில்லை" சகரியா 14:17 மழை ஆசீர்வாதங்களை அடையாளப்படுத்தும்.

ஆயினும் இந்த உலகத்தை சரியான பாதையில் கொண்டு செல்வதற்கு தேவன் அநேக ஆசீர்வாதங்களினால் அவர்களை ஊக்குவிப்பார். ஏசாயா 25:6-9, எசேக் 36:26-27 யோவேல் 2:28) கீழ்ப்படிதல் உள்ளவர்களுக்கும் நீதியுள்ளவர்களுக்கும் அற்புதமாக பலனளிக்கப்படும். தேவனுடைய இராஜ்யத்தில் இயேசுவும் சபையும் இணைந்து - கீழ்ப்படியாதவர்களையும், வணங்கா கழுத்துள்ளவர்களையும் மிக ஞானமாக செவ்வைப்படுத்துவார்கள். நீதியை கற்றுக் கொள்ள மறுத்து, சாத்தானைப் போல துணிகரமாய் எதிர்த்து நிற்கக்கூடிய ஜனங்கள் நித்திய ஜீவனை பெறாமல் இரண்டாம் மரணத்தைப் பெறுவார்கள்.

இவைகளைக் குறித்து அடையாளமாக வெளிப்படுத்ததுதலின் புஸ்தகம் பேசுகிறது. "பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்"( வெளி 21:8) இந்த வசனத்தில் அக்கினி என்று குறிப்பிடப்படும் வார்த்தை தேவ பக்தி இல்லாதவர்களின் முழுமையான அல்லது முற்றிலுமான அழிவை அடையாளப்படுத்துகிறது.

**உயிர்த்தெழுதல் மற்றும் மரணத்தை ஜெயமாக விழுங்குதல்**

மரித்தோர் உயிர்த்தெழுவார்கள் என்ற உண்மை எவ்வளவு அற்புதமாய் இருக்கிறது. ஆதி சபைகளில் போதிக்கப்பட்ட உயிர்த்தெழுதலைப் பற்றிய உண்மையான போதனைகள் இன்று அநேக சபைகளில் மிகக் குறைவாக காணப்படுகிறது.

ஆயினும் வேதாகம உபதேசங்களில் உயிர்த்தெழுதலின் உபதேசமே மிக சிறந்ததாகும். யோவான் எழுதின சுவிசேஷத்தில் நம்முடைய ஆண்டவர் நடக்கக்கூடிய காரியங்களை, இரண்டே வசனத்தில் கூறியுள்ளார். "இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்" (யோவான் 5:28,29) இந்தப் பூமியிலுள்ள அனைவரும் உயிர்த்தெழுவது மட்டுமல்ல, அவர்கள் கீழப்படிதலோடு இருந்தால் இந்தப் பூமியின் மேல் நித்தியமாக ஜீவிக்கக்கூடிய ஒரு வாய்ப்பையும் பெறுவார்கள். "அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார்; கர்த்தராகிய தேவன் எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைத்து, தமது ஜனத்தின் நிந்தையைப் பூமியிலிராதபடிக்கு முற்றிலும் நீக்கிவிடுவார்; கர்த்தரே இதைச் சொன்னார்" (ஏசாயா 25:8), தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்து இன்னும் அதிகமான விவரங்களை வசனங்கள் போதிக்கிறது. இந்த இராஜ்யம் அற்புதமான ஆசீர்வாதங்களையும், வாய்ப்புகளையும் நியாயத்தீர்ப்புகளையும் கொண்டுள்ளது.

ஆகவே நாம் இந்தப் பூமியின் மேல் தேவனுடைய இராஜ்யம் பகிரங்கமாக ஸ்தாபிக்கப்பட்டு, அவருடைய சித்தம் செய்யப்படுவதற்கு நாம் அனைவரும் தொடர்ந்து ஜெபிப்போம். அனைவரும் சந்தோஷம் சமாதானத் தோடு ஜீவிப்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. இதுவே மனுக்குலத்திற்கான ஒரு புதிய துவக்கம்.

### தீர்க்கதரிசனத்தில் இன்று

# இறுதி நாட்களில் மதம்

"அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய்த் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள் தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி, தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டு வந்தார்." (அப் 2:46-47)

கிறிஸ்தவர்களைப் போலவே புற இனத்தாரும் எந்த முறைகளையும் அனுசரிக்காமல் யூத நம்பிக்கையாளரைப் போல் தேவனை தொழுது கொண்டார்கள். இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைப் பரப்புவது மட்டுமே அவர்களுடைய முக்கியமான எண்ணம். "அதென்னவெனில் புறஜாதிகள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரருமாய், ஒரே சரீரத்திற்குள்ளானவர்களுமாய், கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்தத்துக்கு உடன்பங்காளிகளுமாயிருக்கிறார்களென்கிற இந்த இரகசியத்தை அவர் எனக்கு வெளிப்படுத்தி அறிவித்தார். " (எபே 3:3)

ரோம பேரரசர் கான்ஸ்டான்டைன் கிபி 312 ல் மேற்கு பேரரசை வெற்றி கண்டபோது அதை கிறிஸ்தவர்களின் கடவுளுக்கு அர்ப்பணித்தார். மிலன் என்னும் இடத்தில் தமது பேரரசு எல்லா மதங்களையும் சகித்து கொள்ளும் என்றும் வாக்களித்து அவர்களது சட்டத்தில் கிறிஸ்தவ நம்பிக்கைகள் மற்றும் பழக்க வழக்கங்களைப் புகுத்தினார். கான்ஸ்டான்டைன் கிறிஸ்தவ ஆலயங்களுக்கு பணமும், நிலமும் கொடுத்தார். அவர்களுடைய சொத்துக்களுக்கெல்லாம் வரி விலக்கு செய்தார், மேலும் அந்தக் குருக்களுக்கு அரசியலில் நல்ல பதவிகளும் கொடுத்தார். ஆறாம் நூற்றாண்டிற்குள் பல நிலங்களை பரிசாக பெற்ற கத்தோலிக்க திருச்சபை, மேற்கு நாடுகளிலேயே மிகப்பெரிய ஜமீனாக இருந்தது. அரசியலில் பெரிய பதவிகளை வகித்ததால் அந்தத் திருச்சபை ஆசிரியர்கள் அரசு குடும்பத்தினரை போல் தங்கள் உடைகள் மற்றும் அனைத்து பழக்கங்களை மாற்றிக் கொள்ள தூண்டப் பட்டார்கள். கிறிஸ்தவ அமைப்புகளும் பேரரசை போல் எல்லாவற்றிலும் உருமாறியது. திருச்சபை ஆசிரியர்கள், அரசியலில் பல முக்கியமான நகரங்களில் அதிகாரி ஆனார்கள். ஆயிரம் கால அரசாட்சியில் எல்லோரும் மீட்பு என்ற ஓர் ஒளிமையான நற்செய்தியை விட்டு விட்டு இன்றைய உலகம் பதவிகளை காத்துகொள்வதில் மிக மும்முரமாக உள்ளது.

#### கிறிஸ்துவத்தின் மாறிக் கொண்டிருக்கும் முகம்

அப்போஸ்தலர் பணியில் கூறப்படும் ஆதிகால விசுவாசிகளுக்கும் இன்றைய கிறிஸ்துவ மண்டலத்திற்கும் மிகக்குறைந்த சம்பந்தமே உள்ளது. இன்றைய நிலைமையை யோசித்து பார்ப்போம். மதம் அமைப்புகள் மற்றும் விசுவாச குழுக்கள் ஏறக்குறைய 40 அமைப்பு இருப்பதாக Religious Tolerance என்ற அமைப்பு கூறுகிறது. அமெரிக்காவில் மதத்திற்குரிய கலைக்களஞ்சியம் ஒன்று வடக்கு அமெரிக்காவில் மட்டும் 1200 கிறிஸ்துவ அமைப்புகள் உள்ளன என்று கூறுகிறது. திருச்சபைகள் மற்றும் மதங்கள் குறித்த ஆய்வில் உலகளவில் கிறிஸ்துவ மதங்கள் மட்டும் 34,000 அமைப்புகள் உள்ளன என்று கூறுகிறது.

இந்த 10 ஆண்டுகளாக ஒருங்கிணைந்த கிறிஸ்துவ அமைப்புகள் குறைய தொடங்கி விட்டன. அதில் கூறிவரும் போதனைகள் கிறிஸ்துவம் அல்லாத போதனைகளோடு கலந்து வருகின்றது.

*இந்த அக்டோபர் மாதம் தேசியளவில் உள்ள ரேடியோ ஒன்று கூறிய செய்தியில் ஐக்கிய நாட்டை சேர்ந்த பலர் கத்தோலிக்க திருச்சபையை விட்டு விலகி வருவதாக கூறினது

* அக்டோபர் மாதம் நடந்த உலகளாவிய கிறிஸ்துவ அமைப்பில் இங்கிலாந்து திருச்சபையின் ஒரு கிளை, அதிகாரப்பூர்வ அரசின் மதம் ஒன்று தேவை இல்லாதது என்று தள்ளிவைத்தார்கள்.

*1885 உருவான Claremount School of Theology, Southern California's academic of Kewish Religion and the Islamic center of Southern California அண்மையில் ஒருவரோடு ஒருவர் பங்குதாரர் ஆகி, தெய்வீகத்திற்குரிய படிப்பு, எபிரெயர்களின் படிப்புகள் மற்றும் இஸ்லாமியர்களுக்குரிய ஆலோசனையில் புதுக் கலை பட்டத்திற்குரிய படிப்பை துவங்கியுள்ளார்கள்.

*சான் பிரான்ஸில் உள்ள லூத்திரன் சபையினர், ஐசிஸ் என்னும் தேவதையை வணங்கும் ஒரு பெண் குருவின் மூலம் தியான வகுப்புகளைத் துவங்கியுள்ளனர்.

*போப் பெனிடிக் 16, புத்த சாமியார்கள், இஸ்லாமிய வல்லுநர்கள் மற்றும் யோருபா தலைவர்களுடன் இணைந்து உலகளாவிய சமாதானத்திற்கு அழைப்பு விடுத்திருக்கிறார். பல விதமான விசுவாசத்தில் உள்ள 300தலைவர்கள், மற்றும் புத்த சாமியார்களை போப் சீனாவிலிருந்து வரவேற்றுள்ளார் .

#### சீரமைக்கப்பட்ட மதத்தின் சரிவு

பர்னா அமைப்பின் ஆராய்ச்சியின் படி 18-23 வயதுள்ள வாலிபர்கள் கிறிஸ்துவ போதனைகள் மற்றும் அதன் ஒருங்கிணைக்கப்பட்ட விசுவாசங்களை முற்றிலும் ஒதுக்கி விடுகிறார்கள் என்று கூறுகிறார்கள். இதில் பாதி

பேர் தங்களை எந்த ஒரு மதத்தையும் சேர்ந்தவர்களாக அடையாளம் காட்டி கொள்வதில்லை. மற்றொரு பர்னாவின் அமைப்பினர் மேலே கூறப்பட்டவர்களில் 1% பேர் இந்த உலகத்தை வேதத்திற்குரிய ஒரு கண்ணோட்டத்தோடு பார்ப்பதில்லை. வேதத்தின்படி உலகப் பார்வையை அவர்கள் வர்ணிக்கையில் -

1. முற்றிலும் உண்மையான தத்துவங்கள் இருக்கின்றன. 2. வேதம் கூறும் எல்லா கொள்கைகளும் மிகச் சரியாக உள்ளது. 3. சாத்தான் ஓர் உண்மையான ஜந்து, அவன் வெறும் வல்லமையின் ஓர் அடையாளமாக இருக்க முடியாது. 4. நல்லவனாக இருந்தோ, நல்ல காரியங்கள் செய்வதாலோ ஒரு மனிதனால் பரலோகம் செல்ல இயலாது. 5. இயேசு கிறிஸ்து இந்தப் பூமியில் வாழ்ந்த நாட்களில் ஒரு பாவம் இல்லா வாழ்க்கை வாழ்ந்தார்.

6. எல்லாம் தெரிந்தவர், எல்லா வல்லமையுடையவர், இந்தப் பூமியை படைத்தவர் தேவன் என்றும், அவர் இன்னும் தொடர்ந்து இந்தப் பூமியை ஆண்டு வருகிறார்.

1872 கணக்கெடுப்பின்படி பிரேசிலில் பரம்பரை கத்தோலிக்கர்கள் நிறைந்திருந்தார்கள். ஆனால் தற்சமயம் வெறும் 68 % மக்களே இருக்கிறார்கள்.

**யேகோவா தேவன் உலகை மாற்ற முயற்சிக்கவில்லை**

"அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே!உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்." (மத் 7:22-23)

இயேசு கிறிஸ்துவின் இறப்பு மற்றும் உயிர்த்தெழுந்தபின், குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஜனங்களை தேவன் தேடிக்கொண்டிருக்கிறார். இயேசு கிறிஸ்து இவர்களை சிறு மந்தை என்று அழைக்கிறார். ". பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்" (லூக்12:32)கிறிஸ்துவ வரலாற்றின் எல்லா யுகத்திற்கு இந்தச் சிறு மந்தைக்கான அழைப்பு கொடுக்கப்படுகிறது. மனுக்குலத்தின் எல்லா தரத்தினருக்கும் இந்த வாய்ப்பும் கிடைக்கும். இந்த அழைப்பை ஏற்றுக்கொள்கிறவர்களை, வேதாகமத்தில் "எக்லீஷியா" என்ற கிரேக்க வார்த்தையின் படி அழைக்கப்படுகிறார்கள். "அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற" (1கொரி 1:2) இவர்கள் ஆவிக்குரிய புதிய நிலையில் உயிர்த்தெழுப்பப்படுகிறார்கள். (யோவான் 3:1-5) இவர்கள் நம்முடைய ஆண்டவரோடு அவருடைய இராஜ்யத்தில் பூமியில் உள்ள முழு மனுக்குலத்தையும் ஆசீர்வதிப்பதற்கு வருவார்கள்.( 1யோவான் 3:2)

ஆயிரவருட அரசாட்சியில் கூட்டுத் திருச்சபையின் முதன்மையான வேலைகளை பவுல் கூறுகிறார். "பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா? உலகம் உங்களால் நியாயந்தீர்க்கப்படுவதாயிருக்க, அற்ப வழக்குகளைத் தீர்க்க நீங்கள் அபாத்திரரா?"(1கொரி 6:2) இயேசு கிறிஸ்துவின் இந்த அழைப்பை ஏற்று அவரை பின்பற்றுபவர்கள், அவருடைய அரசாட்சியில் அவரோடு கூட இராஜ்யம் பண்ணுவார்கள். அதே நேரத்தில் இயேசு கிறிஸ்துவின் மரணத்தால் கிடைத்த ஆதாயங்களை இந்தப் பூமியில் உள்ள முழு மனுக்குலத்திற்கும் அளிக்கப்படும். "நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்."(ரோமர் 8:17)

"அன்றியும், நான் சிங்காசனங்களைக் கண்டேன்; அவைகளின்மேல் உட்கார்ந்தார்கள்; நியாயத்தீர்ப்புக் கொடுக்கும்படி அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. இயேசுவைப்பற்றிய சாட்சியினிமித்தமும் தேவனுடைய வசனத்தினிமித்தமும் சிரச்சேதம்பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும், மிருகத்தையாவது அதின் சொரூபத்தையாவது வணங்காமலும் தங்கள் நெற்றியிலும் தங்கள் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளாமலும் இருந்தவர்களையும் கண்டேன். அவர்கள் உயிர்த்துக் கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள்."( வெளி 20:4)

இந்த அறுவடை காலத்தில் தேவனுடைய வேலையை செய்ய ஆர்வமாய் இருப்பவர்கள் பல விதமான அமைப்புகளிலிருந்து வெளிவருமாறு அழைப்பு விடுகிறார்.

"என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்." (வெளி 18:4) வாருங்கள் என்ற தேவனுடைய சத்தத்தை கேட்டு கீழ்ப்படிந்து வெளியே வருபவர்கள் யேகோவா தேவனோடு நெருக்கமான உறவு கொள்ளும் பரிசை பெறுவார்கள். "உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான். "(சங்கீ 91:1) இந்த உலகின் எல்லா மதங்களும் நொறுங்கி கொண்டிருந்தாலும், நம்மையே நாம் அவருக்கு முழுவதும், ஒப்புக்கொடுத்து அவரை பின்பற்றினால் நிலையான ஒரு வாழ்வு பெறுவோம். அப்பொழுது ". நான் கர்த்தரை நோக்கி: நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன்.."(சங் 91:2 )